133
010

# மணிவிழா மலர்



ஆர். என். லோகேந்திரலிங்கம்

(மலையன்பன்)

2013

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/loganlogendaling00unse

உதயன்

UTHAYAN

## ஆர். என். லோகேந்திரலிங்கம்

# மணிவிழா

ரொரன்ரோ - கனடா

09-06-2013

மணிவிழாக் குழு



# வருக மலருள்,

# மக்கள் நண்பனை வாழ்த்த!

மக்கள் நண்பன் லோகேந்திரலிங்கம் அவர்களின் அகவை அறுபதை மகிழ்ந்து கொண்டாடி, அவர் உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தியுள்ள நற்தாக்கத்தினை பதிவுசெய்ய நண்பர்கள் சிலர் சிந்தித்தோம். சிந்தனை செயலாக்கப்பட்ட பொழுது பலரிடமுமிருந்து கிடைத்த வரவேற்பினால் குழுவினருக்கு ஏற்பட்ட வியப்பை எவ்விதம் விபரிக்க முடியும்.

மலர் ஆசிரியராக என்னைப் பணித்தனர். என் இப்பணி செய்வதற்கு லோகன் தொட்ட, நட்புப்பூண்ட நல்லுள்ளங்களை தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கவிஞர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்கள், பேராசிரியர்கள், அரசியல் தலைவர்கள், வர்த்தகப் பெருமக்கள், தொழில்சார் வல்லுனர்கள், கல்வி நிலையங்கள் - இவர்களுடன் மதகுருக்கள் ஆகியோருடனும் இவரூடாக தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

மேற்கூறிய சான்றோர்களின் கவிதைகள், கட்டுரைகள், வாழ்த்துக்கள் லோகேந்திரலிங்கம் அவர்கள் நற்பண்புள்ள சாதனையாளர் என்பதை ஐயமின்றி உறுதிப்படுத்துகின்றன. "Logan was not born great; he did not achieve greatness; but greatness is thrust upon him."

நான் பழத்தை சுவைத்த பின் கொட்டையை உங்களிடம் கொடுப்பதை விட பழத்தையே உங்கள் கையில் கொடுக்கிறேன். தவறாமல் சுவையுங்கள்.

லோகனின் மணிவிழா மலர் சிறப்பாக அமைவதற்கு சகோதரி செல்வியின் (JJ Printers) உழைப்பு கனமானது. அவரது ஆற்றலைக் கண்டு பெருமிதமடைகிறேன். அவருக்கு மணிவிழா குழு சார்பில் எனது நன்றி.

திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் அவரது மனைவி, மக்கள், மருகர், பேரர்களுடன் சீரும் சிறப்புடன் வாழ்ந்து தொடர்ந்து புகழுடன் நற்பணிகள் ஆற்ற மணிவிழா குழுவின் மனமுவர்ந்த வாழ்த்துக்கள்.

**மனுவல் ஜேசுதாசன்**
சட்டத்தரணி
மணிவிழா குழு மலர் ஆசிரியர்

Ontario

*On behalf of the Government of Ontario,*
*I am delighted to extend my heartfelt congratulations to*

# LOGAN LOGENDRALINGAM

*on the occasion of your*

## 60th Birthday

*Logan, it gives me great pleasure to join in the well-deserved tributes being paid to you as you mark this special milestone and take time to reflect upon your many accomplishments. Congratulations!*

*Today you celebrate not only 60 years of living life right, but also the meaningful difference you have made in many lives. Your birthday is an ideal occasion to look back with pride on your achievements and contributions to your community and the province of Ontario.*

*As you celebrate in the company of your family and friends, I offer you my warmest wishes for a wonderful and memorable day, and for many more years of happiness, health and personal fulfilment.*

Legislative Building, Toronto
May 23, 2013

**Kathleen Wynne**
**Premier**

Minister of Citizenship and Immigration

Ministre de la Citoyenneté et de l'Immigration

Ottawa, Canada K1A 1L1

*On behalf of*

*The Right Honourable*
*Stephen Harper,*
*Prime Minister of Canada*

*I am pleased to congratulate and present this certificate to*

***Mr. R. N. Logendralingam***

*Chief Editor of "Uthayan" Tamil Newspaper*

*On the Occasion of Your 60th Birthday*

*In recognition of your contributions to Canada's successful pluralism and your tireless support for Canada's diverse communities through the "Uthayan" Tamil Newspaper. By sharing the traditions of the Tamil culture with all Canadians, the diverse composition of our nation is strengthened. Thank you for your meaningful contributions to our great country over the course of so many years and please accept my best wishes for the future.*

*Presented in celebration,*
*Markham, ON*

*The Honourable Jason Kenney, PC, MP*
*Minister of Citizenship, Immigration and Multiculturalism*

Canada

House of Commons




***Hon. Jim Karygiannis***
*Member of Parliament*
*Scarborough-Agincourt*

***Ottawa Office***
*House of Commons*
*231West Block*
*Ottawa, Ontario*
*K1A 0A6*
*Tel: 613 992 4501*
*Fax: 613 995 1612*

***Constituency Office***
*3850 Finch Ave. E.*
*Suite 206*
*Scarborough, Ontario*
*M1T 3T6*
*Tel: 416 321 5454*
*Fax: 416 321 5456*

***E-Mail***
*jim@karygiannismp.com*

***Website***
*www.karygiannismp.com*


June 2013

It is with great pleasure that I join with his family and friends in celebrating the 60th birthday of Mr. Logendralingam, known popularly as Logan.

Since his arrival in Canada in the 1990's Logan has been instrumental in the development of high-quality, comprehensive Tamil media content. His publication, the Tamil weekly Uthayan newspaper, is free of charge and provides Tamil Canadians with news and content from Canada and around the word. It is also a forum for creative writing and the exchange of information and ideas for seasoned and aspiring writers alike, which helps bring the community closer together.

During the last 14 years, Uthayan has grown into the foremost among South Asian publications in Canada. It is this growth and commitment to quality that has earned Uthayan the "Best Newspaper of the Year" award in 2005 from the Ethnic Press and Media Council of Canada, as well as the "Best Editorial" award from the Lieutenant Governor of Ontario in 2010.

An embodiment of the mantra "service above self", Logan has also been a strong and active member within the community. He has been active in a number of philanthropic activities both locally in Canada and internationally. In Canada, he has helped new Tamil Canadians settle into their new homes through economic and social guidance, as well as acting as a liaison between the community and political leaders.

Logan's dedicated social service has extended overseas to Sri Lanka, where he has helped raise funds for low-income university students. He has also contributed to relief efforts in other developing nations as the President of the Toronto Voice of Humanity. He has also been instrumental in Canadian activism with respect to the humanitarian crisis in Sri Lanka.

Mr. Logendralingam's achievements are too many to name here. Through his work, he has helped strengthen the Tamil Canadian community through literature and social service. He has given generously of himself, and contributed to the development of regions undergoing humanitarian and economic crises. Most of all, he has encouraged and supported writers and other intellectuals in the community, leaving a legacy which will be able to sustain his efforts for many years to come.


As the Liberal Critic for Multiculturalism and as a personal friend, it is my deep pleasure to see someone so committed to promoting art, literature, education, and inter-cultural awareness. I wish him many happy returns, and the best of success for the future.

Sincerely,

James Karygiannis

Hon. Jim Karygiannis, P.C., M.P.
Scarborough-Agincourt

House of Commons



23 May 2013

**Rathika Sitsabaiesan**
Member of Parliament for Scarborough-Rouge River

## A Personal Message from MP Rathika Sitsabaiesan

Dear Mr. R. N. Logendralingam,

It is with pleasure to extend my warmest greetings on the occasion of your 60th birthday.

I would like to show my appreciation for your many contributions to the community and to Canadian Society. As the Editor-in-Chief for Uthayan, you and your team have enabled communication among Tamils at both the local and international levels, disseminating knowledge while providing a forum for creative writing and community development. You help build relationships among Tamils from many backgrounds and walks of life.

On this special day of celebration, may your birthday be filled with happiness, laughter and prosperity!

Sincerely,

MP

Rathika Sitsabaiesan, Member of Parliament

Scarborough-Rouge River

**House of Commons**
719 Confederation Building
House of Commons
Ottawa ON
K1A 0A6
Tel: 613-996-9681
Fax: 613-996-6643

**Constituency**
8130 Sheppard Ave. E,
Suite 104
Toronto, ON
M1B 3W3
Tel: 416-298-4224
Fax: 416-298-6035
Toll Free: 1-866-871-4676

**Rathika.Sitsabaiesan@parl.gc.ca**

*On behalf of the Government of Canada*
*Your Member of Parliament for Don Valley East,*
*Congratulations and Best Wishes to*

# R. N. Logendralingam

*On celebrating your $60^{th}$ Birthday on*

*May $23^{rd}$, 2013*

*The warmest of wishes,*
*may your birthday be filled with happiness*

Joe Daniel

*Joe Daniel, M.P*
*Don Valley East*

Congratulations and sincere best wishes to:

# LOGAN LOGENDRALINGAM

On the occasion of your

# 60th BIRTHDAY

**Thursday, May 23rd, 2013**

On behalf of all Ontarians, I am pleased to take this opportunity to wish you a very happy birthday, and to offer you my sincere appreciation for the contributions that you have made to our great province.

Thanks as well for the extraordinary leadership that you have provided to your community over the years. Your efforts have not gone unnoticed.

May you have a wonderful celebration surrounded by your friends and family!

Michael Coteau, MPP
Don Valley East
May 23, 2013

# Mr. Logan Logendralingam

A birthday is the celebration of the gift of life, joys-great and small, kindnesses given and received, family, close friends and all the sweet blessings you have known.

Congratulations on celebrating 60 glorious years of a life journey that has given you strength, taught you valuable lessons, blessed you with family and friends, embraced your amazing grace and blossomed intensely with the love and comfort you shared with people you have met along your life's beautiful path.

Today, may the love and light of family and friends surround you; warm memories cheer you, and may happiness fill your heart always.

## Happy 60th Birthday!

**SOO WONG, MPP**

SCARBOROUGH-AGINCOURT

May 23, 2013

***Brad Duguid, MPP***
*and the Legislature of Ontario*
*extend warm congratulations to you,*

# *Logan Logendralingam*

*on the occasion of your*

***60th Birthday***


*As you mark this special*
*milestone in your life and*
*reflect upon your accomplishments,*
*I wish you a most enjoyable day.*

*Legislative Assembly of Ontario, Toronto*
*May 23, 2013*

Brad Duguid

***Brad Duguid, MPP***
***Scarborough Centre***

MARKHAM



June 5, 2013

**Logan Kanapathi**
*Councillor, Ward 7*

# *GREETINGS FROM MARKHAM*

Dear Mr. N.Logendralingam,

On behalf of Members of Council and the City of Markham, I am very pleased to extend our best wishes and greetings to you on the celebration of your 60th Birthday.

You have crossed several milestones. Today calls for a big celebration. Every passing year brings in an experience and a hope for tomorrow. May you have them both, Happy 60th Birthday!

As an editor of the weekly Uthayan Newspaper, your service to the Tamil community is remarkable. It is owing to your years of hard work, commitment and dedication you are able retain the title as a respected editor of the Canadian Tamil journalism industry. I congratulate and thank the Chief Editor of Uthayan, Mr. Logenthiralingam for his contribution in keeping our Tamil Community up to date with not only the local and community news but news from our homeland. As a Councillor of Markham, the most culturally diverse city in Canada, I'm proud of your efforts and contribution in serving the Tamil community.

Thank you and I wish you continued success, joy and health in all your future endeavours.

Sincerely,

Logan Kanapathi
Councillor, City of Markham

**The Corporation of the City of Markham** · 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
Tel: 905.479.7748 · Fax: 905.479.7763 · e-mail: lkanapathi@markham.ca · www.markham.ca



# HAPPY 60TH BIRTHDAY

I want to send my sincere best wishes to Mr. R.N. Logendralingam on his Mani Vizha!


Every passing year brings in an experience and a hope for tomorrow. May you have them both. Remember, You are not turning 60. You are just turning 20 for the third time. Happy Birthday and thank you for all of your hard work and dedication to strengthening our community, promoting our economy, and creating opportunities for people.

Wishing you many more years of continued success both personally and as chief editor of the Canada Uthayan Newspaper.

Congratulations on reaching this significant milestone!

**Ken Kirupa**
Ontario PC Party Candidate
Scarborough-Guildwood
ken@kenkirupa.ca

# ஊடகத் தகவல் தொடர்பியல் நண்பன் "உதயன்" பத்திரிகை ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் அகவை ௬௰தில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.



மணிவிழா நாயகன் உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் 60வது வயது பூர்த்தியினை ரொறன்ரோவின் குருமார்கள், பேராசிரியர்கள், வர்த்தகப் பெருமக்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஊடகத்துறையினர்கள், கல்விமான்கள், ஆன்மீகப் பெரியோர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து மிகப்பெரும் விழா எடுத்துக் கொண்டாடி மகிழ்கின்றனர். அன்பினால் அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்து அவர்களின் நிகழ்வுகளில் தவறாது கலந்து கொள்வதுடன் அவர்கள் நிகழ்வுகளின் செய்திகளை நிகழ்விற்கு முன்னரும், நிகழ்வின் பின்னரும் விழாக்களின் பதிவுகளை பத்திரிகையில் வெளியிட்டு அவரவர் துறையில் வெற்றிபெற எந்தவகையில் உதவமுடியுமோ அவர்களுக்கு பத்திரிகை மூலமும், ஆலோசனைகளை வழங்கியும் வெற்றிவிழாவாக பயன்தரும் விழாவாக நடாத்துவதற்கு முன்னின்றும் உழைப்பவர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள்.

குறிப்பாக ஆலய விழாக்கள், சமய நிகழ்வுகள், பழைய மாணவர் சங்க நிகழ்வுகள், அரங்கேற்ற விழாக்கள், முத்தமிழ் விழாக்கள், வர்த்தகப் பெருவிழாக்கள், இலக்கிய நிகழ்வுகள், தாயக நிகழ்வுகள், விடுதலை எழுச்சி நிகழ்வுகள், பாராட்டு விழாக்கள், நினைவுகூரும் நிகழ்வுகள், கலை நிகழ்வுகள், வர்த்தக தொழில் ஸ்தாபன ஆரம்ப நிகழ்வுகள், அரசியல் கூட்டங்கள் அனைத்து நிகழ்வுகளையும் அந்த வாரங்களில் எதற்கு முன்னுரிமை வழங்கவேண்டுமோ, எந்த நிகழ்வு சமூகத்திற்கு பயன்தரும் விழாவாக அமையுமோ அத்தகைய நிகழ்வுகளைத் தெரிவுசெய்து விழாவை வெற்றி நிகழ்வாக மாற்றுகின்ற சக்தி மிக்க ஊடகமான உதயன் பத்திரிகை மூலம் தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்திற்கும், கனடிய தமிழ் சமூகத்திற்கும், கலையுலகத்திற்கும் தன்னலம் கருதாத அளப்பெரிய தமிழ், சமய, சமூக, வர்த்தக, கலைப்பணிகளை சிறப்பாக செய்துவரும் உதயன் பத்திரிகை ஆசிரியரின் நற்பணிகளைப் பாராட்டியே ஆகவேண்டும்.

இவற்றோடு வருடம் தோறும் பத்திரிகை வாசகர்களுக்காக இவர் நடாத்தும் "உதயன் விழா" மிகவும் சிறப்பாக, நேர்த்தியாக நடைபெறும் விழா. இதில் சிறப்பம்சமாக ரொறன்ரோவின் சிறப்பு கலைஞர்கள் மூலம் கலைநிகழ்வுகளை நடாத்துவதுடன் தாயகம்,

தமிழகத்தின் அதிசிறந்த படைப்பாளிகளான “கவிப்பேரரசு” திரு வைரமுத்து, சிறந்த நடிகை ஆச்சி மனோரமா இன்னும் சிறந்த கலையுலகப் படைப்பாளிகளை நிகழ்வுகளில் கலந்துகெள்ள வைத்து பத்திரிகை வாசகர்களின் மனநிறைவான விழாவாக நடாத்துவதில் ஓர் வல்லவர் உதயன் ஆசிரியர் அவர்கள். மற்றும் தமிழ், சமய, சமூக, கலை, இலக்கிய வர்த்தகம் போன்ற துறைகளில் தமிழ் மக்களுக்காக அவர்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்காக நற்பணி செய்து வருபவர்களைத் தெரிவுசெய்து ரொறன்ரோவில் மட்டுமன்றி தாயகம், தமிழகம், ஐரோப்பிய நாடுகள் என தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் அவர்கள் ஆற்றும் நற்பணிகளுக்காக உதயன் விருது விழா மூலம் அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

இவற்றோடு உலகில் பல நாடுகளில் நடைபெறுகின்ற தமிழாராட்சி மகாநாடு, உலகத்தமிழ் மகாநாடு, சமயப் பெருவிழாக்கள். இலக்கியவிழாக்களில் கலந்துகொண்டு தன்கருத்துக்களை வழங்கியதுடன் பல நாடுகளின் மேடைகளில் பெரும் பாராட்டுகளையும் பெற்ற சிறந்த சிந்தனையாளர் ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள். இவரது வெற்றிகளுக்கு உறுதுணையாக அவரது துணைவியார், பிள்ளைகள் மற்றும் இவருடன் எப்பொழுதும் கூடவே இருக்கும் பல்துறை சார்ந்த நண்பர்கள் அத்தனை பேருடனும் நட்பொழுக நகைச்சுவை உணர்வுடனும், மலர்ந்த முகத்துடனும் அனைவரையும் அன்பால் அரவணைத்து வாழ்வில் மக்கள் சேவையினை சிறப்பாக ஆற்றிவரும் பத்திரிகை உலகின் மிகச் சிறந்த நண்பராகத் திகழும் உதயன் பத்திரிகை ஆசிரியர் பல்லாண்டு பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று நோயற்ற வாழ்வுடனும் குறைவற்ற செல்வத்துடனும் நற்பணிகள் ஆற்ற எல்லாம் வல்ல ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருவருளுடன் வாழ்துத்கின்றோம்.

மேன்மை கொள் சைவ நீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகை செய்வோம்.
“சிவாச்சார்யகலாநிதி” “சிவாச்சார்ய குலபூஷணம்”சிவஸ்ரீ. பஞ்சாட்சர
விஜயகுமாரக்குருக்கள் (ஐயாமணி சிவம்)ஆலயஸ்தாபகர், முதல்வர், பிரதமகுரு.
ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

# வெற்றி ஆண்டிற் பிறந்த மின்னல் வீரர்



குரும்பசிட்டியில் அந்தக்காலத்தில் பலபேர் என்னைக் காணவருவதுண்டு. அவர்களில் இளைஞர் பலரும் அடங்குவர். 1967 என்று நினைக்கின்றேன், அழகான இளைஞர் இருவர் வணக்கம் என்று சொல்லிக்கொண்டு வாசற்படி ஏறினர். ஒருவர் ஈழவாணன், மற்றையவர் லோகேந்திரலிங்கம்.

ஈழவாணன் எனக்கு நன்கு தெரிந்தவர். மாத்தளையில் அவரும் சொக்கநாதனும் நானும் இணைந்து மாத்தளை இலக்கிய வட்டத்தைத் தோற்றுவித்து நடத்தியது மட்டுமன்றி மூவரும் சேர்ந்து சிட்டுக்குருவி என்ற கவிதைத் தொகுப்பு ஒன்றயையும் வெளியிட்டோம். ஈழவாணண் திருகோணமலையைச் சேர்ந்தவர். மாத்தளையில் அக்காலத்தில் உறவினருடன் வாழ்ந்துவந்தவர். தருமராஜா என்பது சொந்தப் பெயர்.

லோகேந்திரலிங்கம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர் என்றும் பாடசாலை மாணவர் என்றும் அன்றுதான் அறிந்தேன். வயது 14 இருக்கும்.

இருவரும் பழைய இலக்கியங்களிலும் பார்க்கத் தற்கால இலக்கியங்கள் பற்றியே என்னுடன் அதிகம் பேசினார். நிறையவே நாளிதழ்கள் மற்றும் சஞ்சிகைகள் வாசிப்பவர் என்பது துல்லியமாகவே தெரிந்தது. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்தனர்.

தம்பி லோகேந்திரத்தின் மணிவிழா மலருக்குக் கட்டுரை ஒன்றை எழுதுவதற்கு கணினியை இயக்கியபொழுது அவர் என்னை முதன்முதலாகக் காணவந்த அந்த நிகழ்வுதான் நினைவுக்கு வந்தது. அப்பொழுது அவர் கனடாவில் மாஸ்டர் மாஸ்டர் என்று என்னை மதிப்புடன் அழைப்பார் என்றோ எமது உறவு நட்பாக வளர்ந்து ஒருவருக்கொருவர் உதவியாக இருப்போம் என்றோ அவருக்கும் தெரியாது எனக்கும் தெரியாது. நாளை நடப்பதை யார் அறிவார்?

மனைவி பிள்ளைகள் மட்டுமல்லாது நண்பர் மற்றும் மாணவர் உறவும் முந்தியே தீர்மானிக்கப்பட்டவைதாம். இதனையே எல்லாம் எப்பொழுதோ முடிந்த காரியம் என்றார் யோகர் சுவாமிகள்.

எமது உறவு பெரிதும் கலை இலக்கியம் மற்றும் ஆன்மிகம் சார்ந்தது. அவர் இலக்கிய தாகம் மிகுந்தவர் என்பது அவர் என்னைக் காணவந்த அன்றே நான் உணர்ந்து கொண்டதுண்டு. பின்னாளில் எழுபதுகளில் கவிதை மற்றும் எழுத்துப் பணிகளில் கால்பதித்துப் பெயர் எடுத்தவர். இளம் வயதிலேயே **மாற்று, கீற்று** ஆகிய இதழ்களை நடத்தியவர். கவிஞர் ஈழவாணனுடன் இணைந்து அக்னி என்ற இதழை கொழும்பில் வெளியிட்டவர். **மலையன்பன், யாழினி** என்னும் புனைபெயர்களில் ஏராளமான வரிக்கவிதைகள் படைத்திருக்கின்றார்.

எழுத்தாளர் எங்கு செல்லினும் எழுத்தைக் கைவிடமாட்டார்கள். லோகேந்திரலிங்கத்தின் இலக்கிய உணர்வும் தாயக அனுபவமும் எழுத்தார்வமும் அவரைச் சும்மா இருக்க விடவில்லை. 1993ல் **புன்னகை** என்ற மாத இதழைத் தொடங்கினார். அதன் வெளியீட்டு விழாவுக்கு என்னையும் அழைத்துப் பேசவைத்தார்.

1994ல் **சூரியன்** என்ற வார இதழை உதிக்கச் செய்தார். மூன்று அண்டுகளின்பின் சூரியன் மறைய உதயன் வெளிவரத் தொடங்கியது. உதயன் வெளிவந்து சில மாதங்களில் ஐயப்பன் ஆலயத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் 'மக்கள் பத்திரிகை உதயன் பிரதம ஆசிரியர் அடுத்ததுப் பேசுவார்' என லோகேந்திரலிங்கம் அவர்களை அறிமுகஞ் செய்தேன். அன்றுமுதல் மக்கள் பத்திரிகை என்ற பெயர் உதயன் இதழுடன் ஒட்டிக்கொண்டது.

உதயன் ஆல்போல் வளர்ந்து அறுகுபோல் வேரூன்றி வளர்ந்து விட்டது; கனடியத் தமிழர் வாழ்க்கையுடன் ஒன்றிக் கலந்துவிட்டது. அதன் வருடாந்த விழாக்கள் முத்தமிழை வளர்க்கும் விழாக்களாக நடத்தப்பெற்று வருகின்றன. தொடக்கத்தில் விழாவையொட்டிக் கவிதை மற்றும் சிறுகதைப் போட்டிகள் நடத்தப்பெற்று விழாவில் பரிசுகளும் கொடுக்கப்பட்டன. அது இம்மண்ணில் எழுத்தாளர்களை ஊக்குவித்து இலக்கியத்தை வளர்க்கும் நல்ல பணியாக இருந்தது. அது இக்காலத்தில் அகில உலக மட்டத்தில் நடத்தப்படும் அளவுக்கு வளர்ந்துள்ளது.

உதயனின் 10ஆவது ஆண்டிலிருந்து லோகேந்திரலிங்கம் ஆண்டுதோறும் விருது விழாக்களையும் நடத்திவருகின்றார். இவ்விழாவில் கனடாவில் நான்கு துறைகளில் முன்மாதிரியான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற பெருமக்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்து அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் உன்னதமான பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துறைகள் தலைமைத்துவம், கலை இலக்கியம், வணிகம், சமூக நல்லுறவு என்பன. இந்நால்வருடன் தமிழ்நாட்டுச் சாதனையாளர் ஒருவருக்கும் இலங்கைச் சாதனையாளர் ஒருவருக்குமாக மொத்தம் ஆறு விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுவந்தன. இவ்வாண்டு முதல் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் வாழும் ஈழத்தமிழர் ஒருவருக்கும் விருது வழங்கும் முறை நடைமுறைக்கு வந்துள்ளது. இவ்விதம் கனடியத் தமிழரை பிற தமிழ்கூறும் நாடுகளுடன் தொடர்புபடுத்தி நல்லுறவை நல்லமுறையில் வளர்க்கும் விழாக்களாக உதயன் விழாக்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

உதயன் இதழுக்கு இந்த ஆண்டு மகத்தான 17ஆவது ஆண்டு. பதினேழு ஆண்டுகள் தொடர்ந்து ஒரு வார இதழை நடத்துவது என்பது சாதாரண விடயமன்று. இடையில் இரண்டொரு சோதனைகளும் குறுக்கிட்டிருக்கின்றன. சோதனைகளை வேதனைகளாக்காது சாதனைகளாக்கும் மகத்தான சக்தி லோகேந்திரம் அவர்களிடம் இருக்கின்றது. பாடறிந்து ஒழுகும் பண்பும் நிறையவே உண்டு. அதன்காரணமாக கலை இலக்கிய உலகிலும் வர்த்தகத் துறையிலும் இவருக்கு நண்பர்கள் அதிகம். மிகப் பொருத்தமாகவே கவியரசு வைரமுத்து அவர்கள் **நட்பின் நாயகன்** என்ற பட்டத்தை வழங்கியிருக்கின்றார்.

நட்பின் நாயகன் முதன்முதலில் என்னுடன் இணைந்து செயற்பட்டது எழுத்தாளர் இணையத்தின் முயற்சிகளிலேதான். எழுத்தாளர் இணையம் 19.06.1993ல் ஆரம்பிக்கப்பட்டது. அந்நாள் முதலாக இணையத்துடன் இணைந்து கொண்டு அதன் வளர்ச்சிக்கு லோகேந்திரலிங்கம் உதவிவந்திருக்கின்றார். எழுத்தாளர் இணையத்துக்கு இவர் ஆற்றிய தொண்டுகளைப் பாராட்டி 20.12.2003 சனிக்கிழமை நடந்த இணையத்தின் 10ஆவது ஆண்டு விழாவில் இவர் கௌரவிக்கப்பட்டார்.

கொழும்பில் நடந்த ஒரு பாராட்டுவிழாவில் இவருக்குச் **செந்தமிழ்ச் செல்வன்** பட்டம் வழங்கப்பெற்றதையும் குறிப்பிடல் வேண்டும். தமிழ் உணர்வும் தமிழ் மொழியை வளர்க்க வேண்டும் என்கின்ற ஆர்வமுமுள்ள லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு இப்பட்டமும் பொருத்தமானதே.

உதயன் வார இதழில் இவர் எழுதும் **கதிரோட்டத் தலையங்கங்கள்** இவரது கவித்துவத் தமிழுக்கு நல்ல உதாரணங்கள். இத்தலையங்கங்கள் பலவற்றைத் தொகுத்து நூலாக்கும் முயற்சியிலும் இவர் தற்பொழுது ஈடுபட்டிருக்கின்றார். உதயன் வெளியீடாக வந்த **தூரமும் துயரமும்** என்ற சிறுகதைத் தொகுப்பில் உதயன் நடத்திய சிறுகதைப் போட்டிகளுக்கு வந்த சிறந்த கதைகள் மற்றும் பரிசுபெற்ற கதைகள் **15** இடம்பெற்றிருக்கின்றன. இதுவும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் வெளியிட்ட **அரும்பு** என்ற சிறுகதைத் தொகுப்பும் புலப்பெயர்வு நடந்ததன்பின் ஈழத்தமிழர் தமது சிறுகதைக் கலையை எந்த அளவுக்கு நாட்டுப் பிரச்சனைகளைப் பதிவுசெய்யப் பயன்படுத்த முயன்றார்கள் என்பதற்கு சான்றுகளாக அமைகின்றன.

லோகேந்திரலிங்கம் ஒரு நல்ல கவிஞருமாவர். கனடாவில் 1991ல் வெளிவந்த காலத்தின் பதிவுகள் என்ற கவிதைத் தொகுப்பில் இவரது கவிதைகள் 10 இடம்பெற்றிருக்கின்றன. இவரது கவிதைத் தொகுப்பு ஒன்றை நான் விரைவில் எதிர்பார்க்கின்றேன்.

பத்திரிகைப் பணியில் மின்னல் வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இவருக்குச் சிறுகதை, கவிதைகள் எழுத எப்படி நேரம் கிடைக்கிறது என்று நான் வியப்பதுண்டு.
கலை இலக்கியம், ஆன்மீகம், அரசியல் என்று அதிக கூட்டங்களில் பங்குபற்றும் ஊடகவியலாளராகவும் இவர் விளங்குகின்றார். பார்த்துக்கொண்டிருக்க ஒரு நல்ல பேச்சாளராகவும் இவர் முன்னேறியிருக்கின்றார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அழகாகவும் அளவாகவும் மிக அவதானமாகவும் கூட்டங்களிற் பேசிவருகின்றார். சிங்கள மொழியும் இவருக்கு நன்றாக வரும். நான் எனக்குத் தெரிந்த சிங்களத்தை இவருடனும் டாக்டர் கதிர் துரைசிங்கத்துடனும் இடைக்கிடை உரசிப் பார்ப்பதுண்டு.


இவரது பரோபகாரப் பணிகளும் பாராட்டுக்குரியவை. தானாகவும் சில அமைப்புகள் ஊடாகவும் தாயக மக்களுக்கு அடிக்கடி உதவிவருகின்றார். ஆன்மீகப் பணிகளுக்கும் அள்ளி வழங்குகின்றார். 2011ல் இங்கு வருகை தந்திருந்த யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் உதயன் இதழில் தொடர்ந்து எழுதிவந்த கல்விக் கட்டுரைகளைத் தொகுத்து **யாழ்ப்பாணத்திற் கல்வி - 2010** என்ற பெயரில் தனது செலவில் உதயன் வெளியீடாக வெளிட்டதோடு வெளியீட்டு விழாவிற் சேர்ந்த தொகையையும் அப்படியே பேராசிரியர் அவர்களிடம் கையளித்த நிகழ்வையும் ஒரு பரோபகார நிகழ்வாகவே கணிக்கின்றேன்.

இத்தகைய பத்திரிகையாளர், கவிஞர், சிறுகதை எழுத்தாளர், பேச்சாளர், மனிதாபிமானி பரோபகாரி, நட்பின் நாயகர், எனது தம்பி ஆகிய செந்தமிழ்ச் செல்வன் ஒரு மின்னல்வேக உழைப்பாளி; வெற்றி ஈட்டும் செயல்வீரர்! இதற்குக் காரணம் இவர் பிறந்த ஆண்டு. விஜய ஆண்டில் இவர் பிறத்திருக்கின்றார். விஜய என்ற வடமொழிப் பதத்துக்கு இணையான தமிழ்ச்சொல் வெற்றி என்பது. தமிழர் போற்றும் காலங்காட்டியில் மொத்தமாக உள்ள ஆண்டுகளே அறுபதுதான். வெற்றி ஆண்டு ஒரு சுற்றுச் சுற்றி அறுபது ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் வந்திருக்கின்றது. அதனால் இந்தத் தொழில்நுட்ப வல்லாளருக்கு இவ்வாண்டு மணிவிழா ஆண்டாகின்றது.

இவர் உதய சூரியனைப்போல் ஒளிவீசி இன்னுமுள்ள பவளவிழா, முத்துவிழா, சதகவிழா எல்லாம் கண்டு சிறப்பாக வாழ எல்லாம் வல்ல விநாயப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்!

**அண்ணன் வி. கந்தவனம்**

# லோகேந்திரலிங்கம், என்ற மனிதர்



**எங்கும் நிறைந்தவர், எவர்க்கும் இனியவர்:**

அவரைப் பற்றி முழுமையாகத் தெரியாதவர்கள், இங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளை அவதானிப்பவர்களாக இருப்பின், அவர்களுக்குத் திரு லோகேந்திரலிங்கம் பற்றிய ஒரு சந்தேகம் எழவே செய்யும். இவர் பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியரா அல்லது நிருபரா என்பதே அது. அவர்களுடைய சந்தேகம் நியாயமானதே.

இங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் அத்தனையிலும் அவர் பிரசன்னமாக இருப்பதைக் காண முடியும். நிருபர்களுக்குரிய அவசிய சாதனங்கள் பேனா, பேப்பர் மறறும் புகைப்படக் கருவி. லோகேந்திரலிங்கம் புகைப்படக் கருவியுடன் தான் நிகழ்ச்சிகளுக்கு வருவார். ஆனால் அவர் பேப்பர் பேனாவுடன் வந்ததை நான் காணவில்லை. நிகழ்ச்சிகளின் போது குறிப்புக்கள் எடுத்ததையும் அவதானிக்கவில்லை. ஆனால் எத்தனை நிகழ்ச்சிகளுக்குச் சென்றிருந்தாலும் அத்தனை நிகழ்ச்சிகள் பற்றிய விபரமான செய்திகள், தகவல்கள், உரைகளின் சாராம்சங்கள் யாவும் அந்த வாரத்திய உதயனில் இடம் பெறத் தவறுவதில்லை. இத்தனை தகவல்களையும் எப்படி அவரால் தரமுடிகிறது. பசு ஒன்று புலத்தில் மேய்கின்ற போது புல்லினை வேகவேகமாக உள்ளெடுத்து விடுகிறது. பின்னர் சாவகாசமாக இரையை மீட்டெடுத்து மீண்டும் மெல்லுகிறது. இத்தன்மையை லோந்திரலிங்கத்திடமும் என்னால் கண்டு கொள்ள முடிகிறது. எத்தனை நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும் அத்தனை தகவல்களையும் உள்வாங்கி, எத்தனை மணிக்கு வீடு சென்றாலும் அத்தனையையும் அன்றே கணினி முன் உட்கார்ந்து இரை மீட்டு விடுகிறார். அதன் விளைவாக முழுமையாகத் தகவலைச் சீராகவும் தவறுகள் அற்ற முறையிலும் தர முடிகிறது. இது அவருக்கேயான தனித்துவம். இங்கே உள்ள பத்திரிகை ஆசிரியர்களிலே இத்தனை தூரம் சமூக நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுகின்றவர்களில் லோகேந்திரலிங்கத்தினையே முதலிடத்தில் வைக்கலாம் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. எங்கு சென்றாலும் அங்குள்ள எல்லோருடனும் இன்முகத்துடன் சரளமாகப் பேசுவதும் அவருக்கே உரித்தாய நற்பண்பு. எத்தனை அவசரமாப் சென்றாலும் தெரிந்தவரைக் கண்டால் அல்லது யாரேனும் அவரை அடையாளம் கண்டு பேச முன்வந்தால் லோகேந்திரலிங்கம் முகமலர்ச்சியயுடன் அவருடன் நின்று சிறிது நேரம் உரையாடிய பின்னரே அவ்விடத்தினை விட்டு நகர்வார்.

**இலக்கிய ரசனை மிக்கவர், இனிதே பேசும் சுபாவத்தவர்:**

அவர் ஒரு திறமையான கவிஞர், ஈழத்திலே வாழ்ந்த பொழுது 'மலையன்பன்' என்ற புனைபெயரிலே அற்புதமான கவிதைகள் யாத்து பல்லோரதும் பாராட்டுக்களைப் பெற்றவர். சமூகத்தின் ஒடுக்கு முறை, சாதீயம், தொழிலாளர் பிரச்சினை என

சமூகத்தின் அன்றாட பிரச்சினைகள் பற்றி உணர்வு பூர்வமான கவிதைகள் எழுதுவதில் கை தேர்ந்தவர். இங்கு வந்த பின்னர் பத்திரிகை நடத்துவதில் முழுமையாக ஈடுபட்டதன் விளைவாக தன்னால் கவிதை எழுதுவதற்கு நேரம் ஒதுக்க முடியவில்லையே எனப் பல சமயங்கள் அவர் மனம் வருந்திக் கூறியதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் சிலசமயங்களில் மலையன்பனின் உரைகள் கவித்துவம் நிறைந்தனவாய் இருப்பதைக் கண்டு மலைத்திருக்கிறேன். ஒன்றை இழந்து தான் ஒன்றினைப் பெறமுடியும். அவர் ஒரு சிறந்த பத்திரிகை ஆசிரியர் என்பது பல்லோரதும் அங்கீகாரம் பெற்றது. பத்திரிகை ஆசிரியத் தொழிலாற்றுதற்காக கவிதை எழுதுவதை காலவரையின்றிப் பின்போட வேண்டி வந்துள்ளமை வருத்தம் தரவல்லதே. அவருள்ளே உள்ள கவிஞன் நல்ல கவிதையை எழுது முடியாத ஆதங்கத்தில் உள்ளபோதும் நல்ல கவிதைகளை மிகவும் ரசனையோடு வாசிப்பதில் நாட்டம் கொண்டவனாக உள்ளான். வாசிப்பதில் சிறந்த கவிதைகள் அவரது நினைவில் நிரந்தரமாக நிலைத்து நின்றுவிடுவதே இதில் ஆச்சரியம் கலந்த உண்மை. இதை நான் பல சந்தர்பங்களிலே கண்டு வியந்துள்ளேன். தேவையான சந்தர்ப்பங்களில் அக்கவிதை வரிகள் எவ்வித முயற்சியும் இல்லாமல் நீரோடை போல வந்து விழுவதைக் கண்டுள்ளேன். வெண்பாவை ஒரு காலில் கற்க வேண்டும் என்பார்கள். சிறந்த கவிதைகளை ஒரு முறை வாசித்தாலே மனத்தில் பதித்து விடுவது அவரது நினைவாற்றலுக்குச் சான்று.

அவை ஒன்றினிலே உரை நிகழ்துபவர் அவையினது தகமையை அறிந்து அதற்கு ஏற்றவாறு தமது உரையினை அமைக்க வேண்டும். அவையினது முழுமையான ஆகர்சிப்பினை உரை நிகழ்த்துபவர் பெற்றார் என்றால் தான் உரை வெற்றியீட்டியது என்பதன் அர்த்தமாகும். சபையினது தன்மையை எப்படி உரை நிகழ்த்துபவர் அறிந்து கொள்வது என வினவலாம். இந்த யுக்தியை லோகேந்திரலிங்கம் நன்கு தெரிந்து வைத்துள்ளார். தனது உரையின் தொடக்கத்திலேயே ஒரு நகைச் சுவை நிகழ்ச்சி அல்லது துணுக்கினை எடுத்துக் கூறிவிடுவார். சபை கலகலப்பாகிவிடும். அவையினரின் கவனத்தைத் தன்வசம் ஈர்த்து விடுவார். பிறகென்ன அவை அவர் வசம்.

## உள்ளத்தில் தோன்றும் உணர்வை உடனேயே தெரிவிப்பார்:

அவருடைய ஆளுமையினை நான் Impulsive personality என்றே வருணிப்பேன். உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை உடனடியாக எவ்வித மாற்றுச் சிந்தனையுமின்றி எடுத்துக்கூறும் தன்மையையே Impulsive behaviour என்போம். "A functional variety of impulsivity has also been suggested, which involves action without much forethought in appropriate situations that can and does result in desirable consequences. "When such actions have positive outcomes, they tend not to be seen as signs of impulsivity, but as indicators of boldness, quickness, spontaneity, courageousness, or unconventionality"Thus, the construct of impulsivity includes at least two independent components: (1) acting without an appropriate amount of deliberation, which may or may not be functional, and (2) choosing short-term over long-term gains. அவரிலே காண்கின்ற impulsivity, செயல் வகை சார்ந்ததாகவே நான் காண்கிறேன். அவை

துணிகரமான, வேகமான,தைரியமிக்க, இயற்கையாகத் தோன்றிய சம்பிரதாயமற்ற முடிவுகளை காண்பிப்பவையாகவே அமையும். சில சமயங்களிலே இந்த முடிவுகள் மற்றவர்களுடைய மனதினைத் பாதிப்பவையாக அமையலாம். ஆனால் அவை அவரது மனத்தில் நிரந்தரமாகப் பதிந்த கருத்துக்களாக அமையாமையால் பிறிதொரு சந்தர்ப்பத்திலே அவர் கூறுபவை முன்னர் சொன்னவற்றிலிருந்து முற்றாகவே வேறுபட்டவையாக உள்ளதைக் காணமுடியும். இதனால் தான் லோகேந்திரலிங்கத்துடன் நிரந்தர பகமை பாராட்டுபவர்கள் இல்லை என்றே கூற முடியும். அடிக்கிற கையே அணைக்கவும் செய்யும்.

## <u>நல்ல உள்ளம் கொண்டவர், நல்லன செய்ய விளைபவர்:</u>

சில சமயங்களில் ஒரு நேரத்தினைக் குறிப்பிட்டு அவ்வேளையில் நாம் சந்திக்கலாம் எனக் கூறிப்போவார். நாமும் அவருக்காகக் காத்திருப்போம். அவர் வரத் தாமதமாகும். இவர் இப்படித்தான் எனச் சிலர் பாடியுமிருப்பார்கள். தொலைபேசி அழைப்பு வரும். நான் வந்து கொண்டிருக்கிறேன். மிக விரைவில் வந்து உங்களுடன் சேர்ந்து கொள்வேன் எனக்கூறுவார். அவர் வந்து சேதி சொன்னதும் அவர் வரப் பிந்தியமைக்கான காரணம் ஏற்புடையதாக இருப்பதை அறிய முடியும். அவர் உதவியை இன்னொருத்தார் நாடி வந்தமையால் அவருக்கு உதவ வேண்டும் என்ற நல்ல பண்பின் விளைவாக அவருடன் சென்று அந்த அலுவலை முடித்துக் கொடுத்து விட்டு வந்தமையால் தான் தாமதமாயிற்று என்பதை உணருகின்ற போது எமக்கு அவர் மேல் இருந்த அற்பகோபம் மாறி ஆச்சரியமாகி விடுவதைக் காணலாம்.

அவர் என்றுமே நல்லன செய்ய விளைபவர் என்பதை இங்கு வாழ்கின்றவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள். ஒவ்வொரு வருடமும் இரண்டு பெருவிழாக்கள் நடத்துகிறார். ஒன்று உதயன் கலை விழா. இந்த விழாவின் போது பெரும்பாலும் தென்னிந்தியக் கலைஞர் ஒருவரை வரவழைத்துக் கௌரவிக்கிறார். மற்றையது இரவு உணவு, இசை நிகழ்ச்சியுடன் கூடிய உதயன் விருது வழங்கல் விழா. இலங்கை, இந்தியாவிலிந்து ஒவ்வொருவரைத் தவிர இங்கு உள்ள நால்வரைக் கௌரவிக்கிறார். பிரதானமாக சமூக நல்லிணக்கத்துக்குக் காரணமான தமிழர் அல்லாத தனிநபரையோ நிறுவனத்தையோ கௌரவிக்கிறார். இந்த இரு விழாக்களையும் செய்வதற்கு அவர் செலவிடுகின்ற நேரத்தினையும் பணத்தையும் பெரிது படுத்தாமல் அவரால் சாதிக்க முடிகிறது என்றால், இங்கு வாழ் சமூகத்தின் பங்களிப்பில் அவருக்கு இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையும், அவருக்கு உறுதுணையாக நிற்கும் விளம்பரதாரர்களின் பரிபூரணமான ஒத்துழைப்புமே.

## <u>மங்கலம் என்ப மனைமாட்சி:</u>

ஒரு ஆண்மகனைப் புகழ்கையில், 'ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார்' என்பது எல்லோரும் சொல்வது வழக்கம். லேகேந்திரலிங்கம் பற்றியும் அவரது வெற்றியும் பற்றிக் கூறுகையில் நான் மேற்படி கூற்றினைக் கூற விரும்பவில்லை. காரணம்? அவர் வெற்றியில் மனைவியின் பங்கு மகத்தானது தான்

என்றாலும் அவருடைய பிள்ளைகளினதும் சகோதரியினதும் பங்கினைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. லோகேந்திரலிங்கத்தினை ஒரு சிறந்த நிர்வாகியாக நான் கருத மாட்டேன். பல விஷயங்களை மண்டைக்குள் வைத்து அல்லல் படுகின்ற வகை அவர். ஆகவே அவருடைய மனப் போக்கு சடுதி சடுதியாக( Man of moods) மாறும். அதற்கு அவருடன் பணியாற்றுபவர்கள் ஈடுகொடுக்க வேண்டும். அந்த அனுபவம் அவரது மனைவியாருக்கு நிறையவே ஏற்பட்டிருக்கும். 'இல்லாள் அகத்திருக்க இல்லாதொன்றில்லை' என்பார்கள். அகத்தே வருவோரை இன்முகத்துடன் விருந்தோம்பி அவர்கள் நலன் பேணி குடும்பத்தின் சுபீட்சத்திற்காகக் கடினமாக உழைத்து இன்று இரு பெண்பிள்ளைகள் மூலமாக பேத்தி என்ற சிறப்பு ஸ்தானத்தில் வீற்றிருக்கும் திருமதி லோகேந்திரலிங்கம் உதயன் பத்திரிகையின் வளர்ச்சியிலும் உறுதுணையாய் நின்றவர். அவரை எத்தனை தரம் பாராட்டினாலும் தகும்.

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு** ( குறள் 6:60)

**நன்றி மறப்பது நன்றன்று:** மற்றவர் செய்த உபகாரத்தை என்றுமே நினைவில் வைத்திருப்பதோடல்லாமல் தக்க சமயத்தில் அவற்றினை நினைவு கூருவது அவரது தலையாய பண்பு. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் விளம்பரதாரர்களைப் பாராட்டுவதற்கு அவர் தவறுவதில்லை. அவர்களால் தான் ஊடகங்கள் தமது பணியினைச் செய்ய முடிகிறது என அவர் வெளிப்படையாகவே எடுத்துக் கூறுவார். நன்றி பாராட்டுவதில் அவர் தாராளர்.

ரொறன்ரோ வாழ் தமிழ் சமூகம் சார்பிலே அவர் ஆற்றுகின்ற அரும் பணியினுக்கு நாமும் தாராளமாக நன்றி கூறுவோம்.

**பொ. கனகசபாபதி**
**மகாஜன அதிபர்**

# Admirable Logan

## By Manuel Jesudasan



Two decades ago, a particular tabloid newspaper in Tamil circulating in the Toronto region enjoyed a period of popularity with libellous articles. The prey for the tabloid was all honest and dedicated community workers and intellectuals in the Tamil community who devoted time and energy with enthusiasm in serving the community. They were insulted, ridiculed and scandalized by this medium. It was at this time, I ventured to tell the truth about this tabloid and the truth about a civil case filed for defamation against this paper and its editor. My first ever article in Canada, of course a controversial one, was ready to be published, but without a newspaper to publish it. All the Tamil newspapers I contacted refused to carry it for fear of repercussion. The last newspaper I contacted was the 'Uthayan' newspaper.

The editor of the Uthyan was not known to me at that time. Nevethelss, a few hours later I contacted him, he telephoned me and confirmed that he would publish the article. It was published. The consequence was, as the others feared, the Uthayan editor, Mr. R.N. Logendralingam and I were targeted by the Tabloid. The allegations made against us were lies and fantasy. Nevertheless, as newcomers to the media circus we were horrified and devastated.

That devastation too had positive outcome. Starting from that day the scandalous article was published in the tabloid Mr. Logendralingam and I became united as one voice for the voiceless in the community, and since then I have close contact with him, which afforded me ample opportunity to learn of him.

Fondly known as Logan, he is well liked by everyone. His untiring dedication and devotion in all his endeavours have helped him to reach the height and the recognition that is afforded to him by intellectuals and stalwarts in the media circle as a successful administrator and an editor of a well read newspaper in Tamil, and which newspaper is in demand among many and sought after by the Tamil Diaspora, including in Canada, USA and Europe.

Logan's journey as a journalist started at his very early age. In the beginning he emerged as a poetry writer in Tamil under the pen name "Malaiyanpan". He looked for association with recognized writers even at such early age. I was moved when Logan mentioned to me many years back that he was a friend of my close relative and that he visited my village to chat with my relative to have enriching literary discussions. As I write this article, I have fond memories of my cousin, Daniel Antony, who bloomed as an excellent writer at a very young age and departed as quickly leaving us to wonder as to the greatness would he have accomplished as a creative writer had he stayed with us longer. Knowing the association of people Logan was exposed to in his long journey, I can perceive the path he had to tread to achieve the recognition as a poet, writer and journalist and the success as a businessman.

The challenges encountered as a new immigrant in Canada were no different to Logan than any other Tamil who were part of the exodus from the war torn Sri Lanka. He struggled to start a meaningful life in Canada with the priority for providing the basic needs for his young family. A trained electrician from Sri Lanka, whose hobby was writing Tamil poetry and creative writing, was unable to secure a career immediately upon arriving in Canada that was fulfilling his desire.

Skilful planning, carefully co-ordinating and using the knowledge, skills and abilities of like minded people paved the way to him to become the well known and admirable champion in the Tamil community in Canada. Logan is a team player. His famous and frequent quote is, "we are a team".

"What you do unto others will return to you many times multiplied" is believed to be a rule of natural justice. Logan has consciously practised this rule with absolute faith. By promoting business enterprises, by encouraging and giving prominence to individual talents and by providing support to the organizations that engaged in community work, Logan has reaped the harvest, and it is apparent from the success of his own business as a sole owner of a Tamil weekly newspaper.

Logan is a peoples person who can attract, by his charm, anyone he chooses to associate with - politicians, poets, writers, cinema stars, businessmen and professionals, and this is evident from the articles that have poured in from the entire above category of people, who have, in the respective articles, shared their intimate relationship, experiences and have expressed their admiration of him. These articles decorate the book that is published as a part of the celebration of Logan's 60th birthday on June 9, 2013.

It is also believed that life gives what is asked of it. Someone has said that if you ask for a penny from your life, you will get nothing more than a penny. Logan has no fear or hesitation of asking. The awards and the accolades he has been bestowed upon with by governments and community organizations bear testimony for his power of asking. Recently he has been awarded with the Queen's Jubilee medal.

A few weeks back I had an envious opportunity of meeting one of the acclaimed humorists in the world, David Sedaris, while he was on his book tour in Toronto, with the courtesy of writer A. Muttulingam. During the two hour long conversation I asked, David Sedaris,

"During your book tours you are interviewed by many televisions and newspapers. Do you watch the telecast and read the interview in the newspapers?"

He spontaneously replied, "Never, ever".

I posed the follow up question, "how would you know that you have been reported accurately?" David firmly answered, "I don't care."

Surely, Logan and I have also learned life's lessons since we met for the first time in the early 90s. Logan has reached the milestone 60th birthday this year. My wife, Monica and I have great pleasure in wishing him good health, happiness and success in all his future endeavours and long life.

# Active லோகன்



மானிடப்பிறவி வாய்த்தது நல்ல தவத்தால் ஆகும். மானிடப்பிறவியின் ஆயுள் 120 வருடங்கள். அதன் பாதி நிறைவை நா. லோகேந்திரலிங்கம் அவர்கள் விஜய வருடம் வைகாசி மாத உத்தர நட்சத்திரத்தில் மனைவியுடன் சஷ்டியப்த பூர்த்தியாகவும், மே 23 மனைவி, பிள்ளைகள், உறவினர்களுடன் வைரவிழாவாகவும் கொண்டாடினார். இன்று நண்பர்கள் மணிவிழாவாக கொண்டாடுகிறார்கள்.

லோகனை இலங்கையில் **அக்கினி** மூலமோ, **கீற்று** மூலமோ நான் அறிந்ததில்லை. இதில் **மாற்று**க் கருத்துக்கு இடமில்லை. கனடா வந்த பின்னர் தான் **சூரியன்** மூலம் ஆரம்பித்த உறவை **உதயன்** மூலம் 'கதிர்' தொடர்கிறான். வாய்ப்புகள் பலருக்கும் கிடைப்பது போன்றுதான் லோகனுக்கும் கிடைத்தன, கிடைக்கின்றன. ஆனால் அந்தச் சந்தர்ப்பங்களை எவ்வாறு செயற்படுத்திக் கொண்டார் என்பதில் தான் ஒரு வித்தியாசத்தை லோகனில் காண்கிறோம். சீட்டாடும் போது அவரவருக்கு விழுகின்ற சீட்டை விதியென்று கூறலாம். விழுந்த சீட்டை எப்படி ஒருவர் விளையாடுகின்றார் என்பது மதி. இந்த மதிக்கூர்மையை லோகனில் காணலாம். சமூகத்திற்கு ஒரு திட்டம் நன்மை தரும், வெற்றியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றால் பலரை தன் வழியில் இழுத்து செயற்படுத்தும் திறமைசாலி.


மின்சாரப் பொறியியற்துறை இலங்கையில் இவரை இனங்காண வைத்தது. இவரின் எழுத்துவன்மை, கவித்திறன், இலக்கிய ஈடுபாடு கனடாவில் இவரை இனங்காண வைத்து வாழவைக்கிறது. உதயன் பத்திரிகை 17 ஆண்டுகள், உதயன்விழா, உதயன் சர்வதேச விருதுவிழா, மனிதநேயக்குரல் என பல விடயங்களைத் தொடர்ந்து செய்வது என்பது சாதனை. இது மட்டுமா! பல்கலாச்சார பத்திரிகை சங்கம், பண்பாட்டு இயக்கம், எழுத்தாளர் இணையம் என்று இன்னும் பல. பன்முக தொடர்புகள் கொண்ட இவரின் குழாம் அகலமானது, நீளமானது.

கணவனாக, தந்தையாக, மாமனாக, பேரனாக, சகோதரனாக தனது கடமைகளை செவ்வனே செய்து கொண்டு எவ்வாறு இவை எல்லாவற்றையும் செய்கிறார் லோகன் என்று நான் வியப்பதுண்டு. மனைவியால் தான் மனிதனின் செயல் பூரணமாகிறது, பரிணமிக்கிறது, வெற்றி பெறுகின்றது. பாப்பா வீட்டை மட்டும் 'பாப்பா' என்று பலர் நினைக்கலாம். ஆனால் லோகனின் வாழ்க்கையில் பல வழிகளில் கைகொடுக்கும் தோன்றாத் துணை பத்மா (பாப்பா).

மனைவி, ஆவணிப்பூக்கள் மூவர், அவர்களின் துணைவர்கள், சந்ததியருடன் சிறப்பையும் செல்வத்தையும் சுகத்தையும் பல்லாண்டு ஆண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

**கதிர் துரைசிங்கம்**

# அண்ணாவே நீடு வாழி!



நாடறிந்த நல்ல நண்பன் நம்மோடு
மடல் வரையும் மலையன்பன் எம்மோடு
கவிபுனையும் கவிஞனும் கவியோடு
கருத்தால் கதைசொல்லும் மனதோடு
பகிடி சொன்னால் மற்றோர் பல்லோடு
எப்போதும் எங்களில் ஒருவராகி
இதயமெல்லாம் நிறைந்து இருப்பவர்
எல்லாம் தெரிந்தவர் தெரியாதொன்றுண்டு
நம்பிடுவார் அனைவரையும் நயவஞ்சமில்லாதவர்
உதவி செய்வதில் உத்தம குணத்தோன்
குலாவி நலம் விசாரிப்பதுவும்
குறைவுண்டேல் நிறைவாக்க பழக்குவதும்
குடும்பத்தின் குலவிளக்காய்
மலையின் மேலுள்ள பட்டணமாய்
ஒளிர்கின்ற விளக்காய் உலாவி வருகின்றார்.

காலம் மாறும், காலநிலை கடும்பனியாம்
வீதியினில் விரைகின்ற வாகனமும் இல்லை
பாதியிலே பஸ்களும் நகராது தரித்துநிற்கும்
பத்திரிகை உதயன் தாள் மாறும் - ஆனால்
நாள் மாறாக் கொடுக்கின்ற மன்னவனே!


மணிவிழா எடுத்து மகுடங்கள் சூட்டி
மனதாரப் பாராட்டி மாலைகள் சூடி
மனைவி, மக்கள், மருகர், பேரர், சுற்றம்
அத்தனையும் வாழ்த்துகின்ற இவ்வேளை
நற்றவனே! நல்நண்பனே! சகோதரனே!
நலமோடு வாழ நாமும் வாழ்த்துகின்றோம்!

வாழ்க நூறாண்டு! வாழிய பல்லாண்டு!
வாழ்க வளமுடன்.....

**சகோதரன்**
**சோதி குடும்பம்**

# எங்கும் எதிலும் எப்பொழுதும் லோகேந்திரலிங்கம்

**த.சிவபாலு**



செய்திகளைக் கடத்துபவை ஊடக்கங்கள் என வரையறுக் கப்படுகின்றன. ஊடகங்கள் தொலைக்காட்சி, வானொலி, நாளேடுகள், வார ஏடுகள், மாதாந்த ஏடுகள், சஞ்சிகைக்கள் எனப் பலவகைப்பட்டன. இன்று தொழில்நுட்ப வளர்ச்ச்சி காரணமாக இணைத்தளம் ஊடகத்துறையில் பாரிய தாக்கத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பத்திரிகைகத் துறையில் பணியாற்றுபவர்கள் பொதுமக்களுக்குச் செய்திகளையும் புதிய தகவல்களையும் கடத்துவபர்களாகவும் பொதுசன அபிப்பிராயத்தை வளர்ப்பவர்களாகவும் உள்ளனர். அந்தப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் நண்பர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம். பல்துறையாளர்களோடும் நெருங்கிப்பழகும் மனப்பாங்கு கொண்டவர். கனடாவில் வாழும் தமிழர்கள் மத்தியில் பிரபலமானவர்களுள் ஒருவராக தன்னை உயர்த்திக் கொண்டவர்.

எந்த நிகழ்வென்றாலும் அங்கு பிரசன்னமாகி இருப்பவர்களில் இருவரை நான் மிக முக்கியமாகக் குறிப்பிடுவேன். ஒன்று ஆர்.என்.லோகேந்திரலிங்கம் இன்னொன்று எனது மறைந்த நண்பர் ஆ.பொ. செல்லையா அவர்களின் புதல்வன் செந்திலாதன். ஆர்.என்.லோகேந்திரலிங்கம் எப்போதும் ஒரு புகைப்படக் கருவியோடு காட்சி தருவர். முன்னுக்கு வந்து அந்தந்த நிகழ்வுகளைப் படமாக்கிக் கொள்ளுவார். அவற்றில் சிலவோ பலவோ அடுத்த வாராப் பத்திரிகையில் காணப்படும்.

அவரை யார் அழைத்தாலும் அதனை ஏற்றுக் கொண்டு அந்த நிகழ்விற்கு வருகை தரும் சிறந்த உயர்ந்த பண்பை நான் காண முடிந்தது. எல்லார் மனத்திலும் நிலை பெறக்கூடிய ஒருவராகத் தன்னை வரைந்து கொண்டு செயற்படும் ஒருவராக அவர் தனது அயராத உழைப்பால் தன்னை உயர்த்திக் கெண்டவர்.

அரசியல் சமூக நிகழ்வுகள் என்றால் என்ன ஆலய விசேட தினங்கள் என்றால் என்ன அவர் அங்கு பிரசன்னமாயிருப்பார். எல்லாவற்றிலும் அவர் கலந்து கொள்வதனால் அவரை அனைவருமே அழைப்பதில் நாட்டங் காட்டுவது இயல்பாக உள்ளது. அத்தோடு தன்னை அழைத்தவர்களைப் பெருமைப் படுத்தும் வகையில் அவர் செயற்படுவதும் அவரது தொழிற் சிறப்பிற்கும் புகழிற்கும் காரணமாகும். பத்திரிகை ஒன்றை நடத்துவது சாதாரணமான ஒன்றல்ல. பத்திரிகையாளன் தனக்கென சில தனிச்சிறப்பியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அதுவும் இலவசப் பத்திரிகை என்றால் சில முக்கிய பண்புகளை உடையவராக இருத்தல் அவசியம். அவற்றுள் பின்வருவன சில:

பொதுமக்கள் தொடர்பு,
செய்தி சேகரித்தல்
செய்திகளைத் தயாரித்தல்,
கணினியில் ஏற்றுதல்
கட்டமைத்தல் அல்லது ஒழுங்கமைத்தலும்
விளம்பரங்களைச் சேகரித்தல்
இலக்கியப் படைப்புக்களைப் பெறுதல்
பத்திரியையை வடிவமைத்தலும் பத்தியாக்கலும்
குறிப்பிட்ட நேரத்தில் வெளியிடுதல்

போன்ற இன்னோரன்ன பணிகள் எந்த ஒரு செய்தியிதழை வெளியீடு செய்யும் ஒருவரின் முக்கிய பணிகளாக உள்ளன. இவற்றை லோகேந்திரலிங்கம் எப்படிக் கையாளுகின்றார்

என்பதனை அவருடன் நெருங்கிப் பழகியதனால் அறிந்து கொள்ள முடிந்தது. உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்ற பணியிலிருந்து கொண்டு அவர் செய்யும் பணிகளுள் மிக முக்கியமானது அவரால் படைக்கப்படும் பதிப்புரை அதாதவது "Editorial" என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் அந்த நுழைவாயில் மக்கள் மத்தியில் சிந்தனையைத் தூண்டும் கருவியாக அமைகின்றமை கண்கூடு. அந்தப் பணியில் உதயன் பத்திரிகையின் ''கதிரோட்டம்'' அமைந்துள்ளமை அவரது ஆளுமையை வெளிக்கொண்டவரும் பத்தி எழுத்தாகவே அமைந்தள்ளது.

லோகேந்திரலிங்கத்தோடு எனக்கு தொடர்பு ஏற்படுத்தித் தந்தவர் அதிபர் கனகசபாபதி அவர்கள். 1996ல் 'தமிழ் வழி' என்னும் பாடநூல் வெளியீடு சென்ரனியல் கல்லூரியின் மண்டபத்தில் இடம்பெற்றவேளை அதிபர் அவர்கள் என்னிடம் அந்த விடயம் பற்றி எழுதி உதயன் பத்திரிகைக்குக் கொடுக்கும் வண்ணம் அன்புக் கட்டளையிட்டிருந்தார். நான் அந்தக் கூட்டத்தைப்பற்றி எழுதி அதனைச் சேர்ப்பிப்பதற்காக உதயன் பத்திரிகையின் அலுவலகத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு நான் அலவலகம் அதுவும் ஒரு செய்தியிதழ் பத்திரிகைக்குச் செல்கின்றேன் என்ற நோக்கத்தோடு தான் சென்ற எனக்கு அந்த முகவரிக்குச் சென்ற வேளை அது ஒரு ஆடை விற்பனை நிறுவனமாகத் தென்பட்டது. நான் தவறான முகவரிக்கு வந்து விட்டேனே என யோசித்துக் கொண்டிருந்த வேளை அங்கு ஆஜானபாகுவான தோற்றத்தில் அந்தக் கடையில் தனிமையில் சில உடைகளை ஒழுங்கமைத்துக் கொண்டு தனிமையில் இனிமை கண்டு கொண்டிருந்த மனிதரிடம் நான் உதயன் பத்திரிகை ஆசிரியரைப் பார்க்க வேண்டும் எனத் தயங்கித் தயங்கிக் கேட்டேன். அவர் ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார் அந்தப் பார்வை என்னைத் தெரியாமல் ஒருவன் இவ்வளவு காலமும் கனடாவில் இருக்கின்றானா என்பது போன்று இருந்தது. எங்கே நான் கனடாவிற்குப் புதியவன் என்பதனை அவர் எதிர்பார்த்திருக்கமாட்டார். அவரிடம் இதனை அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் உங்களிடம் தரும்படி பணித்துள்ளார் என்றேன். அதிபரின் பெயரைச் சொன்னதும் அவரது முகத்தில் ஒரு மாற்றத்தைக் கண்டேன். அவரின் முகத்தில் புன்முறுவல் இழையோடியது. நான் அங்கு நிற்க நேரமின்மையால் அத்துடன் திரும்பி விட்டேன். ஆனால் அந்த நூல் வெளியீடு பற்றிய எனது கட்டுரை அந்த வாரமே வெளியாகியிருந்தது. அதனைப் பார்த்துவிட்டு முதலில் என்னை அழைத்தவர் அதிபர் தான். ''நன்றாக எழுதியுள்ளீர்கள்'' என்று பாராட்டினார். அத்தோடு தொடர்ந்தும் எழுத வேண்டும் என்றார். லோகேந்திரலிங்கம் தனக்கு ஒரு நல்ல எழுத்தாளர் கிடைத்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார் என்ற செய்தியையும் சொன்னார். நான் கனடாவில் முதன்முதல் பத்திரிகைக்கு எழுதியமை எனக்குப் பாராட்டைத் தந்தமையால் தொடர்ந்தும் எழுதத் தொடங்கினேன். அன்று தொடங்கிய உதயன் பத்திரிகையின் பணி இன்றும் தொடர்கின்றது என்றால் அதற்கு லோகேந்திரலிங்கமும் அதிபருந்தான் காரணம். சில வேளைகளில் எழுதாது விட்டால் யாரிடமிருந்து அழைப்பு வராவிட்டாலும் அதிபரிடமிருந்தும் லோகேந்திரலிங்கத்திடமி ருந்தும் அழைப்பு வருவது வழக்கமாகி விட்டது.

பல வேளைகளில் என்னை வந்து அழைத்துச் செல்லுவார் பல நிழ்வுகளிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பு, மொன்றியேலுக்கும் நான் சென்று சில நிகழ்வுகளில் கலந்துகொள்ள வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தமையால் அவரோடு யார் யார் பழகுகின்றார்கள். எப்பாடியாக அவரை மதிக்கின்றார்கள் என்பதனை எல்லாம் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. அதற்கு லோகேந்திரலிங்கத்தின் இயல்பான போக்கும் மற்றவர்களை மதித்துப் பழகும் பண்பும் முக்கியமானது.

தான் ஏதும் தவறு செய்து விட்டால் அதற்காக மன்னிப்புக்கோரும் ஒரு பெரும் பண்பை லோகேந்திரலிங்கத்திடம் காணலாம். யாரும் அவரைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டால் அதனை விடுங்கள் என்று குறிப்பிட்டு அவற்றைப் பெரிது படுத்தாமல் விடும் மனப்பக்குவமும் அவரிடம் உண்டு. சில வேளைகளில் அவர் தவறுகளைச் சுட்டிக்காட்டப் பின்நிற்பதும் இல்லை. தான் தவறு செய்தால் மன்னிப்புக் கேட்கத் தவறுவதும் இல்லை. திடீரன வரும் கோபம் வருவது போலவே ஆறிவிடும். அதனை விரைவில் ஆற்றி அவரை

ஆற்றுப்படுத்த அவருக்குக் கிடைத்த துணைவி பாப்பா எனச் செல்லமாக அழைக்கப்படும் திருமதி பத்மலோஜினி (பாப்பா) அமைதியாக இரண்டொரு சொற்களாலேயே சாந்தமாக்கிவிடும் வல்லமையும் பொறுமையும் கொண்டவர். சிற்சில வேளைகளில் பூதாகரமாகத் தோன்றும் நிலைமைகளை மிகச் சாதுரியமாக அடக்கி அமுக்கி அமைதியாக்கி தணித்துவிடும் மகா சாணக்கியம் கொண்டவர் அவரது வாழ்க்கைத் துணைவி. ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கின்றாள் என்பது நண்பர் லோகேந்திரலிங்கத்திற்குச் சாலப்பொருந்தும். அவருக்குப் பின்னால் நின்று அவரின் வெற்றிக்குப் பாடுபடுவர்களில் அவரது இருபுதல்விக்களும் குறிப்பிட்டப்பட வேண்டடியவர்கள். குடும்ப வாழ்வில் மட்டுமல்ல 'உதயன் பத்திரிகை நிறுவனத்தின் நிருவாகப் பொறுப்பாளராக திருமதி லோகேந்திரலிங்கம் ஆற்றும் பணி சாதராணமான ஒன்றல்ல. பல தடவைகள் அவர் பிரச்சினைகள், முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்கும் பாங்கையும் அவற்றை இலாவகமாகக் கையாளும் தன்மையையும் நான் கண்டு வியந்திருக்கின்றேன். சாந்தம் தவழும் அவரது தோற்றத்தையும் சிரிப்பையும் கண்டு கொள்பவர்கள் முரண்பாடுகளைக் தவிர்த்து அமைதி காணும் பாங்கு அவருக்கே உரிய தனி அழகாகும்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தில் நான் 1997ல் இணைந்து கொண்டேன். 2004ல் இடம்பெற்ற வருடாந்தக் கூட்டத்தில் லோகேந்திரலிங்கம் தலைவரானார் நான் செயலாளராகத் தெரிவானேன். இருவரும் இணைந்து செயற்பட்டு பல பணிகளை மேற்கொண்டோம். மறைந்த எழுத்தாளர்கள் வைத்தியக் கலாநிதி நந்தி, இராஜகோபால் போன்றவர்களைப் பற்றிய சிறப்புரைகளை பலரை அழைத்து நிகழ்த்தியதோடு மட்டுமன்றி பல கருத்தரங்கங்களையும் நாம் நடத்தியிருந்தோம். அதற்கு அவருடைய பூரண ஒத்துழைப்பும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் என்னை ஊக்கம் மூட்டின. அன்றிலிருந்து இன்று வரை எழுத்தாளர் இணையத்தின் அறிவித்தல்களை எந்தவித பிரதியுபகாரமும் எதிர்பாராது பதிப்பித்து பத்திரிகையில் இடம்பெற வைப்பது அவரது எழுத்தால் இணைவோம் என்னும் தாரகமந்திரத்தின் சூக்குமத்திற்குக் கட்டுப்பட்ட வராகவே உள்ளார்.

லோகேந்திரலிங்கம் உலகப் பண்பாட்டு கழகத்தில் ஒரு முக்கிய உறுப்பினராகப் பணியாற்றுகின்றார். அதில் ஊடகப் பொறுப்பாளர், நிறைவேற்றுப் பொறுப்பாளர் எனப் பல பணிகளை மேற்கொண்டுள்ளர். அந்த நிறுவனம் சார்ந்து அவர் அவுஸ்திரேலியா, ஜேர்மனி, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார் என்றால் அவர் பத்திரிகையோடு மட்டுமல்ல தமிழ் மக்களின் பல்வேறு பணிகளிலும் பங்கு கொள்ளும் நாட்டங்கொண்டுள்ளமை எடுத்துக் காட்டுகின்றது. 2007ல் ஈழத்தில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை நேரடியாகவே சென்று பார்த்து அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவும் அவர் பின் நிற்கவில்லை.

அண்மையில் வன்னியில் குறிப்பாக பாண்டியன் குளம் பகுதியில் இருந்து ஒரு வேண்டுகோள் உதயன் பத்திரிகைக்குக் கிடைத்திருந்தது. அங்கு பாம்புக்கடியால் இறக்கும் மக்களை மருத்துவ நிலையத்திற்கு விரைந்து எடுத்துச்செல்ல ஒரு அம்புலன்ஸ் வாகனத்தின் அவசர தேவைபற்றி பத்திரிகைச் செய்தி கிடைத்திருந்தது. அதனைச் செவிமடுத்த அவர் விரைந்து செயற்பட்டு அங்கு அவதியுறும் மக்களுக்கு உதவுவதற்காக ஒரு அமைப்பை ஆரம்பிக்க சில நலன் விரும்பிகளோடு கலந்துரையாடியதன் பயனாக நிதி சேகரித்து அனுப்பியமை அல்லலுறும் மக்களில் அவர் கொண்டுள்ள இரக்க சிந்தையை எடுத்துக் காட்டுகின்றது. தான்னுண்டு தனது பத்திரிகை உண்டு என்றல்லாமல் எதிலும் எங்கும் எந்த நேரத்திலும் பங்குகொள்ளும் பல்வேறு முகங்களைக் கொண்டுள்ள லோகேந்திரலிங்கம் அவர்கள் பல்வேறு நிலைகளில் பல்வேறு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதோடு தனது வேலைப்பழுக்களின் மத்தியிலும் எல்லா நிகழ்வுகளிலும் பிரசன்னமாவது அவரது துடிப்பான நடத்தையை காட்டுகின்றது. அறுபது தொட்டு மணிவிழாக் காணும் அவர் வைரவிழாக் கண்டு சதமவிழாவும் கொண்டாட வேண்டும்! தொடர்க அவர் பணி வாழ்க நீடு என வாழ்த்துகின்றேன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம். ஐரோப்பிய ஒன்றியம்
**Internationale Bewegung für Tamilische Kultur - Europäsche Union e.V.**
கல்வி கலை விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம் - ஐரோப்பா
**Education, Culture, Arts and Sports Coordinating Center- Europa**
**Postfach 2129, 48431 Rheine, Germany Tel/Fax:(0049)5971-14258**
**Email: imtc1974@yahoo.com Website. www.imtcweb.com**
**Email: imtced1994@hotmail.de** (Education, Culture, Arts and Sport Center Europa)
**VR1116**

## தமிழ்த்திரு . ஆர்.என். லோகேந்திரலிங்கம்
## 60வது பிறந்தநாள் வாழ்த்திதழ் 23.மே.2013

மின் அத்தியட்சகராய் உள்ளூராட்சி சபையில் பணிசெய்தீர்
மிகுதமிழ் மணம் வீச பதினேழாம் வயததனில் கவிகண்டீர்
கல்முனையில் கீற்றாகக் கொழும்பில் அக்கினியாகக்
காலாண்டிதழ் யாழிலும் மாற்று என மலரச்செய்தீர்

அறம் பொருள் இன்பம் உயிரச்சம் இந்நான்கின்
திறன்தெரிந்து தெளிந்த தமிழ்மகனே நீரவாழ்க
தன்இன்பம் விரும்பானாய் கொண்டசெயல் முடிப்பீர
துன்பம் தமிழ்போக்கும் தூண் நீரானீர்

சொல்லின் நிறம் அறிந்து சொல் தந்தீர்
செயலின் திறன் தெளிந்து பொருள் தந்தீர்
உதயன்பத்திரிகையாய் பதினெட்டாண்டுகள் உம்வளம்தந்தீர்
ஊடகங்களுக்கு உதயன்மொழிதனில் உலகவிருது தந்தீர்

வாழ்கநீ தமிழ்மகனாய் கனடாமண் தாங்கிடவே
வாழ்த்திநின்றோம் சிறப்புடன் நீர் வாழ்ந்திடவே
சேர்ந்திடுவோம் தமிழ் உலகதனில் சீராக
சார்ந்திடுவோம் தமிழ்புல மண்ணதனில் வேராக

வாழ்த்துகின்றோம் ! உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஊடகத்துறைப் பணிமகனே! நீர் வாழ்க!

அன்புடன்

துரைகணேசலிங்கம் — செயலாளர்நாயகம்

கிறேசியன் யேம்ஸ் அல்ஸ்ரன் (தமிழ்மணிப் புலவர்) — இணைத் தலைவர் ( ஐரோப்பா)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

# பேனா முனையில் பெரும் போர் தீட்டு



அன்று உன் விரல் பிடித்து நடக்கச் செய்த அம்மாவின் இடத்தில் இருந்து நீ பிறந்ததை அறிவிக்கும் இன்றைய இந்த இனிய தினத்தில் நலமாய் வாழ்க, வளமாய் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்'' எங்கள் வாழ்வும் வளமும் தான் தன் மூச்சாகக் கொண்டு எங்களுக்காக இன்பங்களைத் தந்து, துன்பங்களைத் தான் சுமந்து, பிள்ளைகளே தன் உலகம் என்று வாழ்ந்த அம்மாவும் இன்று வானுலகில் நின்று நிச்சயம் வாழ்த்துவார்.

சிறுவயது ஞாபகங்கள் சிந்தைதனில் வந்து சிரிப்பும் அழுகையுமாக நினைவுகளைக் கோர்த்து உணர்ச்சிகளைச் சேர்த்து நிற்கின்றன. பள்ளிக்கூடம், கல்லூரி, தொழில் என்று நீ, நீயாக நின்று ஒவ்வொன்றையும் தேடிச்சென்று சொந்த முயற்சியில் முன்னேறினாய். அதேவேளையில் அருகிருந்து ஆலோசனை சொல்லும் குடும்பத்தார் கருத்துக்களும் செவிகொடுத்துச் செயலாற்றினாய். அதன் பலனாய் நல்லதொரு வாழ்க்கைத் துணையைப் பெற்றாய்.

எங்கள் தந்தையார் வைத்த பெயர் லோகேந்திரலிங்கம் புலம்பெயர் தேசத்தில் மட்டுமல்ல, தாயகத்திலும் தமிழகத்திலும் ''உதயன் லோகேந்திரலிங்கம்'' என்று தனித்து நிற்கும் அடையாளம். அதுவும் உன் சொந்த முயற்சியே. அதற்காகவும் வாழ்த்துக்கள்.

அயல் நாட்டிற்கு வந்தபோது அறிமுகம் ஏதுமில்லை. அதன்பின் அறிமுகமாகி, அடிக்கடி பேசி, உரிமை கொண்டாடும் உறவைவிட, உறவைக் கொண்டாடும் நட்பே சிறந்தது என்பதை நிரூபிக்கும் உறவுகளுக்கும் மேலாக உயிர் உள்ளவரை தொடரும் நட்புகள் கிடைத்தது மிகப்பெரிய பாக்கியம்.

அதிபர் கனகசபாபதி போன்ற கல்விமான்களின் கனிவான நட்பு, அரசியல் பிரமுகர்களின் அனுசரணையான நட்பு, பத்திரிகை உலகு பரிசாகத்தந்த பல்துறைசார் பண்பாளர்களின் பாங்கான நட்பு யாவரும் சேர்ந்து இன்றைய விழாவை எடுத்து நிற்கின்றனர். ஆயிரம் பேர் எதிர்க்கும் போது உனக்காக அவர்களை எதிர்க்கக்கூடிய நண்பனை வைத்திருப்பதே உனக்குப் பெருமையாகும்.

வெளிநாடு செல்வது என்ற கனவு கூட இல்லாதிருந்த என்னை இங்கு வரவழைத்தது உன் கனவு ''இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்'' என்பது வேதவாக்கியம். கணவரை இழந்து கலங்கி இடம்பெயர்வினால் இன்னலுற்று நின்றபோது அன்புக் கரம் நீட்டி அரவணைத்து, என்னையும் பிள்ளைகளையும்

இந்நாட்டில் வேரூன்றச் செய்தாய் வாழ்க்கைப் பயணமெனும் படகில் துடுப்பாக நிற்கும் துணைவியோடும், நலம் நாடும் நண்பர்களோடும் ஆரம்பித்து நடத்திய பத்திரிகைப் பணியில் 1997ம் ஆண்டில் என்னையும் இணைத்துக் கொண்டாய்.

மனைவி, பிள்ளைகள், அக்கா என்று குடும்பமாக அலுவலகத்தில் நின்றபோது அந்த இடத்தில் ''எஜமானுக்குக் கீழ்ப்படியுங்கள்'' என்ற வார்த்தையின்படி நாங்கள் நின்றோம். ஏனெனில் வியாழக்கிழமைகளில் உனக்கு வேறு முகம் அது ''உதயன்'' பத்திரிகையில் பணியாற்றுபவர்களுக்குத்தான் தெரியும். அந்த மாறுபட்ட முகத்தின் ஏற்ற இறக்கங்களுக்கு ஈடு கொடுத்து நிற்கும் இல்லத்தரசிக்கும் இந்த இடத்தில் ஒரு புகழ்மாலை சூடத்தான் வேண்டும்.

கோபம் மனதில் இருக்கக்கூடாது. வார்த்தையில் தான் இருக்கவேண்டும். அன்பு வார்த்தையில் மட்டும் இருக்கக்கூடாது. மனதிலும் இருக்க வேண்டும். அதை உன்னிடத்தில் கண்டேன். அன்பு இல்லாமல் பேசும் ஆயிரம் வார்த்தைகளை விட உரிமையோடு திட்டும் ஒரு வார்த்தையில் இருப்பதுதான் உண்மையான அன்பு. அந்த அன்பை அனுபவித்தேன்.

இன்று இருபது வயதில் மூன்றாம் தடவையாக வந்து நிற்கும் உனக்கு இனிவரும் காலங்களும் என்றென்றும் இளமையாக, இனிமையாக அமைய வாழ்த்துகின்றேன்.

நேற்று என்பதைப் பிடிக்கமுடியாது. நாளை என்பதைக் கணிக்கமுடியாது. இன்று என்பதை அழிக்க முடியாது - ஆனால், உன்னால் நாளை என்பதை உருவாக்க முடியும். இன்றைய நாளைப் பெயரிட முடியும். இனிவரும் நாட்களை நினைத்துப் பார்க்க வைக்கமுடியும். வெற்றியில் பணிவும், தோல்வியில் பொறுமையும் எதிர்ப்புகள் மத்தியில் துணிவும் கொண்டு, எது வந்தாலும் நம்பிக்கையுடன் வாழ வாழ்த்துக்கள்.

''குணசாலியான ஸ்திரீ புருஷனுக்கு கிரீடம்'' ''பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம்'' அன்பான குடும்பத்தாருடன் மகிழ்வான தருணங்கள் மலரட்டும் இனிமையாக. நெகிழ்வான நேசங்கள் தொடரட்டும் இளமையாக. ''ஆயிரம் தடவை உன் வாழ்க்கை உன்னை அழவைத்தால் ஆயிரம் வழிகளில் நீ சிரிப்பதற்கு வழிதேடு''

பேனா முனையில் பெரும் போர் தீட்டி அன்பிலே நண்பனை வென்று, களத்திலே எதிரியை வென்று, பண்பிலே சபையை வென்று பல்லாண்டு வாழ பாசமுடன் வாழ்த்தும்

**அக்கா - மகாலட்சுமி இலட்சுமணசாமி**
**மருமக்கள்: சஞ்சீவன் - வாசுகி, சஞ்சயன் - சுரேந்தினி, சங்கீதா,**

# என் தம்பி "குஞ்சு"வின் மணிவிழா
## சின்னண்ணின் வாழ்த்துமடல்



என் தம்பிக்கு அகவை அறுபது. இச்சந்தர்ப்பத்தில், அவரைச் சகல சௌபாக்கியங்களும் பெற்று, நலமுடன் இன்னும் பல ஆண்டுகாலம் வாழ்ந்து தனது துறையில் மேலும் பல சிறப்புகளைப் பெறுவதுடன், பொதுச் சேவைகளிலும் அவர் ஈடுபட்டு மானிடப்பிறவி எடுத்ததன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள எமது குல தெய்வம் பாத்திரகாளி அம்பாள் அருள் புரிய வேண்டி, நானும் அவரை இதய சுத்தியுடன் வாழ்த்துவதில் மகிழ்வும், மனநிறைவும் அடைகிறேன்.

இரண்டாவது மூத்த சகோதரன் என்ற முறையில், அவரோடு பல ஆண்டுகள் வாழ்ந்து, பழகிய காலங்களில், நான் ரசித்த, வியந்த, பாராட்டக் கூடிய பல சம்பவங்களை நான் எண்ணிப் பார்க்கையில் மிகவும் மன நிறைவும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

எனது தம்பியும், மணிவிழா நாயகனுமாகிய லோகேந்திரலிங்கம் இன்றும் போல் அன்றும் விடாமுயற்சியுடன் கூடிய சுறுசுறுப்புள்ளவராகவே திகழ்ந்தார். மாணவர்களாக நாம் இருந்த காலங்களில் கிரிக்கட், ஹாக்கி, கால்பந்தாட்டம் போன்ற விளையாட்டுகளில் கூடுதலாக ஈடுபடுவோம். இவர் பந்து வீச்சாளராக, கோல் காப்பாளராக எல்லாம் விரும்பி வியையாடுவார். இவரது விளையாட்டு "ஸ்டைல்" எல்லோரையும் கவர்ந்தது. இதனால் ஒவ்வொரு குழுவும் அவரைத் தங்கள் பக்கம் எடுக்க போட்டி போடுவார்கள்.

நாங்கள் படித்த காலத்தில் Azees என்ற ஒரு திறமையான Goal keeper இருந்தார். அவரது பந்து பிடிக்கும் திறமை, ஸ்டைல் அபாரம். அந்த ஸ்டைலை லோகேந்திரலிங்கம் செய்யும் போது நான் உட்பட எல்லோரும் ரசிப்போம். அந்தக் காலத்தில் சுழல் பந்து வீசுவதில் எல்லாம் தனது திறமையைக் காட்டி மற்றவர்களை மகிழ்விப்பார். இவையெல்லாம் நாங்கள் யாழ்ப்பாணம் வருமுன்னர் பதுளை நகரில் நடந்தவை

1964ல் நாங்கள் யாழ்ப்பாணத்தில் இடம் மாறி வந்த பின், எங்கள் **"சுழிபுரம் மாமியின்"** வற்புறுத்தலால் இவர் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் தனது படிப்பைச் சில காலங்கற்று, பின்னர் மேல் வகுப்புக் கல்வியை யாழ்-பரமேஸ்வராக் கல்லூர்ரியில் கற்று முடித்தார்.

தொழில்நுட்பக் கல்வியில் தேர்ச்சி பெற்று இவர் தொழில் நுட்ப உத்தியோகத்தராக, மட்டக்களப்பு, ஊர்காவற்துறை பிரதேச சபைகளில் சிறப்பாகக் கடமையாற்றிய அதே வேளையில் **"போலிகள்"** என்ற கவிதைத் தொகுப்பையும், **"கீற்று"**, "**மாற்று"** போன்ற சஞ்சிகைகளை எனும் சஞ்சிகையையும் வெளியிட்டமை இவரது எழுத்துத்திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்

1990ல் கனடாவிற்கு சென்ற இவர் தனது முயற்சினால் தனக்குப் பிடித்த பரீட்சமான பத்திரிகைத்துறையில் கால் பதித்து, இன்று மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார். தனது சிறப்பாற்றலினால் பல நூற்றுக்கணக்கான பிரமுகர்களையும் நண்பர்களாக்கிக் கொண்ட அதேவேளை கனடாவில் மிக முக்கிய பிரமுகர்களில் ஒருவராகவும் இவர் திகழ்வது எமக்கு பெருமையைத் தேடி தந்துள்ளது. அவரது வளர்ச்சிக்கு உதவியாக மனைவி பிள்ளைகள் உறுதுணையாக இருக்கிறார்கள்.

இவ்வேளையில் அவர் தலைநிமிர்ந்து தங்கமென தரணியிலே வாழ்ந்திட எனது குடும்பத்தோடு சேர்ந்து அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்

**ஜேர்மனி, பேர்லினிலிருந்து.**

**பாசமுள்ள சகோதரன் நாகமணி தேவதாஸ்,**

**துணைவியார் மணி மற்றும் பிள்ளைகள்.**

# கலைஞனை மதிக்கும் பத்திரிகையாளன்




மலையகத்தில் தாய் தந்தையார் வாழ்ந்து வந்ததால் தம்பி லோகேந்திரலிங்கம் அவர்களும் அக்காற்றை முதன் முதல் சுவாசிக்கத் தொடங்கி, அதன் பின் சொந்த ஊராம் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் குடியேறி, படிப்பின் நிமித்தம் தலைநகர் கொழும்பில் வாழ்ந்து, வேலையின் நிமித்தம் கிழக்கு இலங்கையில் பணிபுரிந்து, இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் காலூன்றி, துணைதேடி எனது அயலூராம் சுருவில் நாடி வந்தார். வந்தவர் அவ்வூரின் மருமகனாய் மட்டுமல்ல அவ்வூர் மக்களின் மகனாக மாறி விட்டார். அதனால் அவ்வூர் மக்கள் அத்தான் என்று அழைப்பதை நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன்.

இவரை ஓர் கவிஞனாக, பத்திரிகையாளனாக, எழுத்தாளனாகப் பலர் பார்த்திருக்கலாம். ஆனால் நான் பார்ப்பது ஓர் கர்நாடகஇசை ருசிபார்க்கும் இசைக்கலைஞனாக. இசைக்கச்சேரி எங்கு நடந்தாலும் முன் வரிசையிலிருந்து கேட்டு ரசிப்பார். அத்தோடு நிகழ்ச்சி முடியும் வரை அமர்ந்திருந்து பாராட்டிச் செல்கின்ற பண்பும் என்னைக் கவர்ந்து கொண்டது. அத்துடன் இவர் எதையும் நேராகச் சொல்லுபவர். கண் பார்த்துப் பேசுகிறவர்கள் உள்ளத்தில் களவு இல்லை என்பார்கள். அதே போல் லோகன் அவர்களும் கண்பார்த்துப் பேசுவார். என்னையும் என் போன்ற கலைஞர்களையும், வளர்ந்துவரும் இளங்கலைஞர்களையும் உற்சாகப்படுத்துவதும், கலைஞர்கள் அழைக்கும் நிகழ்ச்சிகளுக்கு வந்து புகைப்படங்கள் எடுத்து அடுத்த வார உதயன் பத்திரிகையில் நாம் பார்த்து மகிழச் செய்பவரும், கலைக்காக எப்பொழுதும் சேவை செய்யும் தம்பி லோகன் மணிவிழாக் காண்பதோடு இன்னும் நூறாண்டு வளமோடு வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

இன்னிசை வேந்தர்
**பொன். சுந்தரலிங்கம்**
இளங்கலைஞர் மன்றம்

## வாழ்க பல்லாண்டு
## வாழ்க வளமுடன்



R N லோகேந்திரலிங்கம் என்றால் இன்று தமிழ் உலகில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. தனது தன்னம்பிக்கை, கடின உழைப்பு போன்ற நற்குணங்களால் உயர்ந்து நிற்கும் என் நண்பனுக்கு மணிவிழா கண்டு மகிழ்கிறேன்.

"நட்பின் நாயகன்" என்று கவிப்பேரரசு வைரமுத்துவால் மகுடம் சூட்டப்பட்டதற்கு இணங்க நட்புக்கு இலக்கணமாக விளங்குபவர். ஒரு மிகச்சிறந்த பத்திரிகையாளன் மட்டுமல்ல, மிகச் சிறந்த படைப்பாளியும் கூட. கனடாவில் தமிழ்ப் பத்திரிகை துறை வளர்ச்சியில் இவரது பங்களிப்பு அளப்பரியது.

நான் மனம் விட்டுப் பேசும் நல்ல நண்பர்கள் வரிசையில் லோகனுக்கு எப்போதும் முதல் வரிசை வழங்குவேன்.

இதுபோல் அவரது குடும்ப விழாக்களோ, பத்திரிகை சம்பந்தமான விழாக்களோ எது நடந்தாலும் எனக்கும் முதல் வரிசை காத்திருக்கும். தனது பல உயர்ந்த, சிறந்த விழாக்களில் என்னை இவர் பெருமைப்படுத்தி இருக்கிறார். இதனால் என் நன்றி எப்போதும் உணர்கிறேன்.

நாம் ஒரே அணி என்பதால் சோதனைகளை இறைவன் அருளால் சாதனைகளாக்கி வெற்றி பெற்றுள்ளோம். இந்த வெற்றிகள் தொடர

வாழ்க பல்லாண்டு
வாழ்க வளமுடன்
எல்லாம் வல்ல கடவுள் துணையுடன் என்று
குடும்பத்தினருடன் மனம் நிறைந்து வாழ்த்தி மகிழ்கிறேன்
என்றும் அன்புடன்

**நடா சு ராஜ்குமார்**
**அதிபர்**
**உலகத் தமிழ் வானொலி**
**கீதவாணி**

## வியக்க வைத்தவர்.



"மலையன்பன்" என்ற கவிஞன் கனடிய நீரோட்டத்தில் கலந்து இன்று "உதயன்" என உலகம் வியக்க நிற்கிறார்.

"வியக்க வைக்கும் கனடிய தமிழர்கள்" என்று 100 பேரை வரிசைப்படுத்தினால் ஆர்.என் லோகேந்திரலிங்கம் அவர்களிற்கு முன் வரிசையில் இடமுண்டு.


வெளிநாட்டில் இருந்து வரும் அறிஞர்கள், அரசியல்வாதிகள், தென்னிந்திய திரையுலக ஜாம்பவான்கள் அனைவருக்கும் பத்திரிகையில் மட்டும் களம் அமைக்காது, கனடிய மண்ணிலும் களமிறக்கி வரலாறு படைத்தவருக்கு இன்று 60 வயது பதிவாகிறது.

வாழ்த்த வயதில்லை வாழ்த்துகின்றேன்.

என்றும் அன்புடன்
**உங்கள் செந்தி.**
15.04.2013

# நெருப்பாற்றில் கயிறு கட்டி நடந்தவர் நம் விழா நாயகர் !

**லேனா தமிழ்வாணன் & ரவி தமிழவாணன்**



1983இல் ஏற்பட்ட மிகப்பெரிய மனித நேயச் சோதனையில், வாழும் திசையும், களமும், வழியும் அறியாது புறப்பட்டுப் பல்வேறு திசையில் பறந்தன இலட்சக்கணக்கான தமிழ்ப் பறவைகள். தமிழ்ச் சமுதாயம் ஓர் அறிவார்ந்த சமுதாயம். நூலாம்படையை அது நூலாக்கும் வலிமை படைத்தது. நூலைக் கயிறாக்கும். பின்னர் அக்கயிற்றையே தாம்புக் கயிறாக மாற்றும். இதோடு விடுமா? தாம்புக் கயிற்றைக் கொண்டு தேரை இழுக்கும் வடமுமாகவும் ஆக்கும்.

இதை உலகெங்கும் வாழும் எட்டு இலட்சத்திற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் அந்நிய மண்ணில் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். நாற்றுகள் தாம் பிறந்த இடத்தை விட புது நிலத்தில் நடப்படும் போதுதான் அவை சிறந்த கதிர்களை வெளிப்படுத்தி நல்ல நல்ல பலன்களையும் தருகின்றன அல்லவா? இன்று தமிழ்ச் சமுதாயம் வேரூன்றி விழுதுகள் விட்டு ஆலமரங்களாய் நெடிது உயர்ந்து நிற்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக, கனடாவில் இன்று வலிமைமிக்க வளமைமிக்க சமுதாயமாகப் புலம்பெயர்ந்த தமிழர்களைப் பார்க்கிறேன். இவர்களுள் செல்வந்தர் பலர். தொழில் அதிபர்களுக்கும் குறைவில்லை. தொழில்நுட்ப வல்லுநர் பலர். சட்டத் தரணிகளும், மருத்துவ அறிஞர்களும், பொறியியல் வல்லுநர்களும் பலப்பலர். ஆனால், இவர்களுள் நாடறிந்த - ஏன் - சற்றே உயர்த்திச் சொல்ல வேண்டுமானால் உலகறிந்த பத்திரிகைத் தமிழர் எத்துணைப் பேர்? ஆனால், **"உதயன்"** இதழையும் இதன் ஆசிரியர் லோகேந்திர லிங்கத்தையும் அறியாத புலம் பெயர்ந்த தமிழர் உண்டா? ஒரு சிறு செயலால் அல்லது சிறு முடிவுகளால் கூடச் சிலரிடம் செல்வம் சேர்ந்து விடுகிறது.

ஆனால் புகழ் இருக்கிறதே, அது அப்படி அல்ல. குருவி தானியம் சேர்க்கிற கதைதான். ஆம். புகழ் மாளிகைகள் சிறுசிறு செங்கல்களாலேயே உருவாக்கப்படுகின்றன. செல்வத்தோடு பிறந்து விடுங்கள் என்று வள்ளுவன் சொன்னதில்லை. செய்க பொருளை என்றுதான் சொன்னான். ஆனால் புகழுக்கு அவன் விதிவிலக்கே தரவில்லையே! புகழோடு தோன்றுங்கள். என்னது! முடியவில்லையா? நீங்கள் பிறக்காமலே இருந்திருக்கலாம் என்று கடுமையாகப் பேசுகின்றான். இணைந்தே இருப்பது - வறுமையும், புலமையும் என்று சிவபெருமான் சொல்வதாக திருவிளையாடல் படத்தில் ஒரு வசனம் உண்டு. அத்தகைய காசு சேராத எழுத்து - இலக்கியம் - பத்திரிகை என்கிற துறையைத் தேர்ந்து எடுத்துக் கொண்டு, இதில் தன்னேரிலாப் புகழையும் (கூடவே செல்வத்தையும்) ஈட்டி கனடியத்

தமிழர்கள் மத்தியில் செல்வாக்கோடு விளங்குகிறார் நம் நாயகர் என்றால் இதைச் சாதாரணமான சாதனையில் அடக்கிவிட முடியாது. மணிவிழா நாயகர் லோகேந்திரலிங்கம் கடந்து வந்த பாதை மலர்ப் பாதையா என்றால் இல்லை. ஆங்கிலத்தின் வழியே உணர்த்துவது என்றால் இது ஒரு Cake Walk அல்ல. கல்லும் முள்ளும் கலந்த கரடுமுரடான பாதை. சந்தனம் பூசி வரவேற்கிற துறையா பத்திரிகைத் துறை? அல்லவே!

சேற்றையும் சந்தனத்தையும் சமமாகக் கருதுகிற மனோபாவம் மட்டும் இத்துறையினருக்கு இருப்பின், தொட்டாலே மரவட்டையாய்ச் சுருண்டுவிடும் மனோபாவம் இருப்பின், தொட்டால் சிணுங்கியாக இருப்பின் இந்த நிலைக்கு வளர்ந்திருக்க இயலுமா? One man army என்று நாங்கள் இளவயதினராக இருந்தபோது ஒரு படம் வந்தது. அப்படிப்பட்ட தனி மனிதப் போராளி இந்த மணிவிழா நாயகர். விடுதலை இயக்கங்களுக்கும், மக்களின் உணர்வுக்கும், அரசின் கட்டுப்பாடுகளுக்கும் நடுவே ஒரு பத்திரிகை நடத்துவது என்பது நெருப்பாற்றின் மீது கண்கட்டியும் கயிறு கட்டியும் நடக்கும் அரிய வித்தைதான். அங்குலம் பிசகினாலும், அடி சறுக்கினாலும் கதை கந்தல்தான். இவ்வளவு சிரமங்களுக்கிடையே இன்று செல்வாக்கு மிக்க மனிதராக மக்களின் மத்தியில் கருத்தைப் பிரதிபலிப்பவராக, மக்கள் மத்தியில் கருத்தேற்றம் நிகழ்த்துபவராக தம் அரிய பணியை வற்றாது வறளாது செய்து வருகிறார். இவ்வரிய பணியில் திருமதி. பாப்பா லோகேந்திர லிங்கத்தின் பணி அரிது மட்டுமல்ல, பெரிதும் உருப்படியானதுமாகும். இதென்ன? எங்கோ நின்று கொண்டு இருக்கும் நாங்கள் இப்படி எப்படி பார்த்த மாதிரிச் சொல்கிறோம் என்கிறீர்களா? சொல்கிறோம். தமிழகம் வரும்போது மணிவிழா நாயகரிடம் " நீங்கள் பாடு வந்து விட்டீர்களே, யார் பார்ப்பார்கள் இதழை?'' என்று கேட்டால், "அவுங்க - அதான் என் வீட்ல பார்த்துப்பாங்க'' என்பார். "என்ன சார் இது? இப்படி சர்வ சாதாரணமா சொல்றீங்க? எந்தப் பத்திரிகை ஆசிரியரின் மனைவி இப்படிப் பார்க்கிறார்? அதுவும் இல்லத்தரசி - மூன்று குழந்தைகளின் தாய் ஒரு பத்திரிகையைப் பார்த்துக் கொள்வது அவ்வளவு சுலபமா என்ன?'' "அதெல்லாம் கூடவே இருந்து பார்த்தவங்கதானே? அவுங்களுக்கு எல்லாம் தெரியும்'' என்பார் சர்வ சாதாரணமாக. எட்டாம் ஆண்டு "உதயன்' ஆண்டு விழாவிற்கு நாங்கள் டெரோண்டா நகருக்கு வந்த போது, ஸ்காா்ப்ரோ பள்ளியில் இது நடந்தவிதம் பார்த்து அசந்து போனோம்; மிரண்டு போனோம் என்றும் சொல்லலாம். பாராளுமன்ற உறுப்பினர் வந்து இவ்விழாவில் பேசியபோது லோகேந்திரலிங்கம் பற்றிய எங்கள் கணிப்பு சரிதான் - இல்லையில்லை - இன்னும் இனி உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. சிறந்த மனித நேயர். செய்கிற உதவிகளை எப்போதுமே பெரிதுபடுத்திப் பேசமாட்டார். அதை நினைவு படுத்தியும் குத்திக்காட்டியும் பேசவே மாட்டார்.

தாயாக அன்பு ஒரு புறம் என்றால் தமிழகத்தின் மீதும் தனி அன்பு உள்ளவர். பல தமிழகப் பிரபலங்களை கனடிய மேடைகளில் அறிமுகம் செய்து அவர் திறமைக்கு நல்ல வடிகால் அமைத்துக் கொடுத்து இதன் வழியே கனடா வாழ் தமிழர்களை இன்புறுத்தும் செயலில் அடங்கா ஆர்வம் காட்டி வருகிறார். பல்துறை சாதனையாளர்களுக்கு விருது வழங்கி அவர்களைக் கௌரவப்படுத்துவதில் அலாதி இன்பம் காண்பவர். உள்ளூர்த் திறமையாளர்களையும் அரங்கேற்றிப் பார்த்து அவர்களைத் தட்டிக் கொடுப்பதிலும் அங்கீகரிப்பதிலும் அலாதி அன்பு இவருக்கு. பலாப் பழமாய்க் காட்சியளிப்பார். இதை

வைத்து சற்றுக் கடுமையான மனிதர் இவர் என எவரும் முடிவிற்கு வந்தால் அவர்கள் தவறு செய்பவர்களாகி விடுவார்கள். அன்பெனும் சுளையை வெளிப்படைத் தன்மை எனும் முட்களால் போர்த்தி வழங்குபவர் லோகேந்திரலிங்கம். இது இவரைக் கறார் பேர்வழியாகக் காட்டினால் இவர் தவறல்லவே! கனடா வாழ் தமிழர்கள் இடையே நாடி நரம்பாக, இரத்த நாளமாக இருந்து அவர்களுக்கு இடையே நட்புப் பாலமாக அமைத்து அவர்தம் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் வழிவகுத்து வருபவர் லோகேந்திரலிங்கம். "உதயன்' இயங்காத கனடிய தமிழ்ச் சமுதாயத்தை எண்ணிப் பார்க்கவே அச்சமாக உள்ளது. ஒரு மாபெரும் வெற்றிடம் ஏற்பட இருந்த நிலைமையை மாற்றி தமிழர்களை இணைக்கும் இணைப்புப் பாலமாய் பல்வகை மலர்களை ஒன்றுசேர்த்து பூச்சரங்களாகவும் மாலையாகவும் ஆக்கும் ஒப்பற்ற பணி இத்தமிழரால் நடந்து வருகிறது. எப்போதும் தமிழகம் வந்தாலும் எங்கள் இருவரையும் தொடர்பு கொண்டு பேசாமலோ, சந்திக்காமலோ இருக்கமாட்டார். கண்டிப்பாகத் தொலைபேசியிலும் பேசிவிடுவார்.

மணிவிழா நாயகரின் கடந்த பயணத்திற்கு முன்பு நிகழ்ந்த தமிழகப் பயணத்தின்போது எங்கள் சந்திப்பு நிகழ்ந்தது. அவ்வமயம் திரைப்பட நடிகை சிநேகாவின் திருமணம் - புதிதாகத் திறக்கப்பட்டிருந்த தமிழகத்தின் முதல் ஏழு நட்சத்திர ஓட்டலான கிராண்ட் சோழாவில் நிகழ்ந்தது. சிநேகாவை, அவரது கலைவாழ்விற்கு முன்பாகவே சிறுமியாக நாங்கள் அறிவோம் என்பதால் தன் திருமணத்திற்கென எங்களுக்கும் சிறப்பு அழைப்பு விடுத்திருந்தார். "கனடாவைச் சேர்ந்த எங்கள் பத்திரிகை உலக நண்பர் "உதயன்' லோகேந்திரலிங்கம் வந்திருக்கிறார். அவரையும் அழைத்து வரலாமா?'' என அவரிடம் கேட்க, "என்ன இப்படியெல்லாம் கேட்டுக்கிட்டு? அழைச்சிட்டு வாங்க'' என்றார். சரியென்று மணிவிழா நாயகரும் நாங்களும் சென்றோம். "கனடாலேர்ந்து வந்திருக்கார். தமிழர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குள்ள பத்திரிகை "உதயன்'. அதனோட ஆசிரியர்'' என்றதும் செயற்கை சேர்க்காத உண்மையான மகிழ்ச்சியை சிநேகாவும், பிரசன்னாவும் வெளிப்படுத்தினர். நீங்கள் வந்ததுல எங்களுக்கு ஒரு கூடுதல் சந்தோஷம் என்று லோகேந்திரலிங்கத்திடம் சொல்ல, எதற்கும் அலட்டிக் கொள்ளாத தனக்கே உரிய பாணியில் "எனக்கும் ரொம்ப மகிழ்ச்சி. லேனாவுக்கும், ரவிக்கும்தான் இதுக்கு நாம நன்றி சொல்லணும்'' என்றார்.

எல்லோருக்கும், "வணக்கம்'', "மகிழ்ச்சி'', "நன்றி'', "சாப்பிட்டுவிட்டுப் போங்க'' என்று சிக்கன வார்த்தைகளைப் பேசிய சிநேகா - பிரசன்னா தம்பதி எங்களிடம் மட்டும் ஒருசில நிமிடங்கள் உரையாடினர். கணவர் பிரசன்னாவிடமும், மணி விழா நாயகரையும் எங்களையும் மாறி மாறிப் பார்த்தபடி, "லேனா சார்தான் எனக்கு முதல் முதல்ல கேடயம் கொடுத்தார். 1992இல் ஷார்ஜா தமிழ்ச் சங்கத்தில் நான் உட்பட நிறையப் பேர் நடனமாடியபோது சார்தான் தலைமை விருந்தினர். ஏதோ களேபரத்தில எனக்கும் மட்டும் கேடயம் கொடுக்க விட்டுப் போச்சு. எனக்கு மட்டும் எப்படிக் குடுக்காமப் போகலாம்னு நான் ஒரே அடம்; அழுகை. அப்புறம் லேனா சார் பேசி முடிச்ச பிறகு கடைசியா எனக்குக் கேடயம் கொடுத்தார். அதை மறக்கவே முடியாது. எவ்வளவோ கேடயங்கள் வந்தாலும் இதை மட்டும் என் ஷோ கேஸ்லேர்ந்து எடுக்கவே கூடாதுன்னு அப்பாகிட்ட சொல்லியிருக்கேன்.'' என்று சிநேகா சொல்ல, பிரசன்னா வேறு தன் பங்கிற்குச் சேர்ந்து கொண்டார். "நான் உங்களோட புத்தகங்களின் இரசிகன் சார். இவற்றைப் படிச்சு வளர்ந்தவன் சார்'' என்றார்.

எல்லோரிடமும் சொல் சிக்கனம் காட்டிய சிநேகா - பிரசன்னா தம்பதி இந்த லேனா-ரவி சகோதரர்களிடமும், சூட் அணிந்த காவல்துறை அதிகாரி போல் நெடிய பெரிய ஆளாய்த் தோற்றமளிக்கும் இவரிடமும் (நம் விழா நாயகரைத்தான் குறிப்பிடுகிறோம்!) மட்டும் என்னதான் இப்படி வளவளவென்று (?!) பேசுகிறார்கள் என்று வைத்த கண் வாங்காத பார்வையாளர் கூட்டம் முழுக்க, ஹம்ம் நகருங்க நகருங்க' என்று பார்வையால் மேடைக் கூட்டத்தை நகர்த்தும் இருவர் ஸ்தம்பித்து நிற்க, நடந்த உரையாடல் என்ன என்பதை மணிவிழா நாயகர் சாட்சியாக பேசியவற்றை மக்களிடம் போட்டுடைத்து விட்டோம். விழாவிற்கு வந்த பல்வேறு நட்சத்திரப் பிரமுகர்களிடம் அறிமுகப்படுத்தி வைத்தபோது அவர்கள் நம் மணிவிழா நாயகருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள விரும்பியது எங்களுக்கு வியப்பைத் தந்தது. கனடா சென்றால் இவர் அறிமுகம் நமக்குப் பெரும் பலம் என்று சிலர் நினைத்திருக்கலாம்.

இந்தக் காலகட்ட "உதயன்' இதழில் இத்தருணத்தில் எடுக்கப்பட்ட படங்கள் வெளியானதை நம் தமிழன்பர்களுக்கு அன்புடன் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இடியே விழுந்தாலும், "என்ன சத்தம் அங்கே?'' என்று சாதாரணமாகத் திரும்பிப் பார்க்கும் மனோதிடம், மகிழ்வையும், துன்பத்தையும், அதிக வேறுபாடு காட்டாமல் ஜீரணிக்கும் தன்மை, குடும்பத்தினரிடம் மாறாப் பாசம், தொழிலை உயிராய் நேசிக்கும் சுபாவம், நட்பிற்குத் தரும் இமாலாய முக்கியத்துவம், எப்போதும் நிரம்பி வழியும் நகைச்சுவை உணர்வு... ஆகியவை மணிவிழா நாயகரைப் பற்றிய நினைவுகளை அசைபோடுகிறபோது நினைவிற்கு வருகிற நல்ல அம்சங்கள். இவர் அடிக்கடி பயன்படுத்தும் இரு வார்த்தைகள் "நல்ல விஷயம்!' விழா நாயகர் சிறந்த பாடகர் என்பது பலருக்குத் தெரியாது.

ஆனால் நாங்கள் அறிந்து வைத்திருக்கிறோம். இவருக்குப் பிடித்த பாடலைச் சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்: "சாட்டர்டே நைட் பார்ட்டிக்கு போகலாம் வர்றீயா?'' பிறந்த நாள்களின்போது எல்லோரும் நீண்ட ஆயுள் வாழ வேண்டும் என்றே வாழ்த்துகிறார்கள். நீண்ட ஆயுள் அவசியம்தான். ஆனால் இதற்கு இணையாக நல்ல உடல் நலமும் தேவை. எனவே இந்த இரட்டைச் செல்வங்களோடு தமிழ்ச் சமுதாயத்திற்குத் தம் "உதயன்' வழியே உதயசூரியனாய் (கட்சி இல்லைங்க!) தொடர்ந்து தொண்டாற்றி மங்காப் புகழோடு வாழ வாழ்த்துகிறோம். "லோகேந்திரலிங்கம் சார்! உங்களுக்குப் பின்னால் 60-ஐத் தொட நாங்களும் ஓடிவந்து கொண்டிருக்கிறோம். எங்கள் இருவரின் மணி விழா மலர்களுக்குக் கட்டுரைகள் கேட்க இருக்கிறோம் என்ற மகிழ்வான விண்ணப்பத்தை இப்போதே சொல்லி எங்கள் இருவரின் இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்து நிறைவு செய்கிறோம்!

# திரு லோகேந்திரலிங்கம் அவர்களுடைய அகவை அறுபதின் வாழ்த்து



அகவை அறுபதில் தோன்றும் சுடரொளியே நீ வாழ்க!
பேசுந் தமிழின் பெரும் பொருளை எழுத்தாய் உலவ விடும்
வாசத் தமிழ் மலரின் தலைவனே நீ வாழ்க!
எங்கே தமிழ் என்று எம் தமிழர் தேடுகையில் ஒன்பதிரண்டு ஆண்டுகளாய்
இங்கே தமிழென்று ஏட்டினிலே வடித்தவனே நீ வாழ்க!
நாடு மொழி நாடாது பேடிகள் போல் வாழ்பவரை
நாடும் மொழியும் இதுதானென்றியம்பும்
நல்லதொரு பத்திரிகையின் நாயகனே நீ வாழ்க!
அகவை அறுபதில் தோன்றும் சுடரொளியே நீவாழ்க! நீடு வாழ்க!

வந்தாரை வாழவைக்கும் கனடா மேற்தொடங்கி
ஊருலகம் சுற்றிவரும் சூரியனின் உதயமே!
இந்திர லோக முதல் சந்திர மண்டலத்தின்
செய்திகளாய் கொடுப்பவனே லோக இந்திர லிங்கமே!
அகவை அறுபது ஆண்டுக்கு மட்டுந்தான் அது உனக்கல்ல
என்றும் சுடரொளிரும் கதிரவனின் சுடரொளியாய் நீ வாழ்க!
காலக்கடல்கடந்து நற் குடும்பமெனும் சோலையிலே
மனைவி நன்மக்களென வாழுகின்ற சோதரனே நீ வாழ்க!
அகவை அறுபதில் தோன்றும் சுடரொளியே நீ வாழ்க! நீடு வாழ்க

தொட்டதெல்லாம் பொன்னாகத் துலங்கிட வேண்டும்
பட்ட துன்பமெல்லாம் பனியாகக் கரைந்திட வேண்டும்
தானென்று அகந்தை கொண்டோர் தலைசாய்க்கும் உன்பணிக்கு
ஈடாக ஒருவரில்லை இணைசொல்ல யாருமில்லை
உடலுக்குப் பாலூட்டும் தாய்போல ஆன்றதமிழுக்கு
பாலூட்டி உயிரூட்டி வாழவைக்கும் உன் சேவை
சொல்லாலும் பொருளாலும் எழுத்தாலும் என்றும் உயிர்வாழும்,
காலங்கள் மறைந்தாலும் மறையாது உன் சேவை!
அகவை அறுபதில் தோன்றும் சுடரொளியே நீ வாழ்க! நீடுவாழ்க!

அன்புடன்
**சகோதரன் திரு. அ. நடராசன்**
**சகோதரி திருமதி. வசந்தா நடராசன்**

# நல்ல சகோதரன்! லோகன்!!

நாடு விட்டு நாடு வந்து!
நான் சேர்த்ததெல்லாம் நட்புத்தானே

நண்பர்கள் பலர்
நாளடைவில் சொந்தம் ஆயினர்
சோதரர் போல் உறவு கொண்டாடினர்
ஏலம்போகா நட்பின் அடையாளமே இதுதானே

நலம் கேட்பதும் பலம் சேர்ப்பதும்
நட்புக்கு இலக்கணமாயிற்றே
காணுமிடத்தில் கைலாகு கொடுப்பதா நட்பு
கனவிலும் ஒருமுறை வருவதே நட்பு

மேற்சொன்னதெல்லாம்
இவனுக்குப் பொருந்தும் என்பேன்
நண்பன் என்றாலும் "அண்ணை" என்று
அழைப்பது இவன் என்னை

நான் கேட்ட நல்லவற்றை என்றும்
யான் செய்வேன் என்று முடிப்பான்
ஏன் என்று கேட்பதில்லை
பொன் சிரிப்பே பதிலாகும்

நாடுவிட்டு நாடுவந்து
பெற்ற நல்ல சோதரன்
லோகன்!

**தம்பையா ஸ்ரீபதி**

# பன்முக ஆளுமையாளன்



கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. ஆர். என் லோகேந்திரலிங்கம் அவர்களது 60வது பிறந்தநாளில் எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

புலம்பெயர் மண்ணில் வந்தோம், வாழ்ந்தோம் என்றிராமல் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கி கனடாவின் மூன்று மட்ட அரசியல் தளங்களிலும் சிறப்பான ஒரு இடத்தை பெற்றது மட்டுமன்றி சிறந்த நட்புரிமையுடன் வாழும் ஒரு பத்திரிகை ஆசிரியராக பலருடைய இதயங்களிலும் நிறைந்தவராக இருக்கின்றார். இரண்டு தசாப்தங்களை தாண்டிய அவருடைய பணிகளில் கடந்த ஆறு ஆண்டுகள் அவரோடு சேர்ந்து பல பணிகளில் இயங்கி வந்தவன் என்ற உரிமையில் ஒரு சிறந்த பத்திரிகை ஆசிரியராக, சிறந்த சமூகப் பணியாளனாக, சிறந்த பேச்சாளனாக, சிறந்த ரசிகனாக, சிறந்த நகைச்சுவையாளனாக, சிறந்த குடும்பத் தலைவனாக, தனது பேரக்குழந்தைகளுடன் பாசம் நிறைந்த தாத்தாவாக கடவுள் நம்பிக்கை நிறைந்த ஒரு ஆன்மீகவாதியாக, உதவி நாடி வருபவர்களுக்கு சிறந்த வள்ளலாக, எடுத்த கருமத்தை முடிப்பதில் சிறந்த செயல்வீரனாக, வயது முதிர்ந்தவர்களுடன் மரியாதையுடன் பழகும் சிறந்த பண்பாளனாக இப்படி பன்முக ஆளுமை படைத்த ஒருவராக திரு. லோகன் அவர்களை நான் பார்க்கிறேன். Toronto Voice of Humanity ரொறன்ரோவின் மனிதாபிமானக் குரல் என்ற அமைப்பு திரு. லோகேந்திரலிங்கம் அவர்களின் எண்ணக்கரு. தனி மனிதனாக பணிகள் செய்வதை விட ஒரு அமைப்பு ரீதியாக செயல்படுவது பலம் மட்டுமல்ல பலருக்கும் இலகுவாக பல உதவிகளை செய்யலாம் என்ற உணர்வோடு உணர்ந்து அவரால் உருவாக்கப்பட்ட நிறுவனம், ரொரன்றோவின் மனிதாபிமானக்குரல்.

பல்வேறு விதமான மனிதாபிமானப் பணிகளில் அவரோடு சேர்ந்து இயங்கிய போது அவரது துணிவு, அவருடைய பலம், அவருடைய நேர்மை, அவருடைய விடாமுயற்சி, தொடங்கிய விடயங்களை முடிக்கும் மனோபாவம் பொதுப்பணிகளில் தான் மட்டுமல்ல, தனது பிள்ளைகளைக் கூட இணைக்கும் மனப்பான்மை ஆகியவற்றை பல நிகழ்வுகளில் நான் பார்த்திருக்கின்றேன்.

எமது சமூகத்தில் நல்ல நல்ல பணிகள் நடைபெற வேண்டுமென என்றும் விரும்பும் திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் சீரோடும் சிறப்போடும் நிறைந்த புகழோடும் வாழ வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

அன்புடன்

**வி.சு. துரைராசா**

# திரு. லோகேந்திரலிங்கம்
# மனங்களை ஆளும் மனிதாபிமானி!



1994 நாங்கள் கனடா வந்த புதிது. திரு. லோகேந்திரலிங்கம் நண்பர் ஞானேந்திராவுடன் எமதில்லத்துக்கு வந்து சந்தித்தார். அப்போது எங்கள் கலை, இலக்கிய ஈடுபாடுகள் பற்றியே அவர் அதிகம் பேசினார். சூரியன் பத்திரிகையை அதன் பிரதம ஆசிரியராய் இருந்து அவர் நடாத்தி வந்த வேளை அது.

தாயகத்தில் யுத்த அனர்த்தங்களால் நாங்கள் பட்ட அனுபவங்களையும் அகதிகளாக அலைந்த வாழ்க்கையையும் "சூரியனுக்கு" எழுதுமாறு அவர் வேண்டினார். அந்த வகையில் "ஓர் ஈழத்து அகதியின் மனப்பதிவுகள்" எனும் பெயரில் எனது கட்டுரைகள் சூரியன் பத்திரிகையில் 56 வாரங்களுக்கு மேல் பதிவாகி வந்தன. தொடர்ந்தும் எனது சில ஆக்கங்கள் அவரது சூரியன், உதயன் பத்திரிகைகள் இரண்டிலுமே வந்தன. அவரது பத்திரிகைகளின் ஆண்டு விழாக்களின் இசை நிகழ்ச்சியிலும், கவியரங்கங்களிலும் நான் பங்கெடுத்திருக்கிறேன். கவிஞர் வைரமுத்து அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட விழாவில் ஒரு கலைஞனாக அதன் சிறப்பு அதிதியாக என்னையும் அவர் கௌரவப்படுத்தியிருந்தார். எமது கவின் கலாலயாவின் கலை முயற்சிகளில் எல்லாம் அவரது பிரசன்னமும் பத்திரிகை சார்ந்த ஆதரவும் என்றுமே இருந்து வந்துள்ளன.

ஒரு பத்திரிகை ஆசிரியர், ஊடகவியலாளர் என்பதற்கும் அப்பால் அவர் மக்களை நேசிக்கும் பாங்கும், மக்களில் ஒருவராக மக்களுடன் எளிமையாகப் பழகும் பாங்கும், துயருற்றோர்க்கு உதவும் பாங்கும் போற்றுதற்குரியன. இதனால் நிறைந்த நண்பர்களை எல்லா மட்டங்களிலும் அவர் சம்பாதித்திருக்கின்றார்.

திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் மார்க்சிய சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர். ஆற்றல் மிகுந்த ஒரு கவிஞர். பொதுச் சேவையாளர். சமூகத்தில் உயர்ந்தோரைக் கௌரவிப்பதில் முன்னிற்பவர். சிறந்த சாதுரியம் கொண்ட சாதனையாளர். எமக்கெல்லாம் நல்ல நண்பர்.

அவரை வாழ்த்துவதில் எமது குடும்பமும், எமது கவின் கலாலயா கலைக் கல்லூரியும் பெருமை அடைகின்றன.

**வயிரமுத்து திவ்யராஜன்**

# அன்பும் அறனும் பூண்ட திரு. என். லோகேந்திரலிங்கம் வாழ்க பல்லாண்டு!



தான் பிறந்து தவழ்ந்து கால் பதித்து நடந்த தாய்மண்ணை விட்டுப் பிரிந்தாலும் தரணியின் இன்னொரு பால் தாய்நாட்டின் சுகங்களை மணங்களை வீசச் செய்யும் பணியின் முக்கிய உழைப்பாளியான "லோகன்" அவர்கள் தாய்நாடு, தாய்மொழி, அதன் இலக்கியவளம் என்பவற்றின் விதையை ஊன்றி வளர்ச்சி காண்பதில் பெரும் வித்தகர்.

இந்த வித்தையை அவர், தான் கனடாவில் காலூன்றிய நாளிலிருந்து இன்றுவரை வருடாவருடம் பல சிரமங்களின் மத்தியிலும் தொடர்ந்து திருப்பணியாக இக்கலைப்பணியை ஆற்றி வருகின்றார். தாயகத்திலிருந்தும், தமிழகத்திலிருந்தும் தத்தம் துறைகளில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் அறிஞர்கள், கலைஞர்கள், இசைவல்லுனர்கள், கல்விமான்கள், அன்பர்கள் எனப்பலரையும் அழைத்து அவர்களது புலமையையும் ஆற்றலையும் பாராட்டிக் கௌரவித்துப் பரிசில்களையும் பட்டங்களையம் நல்குவதோடு நல்மக்களின் ரசனையையும் மகிழ்ச்சியையும் வளம்படுத்துகிறார். அல்லாமலும் இந்நிகழ்ச்சிகளால் மக்களின் அறிவு நுட்பம் மேம்படுவதோடு அறிதலும் பகிர்தலும் அனுபவங்களும் கூட வளர்ச்சியடைகிறது. பழமையில் ஊற்றம் மிக்கவரும், பழகுவதற்கு இனியவருமான திரு. லோகன் அவர்கள் இத்தகைய பணிகளை ஒரு தெய்வீகப் பணியாகவே தொடர்ந்து நடாத்தி வருகிறாரர்.

எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், கவிஞனாகவும், இதழாழராகவும் இளமையிலிருந்தே உருவாகி வந்த இவர் இன்று உதயன் பத்திரிகையின் கௌரவ ஆசிரியர் பொறுப்பைச் சுமந்து கொண்டு ஊடகத் துறையில் பல புதிய வாசல்களைத் திறந்து மக்களுக்கு வழிகாட்டியுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.

"தமிழன் என்றொரு இனமுண்டு. தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்பதற்கமைய "நாம் தமிழர்" என்ற தனித்துவமான அடையாளங்களோடும் நம் தலை சிறந்த விழுமியங்கள் கலை சலாசாரம் பண்பாடு ஆகிய பண்புகளோடும் எத்தகைய மோசமான சூழ்நிலையிலும் இவற்றைக் கடைப்பிடித்தே வாழ வேண்டும் என்ற வைராக்கியத்தோடும் திடசித்தத்தோடும் உழைக்கும் திரு, லோகேந்திரலிங்கம் அவர்களின் மணிவிழா நாள் இன்று.

இந்த இனிய நன்நாளிலே மங்களகரமான நன்மைகளெல்லாம் பல்கிப் பெருகி வழிய! வாழ்க!வென வாழ்த்துகிறோம்.

நாம் கடந்து வரமுடியாத தூரம் "கனடா" எனக் கவலையுற்றிருந்த பலரின் கைகளைப் பிடித்து அழைத்து வந்து "ஓ கனடா" இது தான் எனக்காட்டி "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனப் பலரும் பயனுற்று மகிழ உதவும் உயர்ந்த பண்பாளர்க்கு.

மிக்க அன்புடன்

**பத்மா சோமகாந்தன்**
215 G1/1 அன்டர்சன் தொடர்மாடி
பார்க் வீதி, கொழும்பு – 05 ஸ்ரீலங்கா

## மனமார வாழ்த்துகிறேன்......



70 களில் இலங்கையில் ஒரு விழிப்புணர்வு உருவாகிப் பரந்தது. அரசியல் களமும் அதற்கு சாதகமாக அமைந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கும். இதன் அடிப்படையில் புதிய சிந்தனைகள், அவற்றை வலியுறுத்தும் புதிய படைப்புக்கள் தோன்றின. இவற்றோடு புதிய படைப்பாளிகள் தோன்றி துணிவுடன் எதிர்ப்புக்குரல்களை, கலகக்குரல்களை எழுப்பினார்கள். இவையெல்லாம் பழைய சிந்தனைகளை புரட்டிப்போட்டன.

தேசிய உணர்வின் அறைகூவலாக தென்னிந்திய படைப்புகளுக்கு எதிரான ஒரு சிந்தனையும் இக்காலத்தில்தான் வலுப்பெற்றது. எங்கள் வாழ்வு தனித்துவமானது என்பது எங்கள் படைப்புகளில் பிரதிபலிக்கப்படவேண்டும் அவற்றை நாமே எழுதவேண்டும் என்ற முனைப்புடன் பல இளைஞர்கள் எழுத்துத்துறையில் அக்காலத்தில் குதித்தார்கள். கவிதைகள்,கதைகள், கட்டுரைகள் எல்லாவற்றிலுமே இந்த வலுவான சிந்தனை தெரிந்தது. இந்தக்காலத்தில் படைப்புலகிற்கு வந்த பல இளைஞர்களில் ஒருவர்தான் மலையன்பன் என்ற ஒரு கவிஞன். ஆர்.என்.லோகேந்திரலிங்கம் என்ற இயற்பெயர் கொண்ட ஒரு அரசாங்க ஊழியனே இவ்வாறு கலையன்பனாக உருமாற்றம் பெற்றார்.

இலங்கையில் எனது வாசிப்பு மட்டுப்பட்டதாகவே அமைந்து போய்விட, எனது கனடா வருகையின் பின்னர்தான் இவரது படைப்புகளின்மீதான பரிச்சியம் எனக்கு ஏற்பட்டது.
மூன்று கவிஞர்களின் கூட்டுத்தொகுப்பாக 1991ல் வெளிவந்த “காலத்தின் பதிவுகள்” நூலில் இவரது கவிதைகளை படித்தது ஞாபகமிருக்கிறது. மலையகத்தின் தோட்டங்களில் உழைத்து, இறுதியில் அந்த மண்ணுக்கே உரமாகிப்போகும், தேயிலைத்தோட்ட தொழிலாளப்பெண்ணின் வாழ்வு பற்றிய ஒரு சிறு பார்வையாக அமைந்த கவிதையும், குரல் அடக்கப்பட்ட குயில் என்ற கவிதையும் என் நினைவை தொட்டுச்செல்கிறன.

95களில் நான் அவரை நேரில் சந்திப்பது சாத்தியமாகியது. அப்போது அவர் ஒரு பத்திரிகையாளனாக பரிணமித்திருந்தார். காலப்போக்கில் ஒரு கலைஞனுக்கும் ஒரு ஊடகவியலாளனுக்கும் ஏற்படும் நட்பு எங்களுக்கிடையே சுலபமாக ஏற்பட்டது. பல இளைய தலைமுறைக்கலைஞர்களையும் அவர்களது திறன் அறிந்து தட்டிக்கொடுத்து பாராட்டும் பத்திரிகையாளனாக அவரை அவதானித்திருக்கிறேன். நையாண்டி கலக்க நண்பர்களுடன் நகைச்சுவையாக பேசும் அவர் என்னைப்போன்ற பலருக்கு பிடித்தமானவர். சமூகத்தின் பலதரப்பு மனிதர்களுக்கும் 'வெளிச்சம்' போடும் உதயனாக பல ஆண்டுகள் செயயற்பட்டு வரும் அவர் பணி தொடரட்டும் என்று வாழ்த்தி, நல்லாசிகள் கூறி விடைபெறுகிறேன்.

அன்புடன் சகோதரன்
**கே.எஸ்.பாலச்சந்திரன்**

## நல்லுள்ளம் கொண்டவர்



அண்ணர் லோகேந்திரலிங்கம் அவர்களை எனக்கு கனடா வந்த பின்பு தான் தெரியும். அவரை இலங்கையில் சந்திப்பதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அவ்வாறு சந்திக்கக் கிடைத்திருப்பின் கனடாவில் நான் ஓர் தொழிலதிபராக இருப்பது போல் இலங்கையிலும் இருந்திருக்கலாம் என்று எண்ணுகிறேன். அவர் தொழில்சார் நண்பரை தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்துகின்ற பண்பு மிகையாகாது. அவர் அவ்வாறு செய்வதனால் இன்று பலர் பெரிய சிறிய வியாபர நிலையங்கள், தொழிற்சாலைகளின் அதிபர்களாகி உள்ளனர். பனிமழை குளிர் வந்தால் உதயன் (சூரியன்) மறைந்திடுவான். ஆனால் வெள்ளிக்கிழமை என்றால் உதயன் பத்திரிகை தவறாது வந்திடுவான். என்னுடைய அம்மா வெள்ளிக்கிழமை வந்தால் வீட்டிற்குப் போகும் போது உதயன் கொண்டு வந்தாயா என்று தான் முதல் கேட்பார். அத்தோடு இங்கு நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் புகைப்படம் எடுத்து அவற்றைப் பிரசுரித்து அனைவரையும் மகிழ்விப்பார்.

இத்தனையும் செய்கின்ற எம் அன்புக்கும், பாசத்துக்குமுரிய அண்ணர் லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு அகவை அறுபதில் மணிவிழா எடுத்து சிறப்பிக்கும் இவ்வேளையில் நானும் என் குடும்பத்தாரும் அவரைப் பல்லாண்டு வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

**சாந்தா பஞ்சலிங்கம்**

# எல்லோர்க்கும் இனிய நண்பர் ஆர். என். லோகேந்திரலிங்கம்.

**குரு அரவிந்தன்**



இன்று மணிவிழாக் காணும் நண்பர் ஆர். என். லோகேந்திலிங்கத்தின் நட்பு பல ஆண்டுகாலமாக என்னுடன் தொடர்கின்றது. தாயகத்திலே பகுதிநேர பத்திரிகை ஆசிரியராக இருந்த இவர் இன்று கனடாவிலே உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருக்கின்றார். இவருடனான நட்பு உதயன் சிறுகதைப் போட்டியில் பங்குபற்றி, அந்தச் சிறுகதைக்குத் தங்கப்பதக்கம் விருதாக எனக்குக் கிடைத்ததையிட்டு, அவர் என்னுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது ஆரம்பமானது.

அதைத் தொடர்ந்து இன்றுவரை உதயன் பத்திரிகையில் எழுதிக் கொண்டிருக்கின்றேன். சிறுகதைகள், தொடர்கதைகள், கட்டுரைகள் மூலம் பல்லாயிரக்கணக்கான உதயன் வாசகர்களைப் பெற்றுத்தந்த பெருமை உதயன் ஆசிரியர் ஆர். என், லோகேந்திரலிங்கத்திற்கே உரியது.

ஒரு பத்திரிகையைப் பாரபட்சமற்ற, பத்திரிகைத் தர்மத்துடன் நடத்துவதற்குப் பொருளாதார உதவி மட்டுமல்ல, விளம்பரதாரர், எழுத்தாளர், வாசகர்களின் ஆதரவும் முக்கியமானதாகும். இத்தகைய சிறப்புக்கள் இல்லாததால், சிறுமழையில் முளைத்த காளான்போல பல பத்திரிகைகள் இதுவரை கனடாவில் தோன்றி மறைந்து விட்டன. ஆனாலும் எத்தனையோ பிரச்சனைகளை எல்லாம் சமாளித்துக் கொண்டு, இவற்றை எல்லாம் தாண்டி, உதயன் பத்திரிகை எதிர்நீச்சல் போட்டுக் கொண்டே இருப்பதற்குக் காரணம் எல்லாத் தகுதிகளும் அந்தப் பத்திரிகைக்கு இருப்பதேயாகும். நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்ளும்போது, சில பகைவர்களும் தானாகவே நுழைந்து விடுகிறார்கள். பத்திரிகை உலகில் இவற்றை எல்லாம் சமாளித்துக் கொண்டு செல்வது என்பது இலகுவான காரியமல்ல. அந்த வகையில் நண்பர் ஆர். என். லோகேந்திரலிங்கம் இவற்றை எல்லாம் சமாளித்துக் கொண்டு இன்றுவரை மிகவும் திறமையாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

கோபம் இருக்கும் இடத்தில்தான் குணமிருக்கும் என்பார்கள். இவருக்கும் சட்டென்று கோபம் வரும், ஆனாலும் உடனே மறந்து விடுவார். எதையுமே மறைத்து வைக்காது நேருக்கு நேர் சொல்லி விடுவார். இவரிடம் இருக்கும் இந்தக் குறைபாடுதான் முகஸ்துதி எதிர்பார்க்கும் சிலரிடம் இருந்து அவரைப் பிரித்து வைத்திருக்கிறது. இவர் கொடுத்த ஆக்கமும் ஊக்கமும் மட்டுமல்ல, சிலருடனான அறிமுகமும் சர்வதேச ரீதியாக என்னை எழுதத் தூண்டியதெனலாம். கனடாவில் தாய்வீடு. தமிழர் தகவல், தூறல் போன்ற வற்றிலும் மட்டுமல்ல, தினக்குரல், வீரகேசரி போன்ற ஈழத்துப் பத்திரிகைகள், ஆனந்தவிகடன், குமுதம், கல்கி, கலைமகள், யுகமாயினி போன்ற தமிழக சஞ்சிகைகளிலும், வெற்றிமணி, புதினம், வல்லினம், உயிர்நிழல் போன்ற பல்வேறு நாட்டுப் பத்திரிகைகளிலும் என்னை எழுத வைப்பதற்கு இவரது உதயன் பத்திரிகை வழிகாட்டியாக இருந்திருக்கிறது. உதயன் எழுத்தாளர் என்று இவர் எனக்குத் தந்த அடைமொழி என்னை சர்வதேச ரீதியாக பலதடவைகளில் வாசகர்களுக்கு இனம்காட்டியிருக்கிறது.

> 'முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்
> தகநக நட்பது நட்பு.'

என்ற வள்ளுவர் வாக்குக்கேற்ப எங்களுக்குள்ளான நட்பு நெஞ்சத்தகநக நட்பாகவே என்றும் இருக்கிறது. சிறந்த பண்புகளைக் கொண்ட மணிவிழாக் கொண்டாடும் நல்ல நண்பரைப் பல்லாண்டு காலம் ஆரோக்கியத்துடனும், சிறப்புடனும் வாழவேண்டும் என்று எனது குடும்பத்தின் சார்பில் வாழ்த்தி, எல்லாம் வல்ல இறைவனை அருள்புரிய வேண்டி நிற்கின்றேன்.

# "வாழ்க பல்லாண்டு"

அன்பும் பண்பும் பாசமும் நேர்த்தியான சிந்தனையும் தொலை நோக்கு பார்வையும்
கம்பீரமான தோற்றமும் கொண்ட எங்கள் அன்பு அண்ணனும்,
அகவை அறுவதைக் கொண்டாடும்
மதிப்புக்குரிய **லோகேந்திரலிங்கம்** அவர்களுக்கு
எமது கலைக்கூடம் சார்பில் நிர்வாகிகள் ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து
இறைவனின் அருளோடு வாழ்த்துவதில் மிகவும் பெருமையடைகின்றோம்
எமது கலைக்கூடத்தின் ஆரம்பத்திலும் அதன்
வளர்ச்சியிலும் மிகவும் அக்கறை கொண்ட அண்ணாவுக்கு
மீண்டும் எமது வாழ்த்துக்கள்
ஒன்ராறியோ நுண்கலைக்கூடம்

**Ontario Academy of Fine Arts**

**மோகன் செல்லையா**
நிர்வாகி

# வாழ்த்துக்கள்



அருமை நண்பர் நா. லோகேந்திரலிங்கத்திற்கு 60 வயது 23.05.2013ல் என்பதனை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. இன்னமும் அவர் குழந்தைப் பிள்ளை போலவே பழகுகிறார். குறும்புத்தனங்களுக்கும் குறைவில்லை. ஆனாலும் பத்திரிகை, கவிதை, பேச்சு, எழுத்து என்ற துறையிலும் வல்லுனராகவே வலம் வருகிறார்.

எங்கள் திருநெல்வேலியில் அவரை எல்லோரும் அன்பாகவும் செல்லமாகவும் ‘‘குஞ்சன்’’ என்றே அழைப்பார்கள். அவ்வளவிற்கு அவர் மீது அன்பாகவே இருப்பார்கள்.

இன்று கனடாவில் எங்கள் குஞ்சன் எல்லோரையும் விஞ்சி நிற்கிறார் என்பதனை எண்ணிப் பெருமைப்படுகின்றோம்.

60 அல்ல 600 ஆண்டுகள் லோகேந்திரலிங்கம் பத்திரகாளி அம்பாளின் அருள் பெற்று ஆல்போல் நிலைத்து நிற்க இறைவனை இறைஞ்சுகின்றேன்

**வ. மா. குலேந்திரன்**
**ஆசிரியர் தமிழினி மஞ்சரி**
**லண்டன்**

# நட்பை மொழியென்றால் இவர் உறவு ஓர் இலக்கணம்.



கனடா உதயன் ஆசிரியர் திரு லோகேந்திரலிங்கம் அவர்களைப் பற்றிப் படைக்கவிருப்பதனால் எனது பேனா மை சிந்தக் காத்துக்கிடக்கிறது.

அவர்தம் 60 வயதினைக் கடக்கவுள்ள இத்தருணத்தில், உலகில் உள்ள அத்தனை அழகிய மலர்களையும் எடுத்து வந்து வாழ்துப்பா பாட ஆசைப்படுகிறேன். காரணம் கனடா உதயன் ஆசிரியரின் "நட்பை மொழியென்றால் இவர் உறவு ஓர் இலக்கணம்."

அவருடைய நட்பைப் பற்றியும் உறவைப் பற்றியும் எழுதுகின்ற நான், இதுவரை ஒரு முறைதானும் அவரைச் சந்தித்தேனில்லை. சந்திக்காமல் இத்தனை நட்பா, கை கோர்க்காமல் இத்தனை உறவா? அதனால் தான் கூறுகிறேன் அவர் நட்பின் இலக்கணம்.

எனதினிய நட்பின் முகவரிகளுக்கெல்லாம், அவர் கொடுத்த கௌரவங்களை நினைக்கும்போது நெஞ்சம் நிறைகிறது.

இலங்கை, இந்திய, பாரிஸ் என்று விலாசப் பரிமாற்றங்களும், கனேடிய மண்ணின் சங்கமங்களும் கடந்த காலப் பதிவுகளாகிப் போயின.

எனது சிறுகதை நூலிற்குத் தமிழகத்தில் இலக்கிய விருது கிடைத்த போது, புலம் பெயர்ந்த ஈழத்துப் படைப்பாளிக்கு தமிழகத்தில் விருது" என்று ஆசிரியர் தலையங்கம் எழுதி எனக்குச் செய்த கௌரவம்தனை தமிழுக்குச் செய்த பணியாகக் கருதுகிறேன்.

ஆசிரியர் தான் எழுதிய சிறுகதைத் தொகுப்பிற்கு எனது அணிந்துரையைப் பெற்றுப் பிரசுரித்ததானது, அவரின் பண்பின் நீட்சியைப் பறைசாற்றி நிற்கிறது.

உழைப்பின் தொடக்கம் பிறப்பு என்றும், வாழ்வின் நீட்சி பெரும் கனவு என்றும், மரணம் நிரந்தர ஓய்வு என்றும் கொண்டாடிக் கிடக்கும் இம் மானுட வாழ்வில், உன்னத கனவு என்பது உதவி வாழ்தல் ஒன்றே எனும் குறிக்கோளுடன் இயங்கும் இனிய உள்ளம் திரு. லோகேந்திரலிங்கம் அவர்களை நெஞ்சில் நிறுத்திக் கொண்டாடி மகிழ்கிறேன்.

எமது தேசத்தில் விழிம்பு நிலையில் நிற்கும் எமது உறவுகளுக்கு, உதயன் மூலம் செய்கின்ற உதவிகளைக் கேள்வியுற்று மகிழ்கிறேன்.

வருடம் தோறும் உதயன் விழா நடாத்தி உலகிலுள்ள உன்னத உள்ளங்களைக் கௌரவிக்கும் செய்திகளறிந்து நெஞ்சு நிறைந்து போகிறோம்.

இனிய குடும்பத் துணையுடன், சிறந்த பிள்ளைகளையும், பேரப் பிள்ளைகளையும் கொண்டு, கனடா உதயன் பத்திரிகையையும் உலகமெலாம் பேசவைத்து, வாழ்வின் அர்த்தத்தை முழுமையாகக் கொண்டாடும் திரு. லோகேந்திரலிங்கம் அவர்களை இவ்வுலகில் வாழும் சிறந்த மானுடங்களில் ஒருவராகக் கருதி, மென்மேலும் பேறுகள் பெற்று வாழ்கவென வாழ்த்தி விடைபெறுகிறேன்.

என்றும் கனிந்த அன்புடன்,

**கலாநிதி கல்லாறு சதீஷ்,**
**Dr.Nageswaran Arulrasa,**
Menzuken, Switzerland.

# மணிவிழாக்காணும் இளைஞனை! உதயன் மைந்தனை யேர்மனியில் இருந்து வெற்றிமணி வாழ்த்துகிறது!



கனடாவில் வாரம் ஒரு முறை இதழ் விரிக்கும் உதயனுக்கு உன்னதமான ஆசிரியர் யார் எனக்கேட்டால் ஆர் என்.லோகேந்திலிங்கம் என்று சட்டென்று பதில் வரும்.

சட்டென வரும் இப்பதிலுக்கான உழைப்பு மிக மிக நீண்டது. அது கனடாவில் இருந்து இலங்கை இந்தியா மலேசியா வரையும். கனடாவில் இருந்து அமரிக்கா,ஐரோப்பா வரையும் பரந்துள்ளது.

எந்த அவசரமான பத்திரிகை வேலைக்குள்ளும் வந்தோரை வரவேற்று ஒரு சிலமணிநேரம் என்றாலும் அவர்களுடன் உரையாடி, அவர்களைக் கௌரவிப்பது உதயன் ஆசிரியரின் ஒரு உன்னதமான பண்பு. நட்பின் நாயகன் என்ற அவரது பட்டத்தை பட்டை தீட்டியவண்ணம் இருக்கும் மாண்பு அது.

பதின்நான்கு வருடமாக அவருடன் பழகும் வாய்ப்பு எனக்கு கிட்டியுள்ளது. அன்று முதல் இன்றவரை மாறாத நட்பும் தொடர்கிறது. யேர்மனியில் வெளிவரும் வெற்றிமணிக்கும், உதயனுக்கும் உறவு நிலையானது.

கனடாவில் வாழும் தமிழ் மக்களது ஆற்றலையும், சமூகப்பணிகளையும் சுமந்து வரும் உதயன் பத்திரிகை எனக்கு வாரம் தோறும் மின்னஞ்சலில் வந்து மின்னும்.
மின்னுவதில் யேர்மன் வாழ் தமிழர்களுக்கு தெரியப்படுத்த வேண்டியவற்றை வெற்றிமணியில் வெளியிட்டும் வந்துள்ளேன்.

எந்த ஒரு விழாவென்றாலும் அங்கு சில நிமிடமாவது சென்று, அவர்களைக் கௌரவித்துவிட்டுத்தான் தன் வேலையை பார்க்கும் பழக்கத்தை தனதாக்கிக் கொண்டவர். இதன் மூலம் அவர் நேரத்தை இழந்தாலும், வாசகரைப் பெருக்கிகொண்டவர்.

குறிப்பாக புலம்பெயர் நாட்டில் பத்திரிகை ஆசிரியரும், வாசகர்களும் ஒரு குடும்பம்போல் அன்பாக இருப்பது புலம்பெயர்ந்த தமிழர்க்கே உரிய ஒரு சிறப்பாகும்.

இந்தச் சிறப்புக்கு சிறப்பான உதாரணம் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்கள். அவருக்கு அகவை அறுபது. அவரிடம் காணும் உற்சாகத்திற்கு வயது பதினாறே!

அந்த இளைஞனின் மணிவிழா சிறக்க யேர்மனியில் இருந்து வெற்றிமணி வாழ்த்துகின்றது.
என்றும் தமிழுடன்
**மு.க.சு.சிவகுமாரன்.**
பிரதம ஆசிரியர் வெற்றிமணி,யேர்மனி.
யாழ் வெற்றிமணி, சிவத்தமிழ்

# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்.
## திரு.லோகேந்திரலிங்கம் - திருமதி. பத்மலோசனி தம்பதியர்



அருமை உள்ளமும் அன்பும் பாசமும் உடையவரே !!
அறுபது பிறைதனை அனுபவித்த அதிர்ஷ்டசாலியே !!
ஆழ்ந்த சிந்தனையும் ஓயாத உழைப்பும் உடையவரே !!
ஆனந்தமும் மனநிறைவும் பெற்ற நல்ல நண்பரே !!

இல்லத்தாளின் இதயத்திலே இடம்பெற்ற இனியவரே !!
இதமான பிள்ளைகளை பெற்ற நேசமிக்கவரே !!
ஈர்த்திடும் பண்பும் நகைச்சுவை உணர்வு கொண்டவரே !!
ஈடில்லா பேரும் புகழும் பெற கடினமாக உழைத்தவரே !!

உன்னத உறவுகளுடன் ஒன்றுபட்டு இணைந்திருப்பவரே !!
உணர்வு பூர்வமாக உதயன் பத்திரிகையை உயர்த்தியவரே !!
ஊக்கமும் உயரிய சிந்தனையுடன் வெற்றிப்பாதையை கடப்பவரே !!
ஊரும் பேரும் சிறப்பு பெற நெறியினை கொண்டவரே !!

எந்நேரமும் எவருக்கும் உதவிடும் குணம் உடையவரே !!
எளிமையுடனே எளிதில் நட்புடன் பழகும் நேசமானவரே !!
ஏற்றிவிடும் ஏணிப்படிகளாக துணைபுரிபவரே !!
ஏறுமுகம் காணும் எழுச்சியுடன் உச்சத்தினை காணத் துடிப்பவரே !!

ஐயமின்றி நீண்ட காலம் நலமும் வளமும் பெற்று சிறப்பு பெறுபவரே !!
ஐங்கரனின் நல்லாசியும் பேரருளும் கொண்ட மிக நல்லவரே !!
ஒப்பில்லா உயரிய குணமுடைய சீரிய மனிதரே !!
ஒழுக்கமும் நற்பணியும் ஒற்றுமையான நட்பு கொள்ளும் நல்லிதயம் உடையவரே !!

ஓய்வில்லா சமூகப் பணி செய்து ஒளிர்பவரே !!
ஓங்கிய சிகரத்தின் உச்சியினை எட்டிப் பிடித்திட முயல்பவரே !!
ஔடதமாய் உதயன் பத்திரிகையின் ஒளிச்சுடராக மிளிர்பவரே !!
அஃதே பல்லாண்டு பல்லாண்டு சீரிய பணியினை தொடர்ந்து நலமும் வளமும் நீண்ட ஆயுளும் பேரும் புகழும் பெற்று வாழிய வாழிய வாழியவே அன்பான ஆசிகளும் வாழ்த்துகளுடன்
இனிய நட்புள்ளம் கொண்ட

**முத்துலிங்க சர்மா**
**வசந்தா, விஸ்வ பிரசாத்,**
**ஸ்ரீதேவி, சித்தார்த், சமிர்**

**முத்துலிங்க சர்மா குடும்பம்**
**நயாகரா - ஒட்டாவா**
**கனடா**

# "மலையன்பனின்" கவிதைப் பதிவுகள்

### "சிந்தனைப் பூக்கள்" எஸ். பத்மநாதன்



வாழ்க்கையில் ஒரு மனிதன் உயிர்த்துடிப்போடு இருக்கிறான் என்பதற்கு அடையாளம் அவன் விழிப்புணர்வோடு இருப்பதுதான். இப்படியானதொரு உணர்வோடு இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் இணையற்ற பத்திரிகையாளர்தான் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள். 'லோகன்' என்று அன்போடு அழைக்கப்படும் இவர் என்றும் எம்மால் நினைக்கப்பட வேண்டிய ஒருவர். உலகில் பிறக்கும் எல்லோருக்கும் வாழ்க்கையுண்டு; ஆனால் எல்லோருக்கும் வரலாறு இருப்பதில்லை. வரலாற்றுப் பேரேட்டில் தம் பெயரையும் பொறித்துக் கொள்ளுமாறு வாழ்க்கையை அமைததுக் கொண்டவர்களைக் காலம் மறப்பதில்லை. "என் வாழ்க்கையே என் செய்தி" (My life is my message) என்பதற்கு மிகவும் பொருத்தமாகி நிற்பவர் அவர்தான்.

லோகன் 1975ல் சிரித்திரன் பத்திரிகையில் வெளிவந்த கவிதை ஒன்றின்மூலம் எழுத்துலகில் பிரவேசித்த ஒருவர். சிறிய வயதிலே மலையகத்தில் வாழ்ந்த இவர் 'மலையன்பன்' என்ற அழகான புனைபெயரில் தொடர்ந்து எழுதி வந்தார். மலையகத்து மக்களின் அவலங்களைக் கண்டு துடித்துப்போன அவரது விரல்கள் ஆவேசமான கவிதைகளை எழுதத் தொடங்கின. புதுமை லோலன், யாழினி என்பது அவரது ஏனைய புனை பெயர்களாகும். முற்போக்குச் சிந்தனையாளரான இவர், பல கதைகளையும் எழுதிக் கண்ணீரை வரவழைத்த ஒரு சிறுகதை எழுத்தாளர். கீற்று, மாற்று ஆகிய பத்திரிகைகளை ஈழத்தில் நடத்தியதுடன் கொழும்பில் வாழ்ந்தவேளை 'அக்கினி' என்ற சஞ்சிகைக்கு ஈழவாணனுடன் சேர்ந்து இணையாசிரியராகவும் பணிபுரிந்தவர். கனடாவுக்கு வந்தவேளை 'சூரியன்' பத்திரிகையை வெளியீடு செய்து பின் 'உதயன்' என்ற மக்கள் பத்திரிகையின் பிரதம ஆசிரியரானார். இங்குள்ள எழுத்தாளர் இணையத்தில் இணைந்து தலைவராகவும் பல்வேறு சங்க அமைப்புக்களில் ஒரு முக்கியஸ்தராகவும் உலக பண்பாட்டு இயக்கத்தில் சர்வதேச ஊடகப் பொறுப்பாளராகவும் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான சங்கத்தின் தலைவராகவும் சத்தியப் பிரமாண ஆணையாளராகவும் பல பரிமாணங்களில் முத்திரை பதித்துள்ளார்.கனடாவில் வெளியாகி உலகம் முழுவதற்கும் விரிந்து பரந்துள்ள உதயன், என்றும் பிரகாசத்தினையே வழங்கி வருகிறது. பெறுகின்ற அங்கீகாரத்தைப் பொருட்படுத்தாமல் விழுகின்ற மாலைகளால் மகிழ்ச்சியடையாமல் தொடர்ந்து செல்ல தெரிந்த ஒருவராக இவர் ஒரே மனநிலையுடன் வாழ்ந்து வருபவர். மின்சார அதிகாரியாகத் தொழிலை ஆரம்பித்த இவர் கவிஞனாக, சிறுகதை எழுத்தாளராக, பதிப்பாளராக, சஞ்சிகைகளின் ஆசிரியராக, இணையற்ற பத்திரிகையாளராக, சமூக மாற்றத்தின் உறுதுணையாளராக விளங்கி எல்லோரையும் அன்பினால் கட்டிப்போட்டுள்ளார்.1991 ஜனவரியில் எழுத்தாளர் எம். ரகுநாதன் அவர்களால் வெளியிடப்பட்ட "காலத்தின் பதிவுகள்" என்ற புதுக்கவிதை நூலில் அவர் எழுதியுள்ள கவிதைகள் காலத்தால் வாழக்கூடியவை. பிரபல கவிஞர்களான அ.

கந்தசாமி, ரதன் ஆகியோர்களது கவிதைகளுடன் இவரது பத்து கவிதைகள் பதிவு பெற்றுள்ளன. இக் கவிதைகள் வெளிவந்துள்ளன என்பதைவிட பதிவு பெற்றுள்ளதென்பதே மிகவும் பொருத்தமானது. சுமைகள், குரல் இழந்த குயிலே, தனித்துவம், புதிய கூரையொன்றின்கீழ், தாயகத்து மக்களே, ஏமாந்துபோன தணிக்கையாளர், குளிர், இனி நீ எழு(து) வாய், வெற்றுத் துப்பாக்கிகளும் எங்கள் விடியலும் ஆகிய தலைப்பு கவிதைகளே அவை. 21 வருடங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட இவரது கவிதைகளை இன்றும் கவிதைப் பொழிவாகவே காத்து வருகிறேன்.இந்நூலுக்கு அறிமுகம் எழுதிய எழுத்தாளர் கவிஞர் க. நவம், இவரது கவிதைகளைப் பற்றிக் கூறிய வரிகள் அவ்வளவும் வைரம் உள்ளவை. "சொற்களை இலாவகமாகக் கையாண்டு சொற்களுக்கிடையே ஓசைப் பிணைப்பு ஒத்திசை பிசகாமல் எழுதியுள்ளார். எங்கள் மண்ணின் விடிவை ஆவலோடு எதிர்பார்த்து ஏமாந்துபோன மலையன்பனின் ஆதங்கம் அவரது கவிதைகளில் விரவிக்கிடக்கின்றது" என்று கூறியுள்ளார். விடுதலைக்கு முன்பு மனிதநேயம் வேண்டி நிற்கும் மலையன்பனின் வாழ்க்கை அனுபவங்கள் தீப்பொறி களாகி உள்ளன.அவரது முதல் கவிதை 'சுமைகள்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. புதுக்கவிதையின் மொட்டுக்களாக இவரது கவிதைகள் உள்ளன என்பது படித்தால் புரியும். முதல் கவிதை மலையகத்தில் மாடுகளாய் உழைக்கும் தமிழர் பற்றியது. நுவரெலியா மாவட்டத்தில் ஆசிரியராக வாழ்ந்து எனது சிந்தனைகளைத் தூண்டிய அந்த மக்களின் அவல வாழ்வினை அனுபவித்த அவரது வரிகள் இவை. குறிப்பாகப் பெண்கள் படும் அவஸ்தை சொல்ல முடியாதவை! கங்காணிகளின் கழுகுப் பார்வைக்கு இலக்காகிவிடும் அவர்களின் அவல வாழ்வு எழுத்தில் வடிக்க முடியாதவை!மீசை வைத்த கங்காணிகளின் ஆசைப் பார்வைக் குள்ளாகும்அவர்களின் மேனியை சாக்குகள் மூடி பனியையும் பார்வையையும் போக்குவன...அவர் பல கவிதைகளை இதில் எழுதியிருந்தாலும் சுருக்கென்று அம்புபோன்ற சம்பவம் இது. மலையன்பனின் நெஞ்சைத் தொட்ட சம்பவம் இது.அடுத்த கவிதை "குரல் இழந்த குயிலே" என்பதாகும். கொடியவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகிப்போன ராஜினி திரணகம அவர்களது சோகமுடிவு பற்றியது இது.வானத்தில் பறக்கும் வாய்ப்புகள் பல கொண்டும்வட்டமிட்டுத் திரியும் வசதிகளைப் பெற்றிருந்தும்மண்மீது உலாவி உண்மைகளை நேசித்ததால்மிருகங்கள் அதனைக் கொன்றதுவோ...பெண் ஒருவரைச் சில மிருகங்கள் செய்த கொலைக்காக அவர் எழுப்பிய சில கவிவரிகளே இவை. அடுத்து வருகின்ற 'தனித்துவம்' என்ற கவிதை நாம் நாடு பெயர்ந்து செல்லப் பயப்படுகின்ற மனச்சூழ்நிலை பற்றியது. தேவையற்ற காரணங்களைச் சொல்லிப் புலம் பெயரத் துடிப்போர் பற்றியது. 'றெடிமேட்' காரணங்கள் சொல்பவர் பற்றியும் கூறுகிறார்.இவரது "புதிய கூரையொன்றின் கீழ்..." என்ற தலைப்பிலான கவிதை கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த அவரது உணர்வுகள் பற்றியது. "ஊரில் பெய்த பெரு மழைக்கு ஒதுங்கவென இங்கு வந்துபுதிய கூரை யொன்றுக்குள் புகுந்து கொண்டவர்கள் நாங்கள்"தாங்க முடியாத தாயகத்துச் சூழ்நிலைகள் காரணமாக இங்கு வந்தவர்களுக்கு ஒத்தடம் போன்றது இவ்வரிகள்.வேலிகள் இங்கு வீடுகளுக்கிடையில் இல்லாததால் சண்டைகள் நடக்க சாத்தியமில்லை.தாயகத்தில் வாழும் எம்மவர்களின் பிரிவினை உணர்வு இங்கு இல்லை என்பதே பதிவாகிறது. அடுத்து வருகின்ற 'தாயகத்து மக்களே" என்ற தலைப்பிலான கவிதை மீண்டும் மீண்டும் தாயகம் செல்ல வைக்கிறது. இங்கிருந்து அந்த மக்களுக்காக அவர் எழுப்பும் குரல் பீரங்கிகளைவிட வலிமையுள்ளன. அங்கு நடைபெறும் உயர் மாடிக்கட்டிட வட்டமேசை மகாநாடுகள், அரசியலாளரின் விமானப் பயணங்கள், அரசியல் தில்லு முல்லுகள், பணம் கொடுத்து நடைபெறும் வாக்கு வங்கிகள் அத்தனையும் சாடப்படுகிறது.தலைவிதியை மாற்றவல்ல தகைமைஉங்களிடம் தங்கி கிடக்கிறது! தேடி எடுத்திடுங்கள்! என்று முடிக்கிறார்."ஏமாந்துபோன.." என்ற தலைப்பிலான கவிதைக்குள் ஒரு உண்மை

பொதிந்து கிடக்கிறது. தாயகத்தில் நடைபெற்ற அநியாயக் கொலைகள் பற்றியது. மூளைச் சலவை செய்து அரசியல் பாடம் கற்று மரணித்துப்போன ஒருவரின் கதை அது.அரசியல் மாற்றத்திற்கு அரசியல் கொலைகளும் அடிக்கடி நிகழும் என்றார்கள்.இப்படிச் செல்கிறது கவிதை. அரசியலுக்கப்பால் சென்று மரணித்துப் போனவர்களின் சோகக் கவிதை இது. 'தணிக்கையாளர்' சற்று நகைச்சுவை கொண்ட கவிதை. தமிழ்ப் படங்கள் தணிக்கை செய்யப்பட்டு வர பின்பு வீட்டிலும் 'ரிமோட்' மூலம் பல காட்சிகளை ஓடச்செய்வோர் பற்றியது. வீட்டுக்குள் நடக்கும் அன்றாட நிகழ்ச்சி பற்றிய பார்வை இது.'குளிர்' என்ற தலைப்புக் கவிதை எமக்குச் சொந்தமான குளிர் பற்றியது. "சுதந்திரமான உறக்கத்தை கலைத்தது பனியின் சூடு" எனத் தொடங்கி மாலையில் வீடு திரும்பும்போது "கனத்த உடைகள் தோல் பையினுள் பொத்தான் திறந்த சேட்டும் மயிர் வளர்ந்த நெஞ்சைக் காட்டும்" என்ற வரிகளுடன் முடிகிறது. எமக்கும் குளிரைப் பற்றித் தெரியும் என்றும் மலையன்பனின் வரிகளில் சூடு தெரிகிறது."இனி நீ எழு(து) வாய்" சற்று வித்தியாசமான கவிதை. ஒரு எழுத்தாளர் காரியாலயத்தில் வேலைப் பழுவுக்குமிடையே கவிதை எழுத ஆசை கொள்வது பற்றிய கவிதை இது. "கவிதைகளைக் கொண்டுபோய் குப்பையிலை போடும் நீர்" என்ற இளைஞன்மீது எழுந்த கோபாவேசக் கவிதை இது. "எழுத வேண்டும், புதிதாய்ப் பிறக்கும் குழந்தைகளுக்காகவேனும் உனது பேனாக்கள் இயங்கட்டும்" என முடிகிறது. ஒரு எழுத்தாளனது ஆத்மார்த்த கடமை இது.இறுதியாக எழுதப்பட்டுள்ள "வெற்றுத் துப்பாக்கிகளும் எங்கள் விடியலும்" என்ற கவிதை அமைதியைக் குலைக்கும் யுத்தம் பற்றியது. "அமைதியும் யுத்தமும் மாறிமாறி எங்களை நாசப்படுத்தின அழிவுகள், இழப்புக்கள் ஆயிரம் ஆயிரம் என்றும்கூடஅண்மையில் அமைதியைக் கிழித்து மீண்டும் எங்களைச்சூழ வந்து விட்டன அந்த துப்பாக்கிச் சனியன்களும் கரியன் குண்டுகளும்"என முடிக்கிறார்.வலிமையும் உணர்ச்சியும் கொண்ட அற்புதமான கவிதைகளைத் தந்த மலையன்பன் இன்று ஆர். என். லோகேந்திரலிங்கம் என மாறியவேளை உலகம் போற்றும் பத்திரிகை ஆசிரியரைப் பெற்றுக் கொண்டோம். "மின்சாரப் பூவே" என புதுக்கவிதை எழுதிய கவிப்பேரரசு போன்று கவிதைக்குள் மின்சாரத்தினைப் புகுத்தி எழுதி வந்தவர் லோகன். காலம் அவரை நீண்ட காலம் சோதனையிட்டு விட்டுள்ளது! பலர் சாதாரண வாழ்க்கைக்காகப் படைக்கப்படுகிறார்கள். சிலரோ சாதனை செய்வதற்காகப் படைக்கப்படுகிறார்கள். இதற்குப் பொருத்தமானவரே லோகன். தனது கடுமையான உரையால் சிகரத்தைத் தொட்ட இவரது மணி விழா மிகவும் பொருத்தமானது. "மரம் ஓய்வெடுக்க நினைத்தாலும் காற்று அதனை விடுவதில்லை" என்பது போல் ஆர். என். லோகேந்திரலிங்கத்தின் பல்வேறு திறமைகள் காரணமாக எமது மக்கள் அவரை ஓய்வெடுக்க விடமாட்டார்கள்! தனது பெயரில் மூன்று முழுமைகளைக் கொண்டுள்ள லோகேந்திரலிங்கம் அவர்கள் மணிவிழாக் காண்பது எமக்கெல்லாம் பெருமை தருவது; மன நிறைவு தருவது.

## மனதார வாழ்த்துகிறேன்!



என்னை இம்மண்ணில்
இனியதொரு நாடகக்கலைஞனாய்
அறிமுகம் செய்து வைத்த என்
அருமை நண்பர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
**மலையன்பன்** எனும் பெயரால்
மான்புறக் கவிதை செய்தே
வான்புகழ் கொண்டு
வாழ்கிறார் இம்மண்ணில்
தன் ஆற்றல்மிகு எழுத்தால் எம்
அனைவரையும் கவர்ந்திழுத்து
உதயனெனும் பத்திரிகையை
ஆண்டுகள் பதினேழாக மிக
அருமையாய் நடத்திவரும் இவ்வினிய
நண்பனுக்கு இன்று **அகவை அறுபது**
ஆச்சரிய பூச்சொரிய
அகமெல்லாம் மகிழ்ச்சி பொங்க
வாழ்த்துகிறேன் இன்னும் பல்லாண்டு
வாழிய நீ பார்மெச்சும் புகழோடு
என வாழ்த்தும்

**கணபதி ரவீந்திரன்**
தலைவர்
கனேடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்



## மணிவிழா வாழ்த்து

அகிலத்தை வலம்வருகின்ற உதயனுக்கு வயது அறுபதாம்
ஆண்டுக்கு வயது அறுபது, ஆனால் லோகனுக்கு வயது இருபது
இன்றும் இனிமைத் தோற்றத்தோடு இளையோரைக் கவர்ந்திடும் உமதன்பு
ஈடிணையில்லா இரங்கும் குணம் ஈர்முப்பது ஆண்டிலும் உறுதிமனம்
நாட்டில் இருந்த போதும் நாடியது உன்மனம் பத்திரிகையை
ஏட்டில் எழுதமுடியவில்லை அன்று,
உமது எண்ணமதை இன்றோ வடிக்கின்றீர் உதயன்தனில்
உதயன் இல்லா இடமும்உண்டோ புலம்பெயர்ந்த நம் தமிழர் வாழ்வில்
வெள்ளிதோறும் வெளிவருவான் அள்ளித்தரும் செய்திகளோடு
பக்கதுணையாய் நற்சோதி நண்பன் வலக்கரமாய் இருக்கையிலே
என்றும் வாழ்ந்திடுவாய் நலமாய் நூறாண்டு இப்புவியில்
நல்மனம் கொண்ட புன்முறுவல் செம்மலே
நற்துணையாள் மக்களோடு நலமோடு வாழ
நாம் வாழ்த்துகின்றோம்
இடையினில் வந்த நற்பேரரும்
வாழ்த்திக்கூறி நிற்கும் இவ்வேளையில்
நாமும் சேர்ந்து இங்கிதமாய் வாழ்த்துகிறோம்
வாழ்க பல்லாண்டு!

**வே.க.த.சு. தவம் குடும்பம்**
(முன்னாள் தமிழ்தென்றல் ஆசிரியர்)

# R.N. லோகேந்திரலிங்கம்



அகவை அறுபதினைக் கொண்டாடும் திரு. லோகேந்திரலிங்கம் அவர்களை வாழ்த்துவதில் நானும் பெருமையடைகின்றேன்.

ஓர் இளைஞனாக எனது வர்த்தகத்தை நான் ஆரம்பித்து ஓரிரு வருடங்களிருக்கும்.

அன்று அவர் ஆசிரியராக இருந்த "சூரியன்" பத்திரிகைக்காக, "கனடாவில் வளரும் தமிழர்கள்" என்ற தலைப்பிலான பக்கத்திற்காக பேட்டி கண்டு என்னையும் கனேடிய தமிழ் வர்த்தகத் துறைக்கு முதன் முதலில் அறிமுகம் செய்து வைத்த திரு. லோகேந்திரலிங்கத்தை பெருமையோடும் நன்றியோடும் இன்று நான் பார்க்கிறேன்.

நான் வர்த்தக சம்மேளனத்தின் தலைவராக இருந்த காலத்தில் எமது சம்மேளனத்தின் வளர்ச்சிக்கு தனது "உதயன்" பத்திரிகையின் மூலமும் தனிப்பட்ட முறையிலும் பல உதவிகளைச் செய்த லோகேந்திரலிங்கத்தின் சமூக ஈடுபாடுகளை அன்போடு அசைபோட்டுப் பார்க்கின்றேன். கனடாவில் குறிப்பாக ரொரன்றோ பெரும்பாகத்தில் எவர் ஒருவர் ஒரு புதிய வர்த்தகத்தை ஆரம்பித்தாலும் உடனடியாக அங்கு சென்று அந்நிகழ்ச்சியை தனது பத்திரிகையின் செய்தியாக படத்துடன் வெளியிட்டு அனைத்து தமிழர்களுக்கும் அதைத் தெரியப்படுத்துவதோடு அந்த புதிய வர்த்தகரை தட்டிக் கொடுத்து ஊக்குவிக்கும் ஒரு நல்ல பண்பாளராக லோகேந்திரலிங்கத்தைப் பார்க்கிறேன். சுனாமியின் பின்னர் நாங்கள் ஒரு குழுவாக இலங்கை சென்றிருந்த போது அங்கு எமது பஸ் சாரதிகளாக வந்த இரு தமிழர்களுக்கும் எமக்கு ஒதுக்கப்பட்ட அதே Hotelஇல் அவர்களுக்கும் உணவும் அறைகளும் கொடுக்கப்பட வேண்டும் என அவர் அங்கு சண்டை போட்டதைப் பார்த்து அவருக்குள் இருக்கும் மனித நேயத்தை நான் அறிந்து கொண்டேன்.

ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் இரவிரவாக விழித்திருந்து சுடச்சுடச் செய்திகளோடு "உதயன்" பத்திரிகையை எம் எல்லோர் கைகளிலும் தவழவைக்கும் அவரது கடமை உணர்ச்சியையும் பத்திரிகைத் துறையில் அவருக்கிருக்கும் அக்கறையையும் பார்த்து நான் பல தடவைகள் வியந்திருக்கின்றேன்.

உதயன் பத்திரிகையையோ, தொழிலாளர்களையோ, வாசகர்களையோ என்றும் அவர் யாரிடமும் விட்டுக்கொடுக்காத அவரது துணிச்சலையும் பல தடவைகள் என் மனதுக்குள்ளே பாராட்டியிருக்கின்றேன். நாம் பிறந்த அந்த தேசத்திற்காகவும் யார் அவரிடம் சென்று உதவி கேட்டாலும் உதயனின் ஆதரவோடு நிதி திரட்டிக் கொடுப்பதைப் பல தடவைகள் கண்டு அவரது சமூக அக்கறையைப் புரிந்திருக்கின்றேன்.

உதயன் சர்வதேசவிருது விழா மூலம் திறமைக்கும், பல்சமூக ஒன்றிணைப்பிற்கும் ஓர் அடையாளத்தை உருவாக்கியது மட்டுமன்றி பன்னாட்டு விற்பன்னர்களையும் கௌரவித்து எமக்கும், எமது தமிழ் சமூகத்திற்கு பெருமையையும், அடையாளத்தையும் உருவாக்கித் தந்த லோகேந்திரலிங்கத்திற்கு நன்றிகள் பல கூறி பெருமையடைகின்றேன்.

இப்படியெல்லாம் கனேடிய தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்கும் மாறுதல்களுக்கும் பல்லாண்டு காலமாக தன்னை அர்ப்பணித்து பாடுபட்டுக் கொண்டிருக்கும் திரு. லோகேந்திரலிங்கம் பலகாலம் எல்லாம் பெற்று நீடுழி வாழ, அவரது சேவைகள் தொடர மற்றைய நண்பர்கள், உறவினர்களுடன் இணைந்து நானும் வாழ்த்துகின்றேன்.

**குலா செல்லத்துரை**

# Message

I am very much delighted to send this congratulatory message on the occasion of the 60th anniversary of Mr.Nagamani Logendralingam who has been known to me from his childhood. I know him as a primary school student and son of Mr.Nagamni who was a teacher attached to a tamil school in Badulla, Uva province. In fact, I was a classmate of Mr. Logendralingam's brother Mr. Mahendran with whom I still maintain contact. Mr. Logendralingam possesses the best qualities of a good human being and a very hospitable person.

Once I was invited in 2009 by Mr. Logendralingam to visit Canada to receive an award from his Uhayan newspaper. In fact because of Mr. Logendralingam I had the opportunity of meeting hundreds of Canadian Tamils who honoured me at the function well organised by Mr. Logendralingam. I observed that the function was organized in the most efficient and meticulous manner and several Canadian Government dignitaries were also present on that occasion.


Mr. Logendralingam has developed as one of the outstanding Canadian Tamil whose contribution to the promotion of the cultural development of Ttamil people of Srilanka has been very much appreciated by them. it is no easy task to run a tamil newspaper in a foreign land. Mr.Logendralingam keeps the Canadian Tamils informed about the socio economic and political developments affecting the Srilankan Ttamils and very sensitive to their aspirations and issues confronted by them. it is my firm believe that the Tamil masses of *thamil koorum nallulagam* would be congratulating the achievements of Mr.Logendralingam and wishing him a prosperous future.

the best thing about Mr.Logendralingam is that, in spite of his long period of stay in Canada he always think about his mother land, his people, their culture and language. The fundamental reason for this understanding is that language and culture are the important components of the survival of an ethnic group. He has taken it as a challenge to promote them whatever problems he has to confront. I think he has successfully met all his challenges and continuing with his vision and mission to his community.

I will be failing in my duty if I do not say that Mr.Logendralingam possesses the best qualities of a good human being and a very hospitable person I wish him all success in all his endeavours and a very bright future in his professional and personal life.

**prof. S. Sandarasegarm**

# உன்னத மனிதர்
# உதயன் லோகேந்திரலிங்கம்



**கலைமாமணி, முனைவர் இளசை சுந்தரம்**

"பெற்றோர் உனக்கிட்ட பெயரோடு நின்றுவிடாதே: உன்னுடைய பெயர் உன்னிலிருந்து உருவாகட்டும்" என்பார்கள்.

இவரது பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் லோகேந்திரலிங்கம். சமூகம் இவருக்கு இட்ட பெயர் எழுத்தாளர், பத்திரிகையாளர், கவிஞர், மனித நேயக்குரல் கண்ட மாமனிதர்.

ஒரு மனிதனுக்கு இரண்டு பிறப்புக்கள் உண்டு. ஒன்று தாய் வயிற்றில் குழந்தையாக பிறப்பது. மற்றது ஒருவன் தன்னிலிருந்து தன்னைப் பிரசவிப்பது.

தாய் வழி பிறப்பு உடல் ரீதியானது. இயற்கையானது. அது மிருகங்களில் கூட நடப்பது. தன்னிலிருந்து தன்னைப் பிரசவிப்பது, மனநிலை சார்ந்தது. தன்முனைப்பு சார்ந்தது, சிந்தனை சார்ந்தது, ஆற்றல் சார்ந்தது, சமூக உறவு சார்ந்தது.

பலர் தாய் தந்த உடல் பிரசவத்தோடு நின்று விடுகின்றார்கள். உண்டு, உறங்கி, களித்து தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொள்கின்றர்கள். சிலர்தான் மாமனிதராக பிறப்பெடுக்கின்றார்கள். அத்தகைய உதாரண புருசனாக உதயமானவர்தான் உதயன் லோகேந்திரலிங்கம்.

உயிரோடு வாழ்வது மட்டும் வாழ்க்கையல்ல. உயிர்ப்போடு வாழ்வதுதான் வாழ்க்கை. அவ்வாறு வாழ்ந்து கொண்டிருப்பவர்தான் லோகன்.

சரித்திரம் படிப்பது முக்கியமல்ல. சரித்திரம் படைப்பது முக்கியம். படைத்துக்கொண்டிருப்பவர் லோகன்.

புகழ் என்னும் நிழல் நம்மை தொடரவேண்டுமானால், நாம் வெளிச்சத்தில் இருக்க வேண்டும்.அப்படி இருப்பவர் லோகன்.

பிறர் தடம் பார்த்து நடப்பது முக்கியமல்ல. நாமும் புதிய தடம் பதிக்க வேண்டும். அவ்வாறு பதித்துக்கொண்டிருப்பவர் லோகன்.

பிறரின் வெற்றியின் உயரத்தை நாம் அண்ணாந்து பார்ப்பது மட்டுமல்ல, நமது வெற்றியின் உயரத்தையும் பிறர் அண்ணாந்து பார்க்க வேண்டும். அவ்வாறு பார்க்க வைத்துக்கொண்டிருப்பவர் லோகன்.

அற உணர்வும் அன்பு நெஞ்சமும் அவரது அடையாளங்கள். அவரது மகுடிக் குரல் கேட்டு பாம்புகள் மட்டுமல்ல புற்றுகளும் புறப்பட்டு வரும்.

எதையும் எதுமாதிரியும் இல்லாமல் புது மாதிரியாக செய்பவர் லோகன்.

தேனிக்கு தேன் எடுப்பது வேலையல்ல. அது ஒரு பரவசம். அதனால்தான் தேனுக்கு அவ்வளவு சுவை.

உழைப்பதும் தொண்டு செய்வதும் இவருக்கு வேலை மட்டுமல்ல. அது கூட ஒரு பரவசம்தான். அந்தவகையில் இவருக்கு ஒரு பட்டம் சூட்டலாம்.

**“மனிதத்தேனி”**

பெண்ணுக்கு அழகு கண்மை அல்ல. பெண்மை. இவருக்கு அழகு முகம் மட்டுமல்ல. எதிரிகளை அதிரவைக்கும் ஆண்மை.

இயல்பான நகைச்சுவை, சூழ்நிலையை சுவையாக்கும் குசும்புத்
தனம். இவருக்கு கைவந்த கலை.

உதயன் பத்திரிகையில் இவர் எழுதும் தலையங்கள், எழுச்சித் தோட்டாக்கள். எரியும் தீப்பந்தம்.

தன்னின மக்களின் எழுச்சிக்காக நலனுக்காக, இவர் ஆற்றிவரும் பணிகள் எதிர்காலத்தில் இடம்பெறப்போகும் சாசனங்கள்.

முதலில் கனடா வந்த என்னை கண்டெடுத்து கைகொடுத்து, ஆதரவு அளித்து அரவணைத்து, நண்பன் என்ற மகுடத்தையும் சூட்டியவர் இவர்.


அவர் நடத்திய விருது விழாவில் என்னையும் தேர்வு செய்து உலக மக்களின் கவனத்தில் பதித்தவர் இவர். என் வாழ்க்கைப் பாதையில் முக்கியமான மைல்க் கல் இது.

60ம் ஆண்டு என்பது ஒரு மனிதனின் வாழ்வுச் சக்கரம் ஒரு முறை சுற்றி முடித்திருக்கின்றது என்று பொருள். அவர் எந்த ராசியில் பிறந்தாரோ, அதே ராசி இந்த 60ம் ஆண்டில் மீண்டும் வரும். இவர் இன்னுமொரு அறுபதைக் கண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

இதற்கெல்லாம் அடிப்படை யார்?. இவருக்கு கிடைத்த அன்பு மனைவி பத்மலோசனி. இவர் வாழும் காலமெல்லாம் அவர் வாழ்ந்து இந்த வையகம் உயர வழி செய்வார்கள். அதற்கு நாமும் துணைநிற்போம்.

# நட்பின் நாயகர் என கவிப்பேரரசு வைரமுத்து அவர்களால் பாராட்டப்பட்ட எனது குடும்ப நண்பர் திரு ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்களின் ௬0வது பிறந்த நாள் வைபவத்திற்கான நல் வாழ்த்துக்கள்

**பரராஜசிங்கம்**
**ஸ்வேதா ஆர்ட்ஸ் திரைப்படத்தயாரிப்பாளர்**



" நவில் தொரும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"
"முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன்சொல் இனிதே அறம்",

திருமறை தந்த வள்ளுவர் வரிகளுக்கு ஏற்ப நட்பிற்கு இலக்கணமாய் இங்குள்ள அனைத்துத் தரப்பினரின் நன்மதிப்பைப் பெற்ற நண்பராகவும், ஊடகசேவை மட்டமின்றி பல்வேறு சமூகம் சார்ந்த பொதுசேவைகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் எங்களது குடும்ப நண்பர் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்கள் கடந்த 23.5.2013 அன்று 60 வது பிறந்த நாள் கண்டதுடன், அவரது உற்ற நண்பர்கள் சிறப்பானதொரு ஒன்றுகூடலை ஏற்பாடு செய்து, அவருக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் நளினமான ஒரு பிறந்த நாள் மலர் வெளியிடுவது என்பது மிகவும் பொருத்தமானதாகும். பொதுவாகவே சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்த்துடன் அனைவரும் போற்றும் வண்ணம் பல்வேறு சாதனைகளைப் பெற்ற எந்தவொரு நபராயினும், அவர் வாழும் காலத்திலேயே அனைவராலும் பாராட்டப்பட்டு அவரது புகழ் என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் செயல்படுவதே தார்மீகமாகும். அவ்வகையில் அனைத்து விதங்களிலும் மிகப் பொருத்தமானவராக இங்குள்ள கலை இலக்கிய ஆன்மீக அரசியல் என அனைத்துத் துறை சார்ந்தவர்களிடையே மிகவும் பிரபலமாய்த் திகழும் உதயன் ஆசிரியரை, கனடா மட்டுமின்றி சர்வதேச அளவில் அனைவரும் நன்கு அறிவார்கள்.

கனடாவில் வெளிவரும் பல பத்திரிகைகளின் மத்தியில் "உதயன்" என்றாலே அதற்கு உள்ள வரவேற்பும், நன்மதிப்பும் அபரிதமானது என்றால் மிகையில்லை. தாயகத்திலிருந்து கனடாவிற்கு புலம் பெயர்ந்த நாள் தொட்டு, தன்னை முற்றும் முழுதாக ஊடகச்சேவைக்கு அர்ப்பணித்துள்ளதோடு " நல்லதோர் குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்" என்ற பழமொழிக்கேற்ப தனது குடும்பத்தினரையும் உதயனில் ஈடுபட வைத்து, கடந்த 16 ஆண்டுகளாக வெற்றிகரமாய் ஒரு பத்திரிகையை நடத்தி வருகிறார் என்றால், உண்மையிலேயே இது ஒரு அரும் பெரும் சாதனை என்று தான் கூற வேண்டும். அந்த அளவிற்கு தனது பத்திரிகையில் வெளியிடும் அத்தனை அம்சங்களும் வாசகர்களை திருப்திபடுத்தும் வகையில் அமைந்திருக்கும்.

தாயகம் மற்றும் சர்வதேச தகவல்கள், சமூக நிகழ்வுகளின் தொகுப்புகள், நேர்காணல்கள், இங்குள்ள பிரபலகலை இலக்கிய ஆன்மீகப் பற்றாளர்களின் கட்டுரைகள் ஆகியவற்றோடு சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், சோதிட சாஸ்திரம், சினிமா, விளையாட்டு, இங்குள்ள ஆலய நிகழ்ச்சிகள், மருத்துவம் சார்ந்த விடயங்கள் என ஒரு குடும்பத்திற்கு தேவையான ஜனரஞ்சகமானதொரு வார இதழாக மலர்ந்து வருவதால் தான் இங்குள்ள வர்த்தகத்துறை சார்ந்தவர்கள் முதல் பாமரனையும் கவர்ந்து, தங்களது தொழில் சார்ந்த விளம்பரங்கள, குடும்ப நிகழ்வுகளை உதயனில் பிரசுரிப்பதில் ஆர்வம் கொண்டவர்களாக நல் ஆதரவு தந்து அதன் வளர்ச்சிக்கு துணை நின்று அவரைப் பெருமைப்படுத்தி வருகின்றார்கள் என்பது நிதர்சனமாகும். என்னைப் பொருத்தவரை அவரும் ஒரு கலைஞர் என்ற வகையில், எனது துணைவியாரின் நிருத்தியகலாஞ்சலி நாட்டியப்பள்ளியின் வளர்ச்சிக்கும், சாதனைகளுக்கும் பெரும் பங்களிப்பு தந்து அதரவளிப்பவர். அதுபோன்றே எனது தயாரிப்பில் உருவான தமிழ் திரைப்படங்களிலும் பங்கேற்று, பாடல்கள் எழுதியுள்ளவர். இவ்வாறு நம்மிடையே வலம் வரும் இனிய நண்பரான அவரின் பிறந்ர் நாள் சிறக்கவும், அவர் பல்லாண்டு வாழ்ந்து வளமும் நலமும் பெற மனதார இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துவதில் எனது குடும்பம் பெரு மகிழ்ச்சி அடைகிறது.

உதயனின் சேவை ஒளிவீசி உயர நல் வாழ்த்துக்கள்!

# உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் ஒரு பன்முக சமூகசேவையாளர்




அறுபதாவது அகவை காணும் நண்பர் லோகேந்திரலிங்கம் அவர்களை வாழ்த்துவதில் யான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். அவர் ஒரு சிறந்த பன்முக சமூக சேவையாளர். அவரின் சமூகப்பார்வையும்,சமூக சேவைகளும் பல் தரப்பட்டவை.

அவர் ஒரு சிறந்த ஊடகவியலாளராக மக்களால் இனங்காணப்பட்டபொழுதிலும் அவர் தமிழ்ச்சமூகத்திற்கு ஆற்றிவரும் சேவைகள் மகத்தானவை. அவரின் தேசியப்பற்றும் மொழிப்பற்றும் அளவிடமுடியாதவை. அதற்காக அவர் செய்து வரும்சேவைகள் உலகத் தமிழ் மக்கள் யாவராலும் பாராட்டத்தக்கவையாகவிருப்பது கண்கூடு.இன்று கனடாவில் முதல்தரப் பத்திரிகையாகவிளங்குவது அவரால் நடாத்தப் பட்டுவரும் உதயன் பத்திரிகையென்றால் அதுமிகையாகாது. அப்பத்திரிகையின்வாயலாகக் கனடியத் தமிழ் மக்களுக்கு அவர்ஆற்றிவரும் சேவைகள் அளப்பரியன. கனடாவில் நடைபெறும் அரசியல் நிகழ்வுகளாயிருந்தாலென்ன, மக்கள் அறியவேண்டிய சமூக நிகழ்வுகளாயிருந்தா லென்ன,மக்களுக்கு நன்மைபயக்கும் எந்த விடயங்களாகவிருந்தாலென்ன அன்றேல் மக்களைப் பாதிக்கும் விடயங்களாகவிருந்தாலென்ன, நடுநிலை நின்று அவற்றை உடனுக்குடன் மக்களைச் சென்றடையச் செய்வதில் முக்கிய பங்காற்றிவருகிறார். அவரிடம்யான் கண்ட சிறந்த பண்புகளை என்னால் பாராட்டாமலிருக்கமுடியாது. தனக்கு வேண்டியோர்,மற்றவர்களென்றெண்ணாது யாருடைய நிகழ்வுகளென்றாலென்ன அவற்றைப் பிரசுரித்து, அவர்களைப் பாராட்டவும் ஊக்கப் படுத்தவும் தவறமாட்டார். மற்றவர்களுக்கு உதவி செய்வதிலும் பின்வாங்கமாட்டார்.கனடாவில் வாழும் அரசியல் தலைவர்கள் தொடக்கம் சாதாரணமக்கள் வரை அவரின் சமூகசேவைகளைப் பாராட்டுவதைக்காணலாம். அவர் தமிழ் மக்களோடு மட்டுமன்றிப் பிறசமூகத்தவரோடும் சிறந்த தொடர்புகளைப் பேணிவருபவர்.இவர் கனடாவில் நிகழும் தமிழ்மக்கள் சார்ந்த எல்லா முக்கிய நிகழ்வுகளிலும் பங்குபற்றி வருவதோடு தனது பங்களிப்பையும் சிறப்பாகச் செய்து வருபவர்.
அவர் வருடாவருடம் உதயன் விழாவை வெகு சிறப்பாகநடாத்தி, அதில் உள்நாட்டு வெளிநாட்டுச் சாதனையாளர்களைக் கௌரவித்துவருவதோடு உள்ளூர்,வெளியுர் கலைஞர்களையும் அழைத்து பல கலை நிகழ்ச்சிகளையும் நடத்திவருவதையும் நாம் அனுபவாயிலாகக் கண்டு களித்துள்ளோம். இவர்பத்திரிகைத்துறையில் மட்டுமல்லாது இன்று கனடாவில் உள்ளபல தமிழர்களின் அமைப்புக்களிலும் சிறப்பாகப் பங்காற்றியும் வருகிறார். தாயகத்திலே நடந்த உள்நாட்டு யுத்தகாலங்களில் தாய்நாட்டின் செய்திகளை மிகவும் தெளிவாகவும் மக்களை உற்சாகப்படுத்தும் விதமாகவும் தெரியப்படுத்தியதோடு பல நிகழ்வுகளிலும் உணர்வு பூர்வமாகவும் கலந்து கொண்டதையும் நாம் காணக் கூடியதாகவிருந்தது. இன்று உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்திலும் முக்கிய பதவியிலிருந்து பலநாடுகளுக்கும் சென்று அரும்பணியாற்றி வருகிறார். இவர் ஒரு தற் பெருமையற்ற சிறந்த சமூகத் தொண்டனாவார். மக்களை மதிக்கின்ற தன்மையும், கல்வியாளர்களைப் பாராட்டும் தன்மையும் கொண்டவர். இவருடையசேவை புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு அளப்பரிய கொடையாக அமைந்துள்ளமையைக் குறிப்பிடாமலிருக்க முடியாது. இவரின் சேவைகளுக்கெல்லாம் உறு துணையாகவிருந்து செயல்ப்படுவதோடு, மக்களோடு மக்களாக இணைந்து செயற்பட்டு வரும் இவரது துணைவியாருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.இவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து, மக்களுக்குப் பல சேவைகளை ஆற்ற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்தித்து என் உளங் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**கலாநிதி.எஸ்.சிவநாயகமூர்த்தி**
**முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்**

# உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் - என் பார்வையில்

**புதுவை இராமன்**



ஊடகச்சேவையில் தனக்கென ஒரு தனித்துவமான கொள்கைப் பிடிப்புடன் எந்த வித பாரபட்சமுமின்றி, தன் மனதில் பட்ட கருத்துக்களையும், அபிப்ராயங்களையும், விமர்சனங்களையும் உயர்ந்த சிந்தனையுடன் கடந்த 17 வருடங்களாக அனைவரின் நன்மதிப்பையும், பாராட்டுதல்களையும் பெற்று, 23.5.2013 அன்று தனது 60வது பிறந்தநாளை தனது இல்லத்திலேயே கொண்டாடிய கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசிரியர் திரு ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்களை தெரியாதவர்களே இல்லை என்று கூறலாம்.
அந்த அளவிற்கு கனடாவிற்கு புலம் பெயர்ந்து முதன் முதல் சூரியன் என்ற பத்திரிகை மூலம் தன்னை ஒரு ஊடகவியலாளராக அறிமுகப்படுத்திக் கொண்டு. பின்னர் தனது சொந்தப் பத்திரிகையான "உதயன்" மூலம் இன்று கனடா மட்டுமின்றி சர்வதேச அளவில் ஒரு சிறந்த பத்திரிகையாளர் - பிரதம ஆசிரியர் என்ற அந்தஸ்துடன் அனைவரும் போற்றி பாராட்டும் வண்ணம் தமிழுக்கும், தமிழர்களுக்கும் பெருமை சேர்த்து வரும் தாயகத் தமிழர் ஆவார்.

கனடாவிற்கு புலம் பெயர்ந்த புதிதில் எந்த வித வெளிநாட்டு அனுபவமும் இல்லாத இந்நாடு என்னை அனைத்து வகைகளிலும் நாட்கள் செல்லச் செல்ல பல வகைகளில் கவர்ந்தது என்றால், அதற்கு துணை நின்றது இங்குள்ள இலங்கைத் தமிழர்களின் அன்பும், உபசரிப்பும், நட்புணர்வும், விருந்தோம்பும் பண்பும், கலை இலக்கிய ஆன்மீக ஈடுபாடும் என்னை வியக்க வைத்தன. அதிலும் நான் பாண்டிச்சேரியில் அரசு மருத்துவத் துறையில் நலவழிக்கல்வியாளராக 30 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளதோடு, அங்கு வெளிவரும் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் அவ்வப்போது நடைபெறும் சமூக கலாச்சார நிகழ்வுகளையும், அரசு நடத்தும் பல்வேறு விழாக்களையும், அங்குள்ள பல்வேறு கலை இலக்கிய அமைப்புகள் நடத்தும் சிறப்பு விழாக்களையும் தொகுத்து எழுதி வந்து ஊடகத்துறையிலும் ஈடுபட்டு அனைவரின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளேன். அதற்கேற்ப கனடா வந்ததிற்குப் பின் அதன் தாக்கமும், ஆர்வமும் என்னுள் தணியாத தாகமாய் இருந்தது. அது சமயம் இங்கு நம்மவர் மத்தியில் மிகவும் பிரபலமான தமிழன் வழிகாட்டி திரு செந்தி அவர்கள் மூலம், தாயகத்தில் மிகச் சிறந்த ஆன்மீகப் பேச்சாளரும், இலங்கை கம்பன் கழகச் செயலாளர் திரு இலங்கை ஜெயராஜ் அவர்கள், கம்பராமாயணம் பற்றிய தொடர் சொற்பாழிவு நடத்த புலவர் ஈழத்து சிவானந்தம் வீட்டில் தங்கியிருந்த வேளையில், உதயன் பத்திரிகையில் வெளிவந்த தகவல் அறிந்து திரு செந்தியை தொடர்புகொண்டு, முதன் முதலாக உதயன் அலுவலகத்திற்கு அவருடன் சென்று அதன் பிரதம ஆசிரியரைச் சந்தித்து அறிமுகப்படுத்திக் கொண்டேன். அவரின் உபசரிப்பும், அவர் காட்டிய நட்புணர்வும் என்னைக் கவர்ந்தது. உடனே அவரே என்னை அன்று மாலை இங்குள்ள சங்கமம் பேங்கட் ஹாலிற்கு அழைத்துச் சென்றது இன்றும் எனது நினைவில் பசுமையாய் உள்ளது. இலங்கை ஜெயராஜ் அவர்கள் எனக்கு பல ஆண்டு காலம் புதுவை கம்பன் கழகம் மூலம் நெருங்கிய தொடர்பு

கொண்டவன் என்பதோடு, என் மீது அவர் காட்டும் அளப்பரிய பாசமும், பரிவும் என்றும் நன்றிக்கடனும் நிலைத்திருப்பதாகும். அதுவும் என்னை கனடாவில் பார்த்ததும் வியப்புற்றதோடு, அந்நிகழ்விலேயே என்னை அறிமுகப்படுத்தி, உதயன் எனது ஊடகச் சேவையை பயன்படுத்த வேண்டும் என என்னைப் பாராட்டி உரையாற்றியதை மறக்க முடியாததாகும். அதற்கேற்ப அவரது நிகழ்வுகளை தொகுத்து முதன் முதல் உதயனுக்கு அனுப்பி அவை பிரசுரமானது என்பதுதான் எனது எழுத்தாற்றலுக்கு விதையிடச் செய்து, கடந்த 13 ஆண்டுகளாக எனது கட்டுரைகளை தொடர்ந்து வெளியிட்டு பெருமையுறச் செய்தும், அதற்கான ஊதியத்தையும் வழங்கத் தவறுவதில்லை என்பதை நன்றிப் பெருக்குடன் கூற விரும்புகிறேன். என்னைப் பொறுத்த வரை இங்கு ஊடகச் சேவை என்பது எத்தகைய இடர்பாடுகளையும், போட்டி பொறாமைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதோடு, முற்றிலும் இலவசமாய் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் வெளிவரும் பத்திரிகைகளின் எண்ணிக்கை கூடுதலாய் இருந்து, தற்போது 12 வார சஞ்சிகைகள் மட்டுமே தாக்கிப் பிடிக்கின்றன. காரணம் அனைத்து இதழ்களும் இங்குள்ள வர்த்தக வியாபார நிறுவனங்களின் விளம்பரங்கள் மூலம் பெறும் வருமானத்தினால் தான் பிரசுரிக்கப்படுகின்றன. அவற்றில் மக்கள் பத்திரிகையாக முதலிடம் வகிக்கும் உதயனுக்கு உள்ள தனித்துவமான சிறப்புகள் ஏராளம். வருடந்தோறும் நடத்தும் உதயன் பல்சுரவ விழா மற்றும் உதயன் சர்வதேச விருது விழா ஆகியவை அவரின் ஊடகச்சேவைக்கு உலகளவில் பெரும் வரவேற்பும், அபரித அங்கீகாரமும் அனைத்து வகைகளிலும் அளித்துள்ளதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அதற்கும் மேலாக அவரின் சமூகப் பற்றும், பொதுநலச் சேவைகளும் அபரிதமானவை. பிறருக்கு உதவி செய்வதிலிருந்து, தாயக மக்களின் துயர் துடைப்புப் பணிகளில் திரு வி.எஸ்.துரைராஜ் அவர்களை தலைமையாகக் கொண்ட **Voice of Humanity,** கனடா உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச ஊடகப் பொறுப்பாளராகவும், **National Ethnic Press & Media Council- Canada** வின் உப தலைவராகவும், கனடா தமிழ் எழுத்தாளர் இணைத்தின் முன்னாள் தலைவராகவும் பல பொறுப்புகளை வகித்துள்ளதோடு, தனது எழுத்தாற்றல் மூலம் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், அரசியலட பிரமுகர்கள் முதல் அனைத்து வர்த்தகத்துறைப் பிரபலங்கள் வரை நேர்காணல் என அவர் தொடாத துறையே இல்லை எனலாம் என்பதோடு, இங்கு தயாரித்து வெளிவந்த ஒரு சில தமிழ்த்திரைபடங்களிலும் சில காட்சிகளில் நடித்துள்ளார். இவ்வாறு அவரது நட்பு வட்டம் நாளுக்கு நாள் பெருகி வருவதோடு, அவருக்கென்று எப்போதும் நெருங்கிய நண்பர்களாகத் திகழும் மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு கனக சபாபதி, கவிநாயகர் கந்தவனம், டாக்டர் கதிர் துரைசிங்கம், திரு குணா செல்லையா, திரு செந்தி, ஈசி பை ஹோம் திரு கிருபா கிருஷாந்த், **Can West** திரு லோகன் ராசய்யா, திரு ஆர்.ஆர்.ராஜ்குமார், கலாநிதி இ.பாலசுந்தரம், ஆசிரியர் திரு சிவபாலு, சட்டத்தரணி திரு மனுவல் ஜேசுதாசன், சட்டத்தரணி திருமதி மெலனி டேவிட், ஸ்வேதா சினி ஆர்ட்ஸ் திரைப்படத் தயாரிப்பாளரும் பிரபல **Gem Export & Import** அதிபர் திரு பரராஜசிங்கம் போன்றவர்களும், இங்குள்ள எண்ணற்ற நுண்கலைக்கூட அதிபர்கள், மருத்துவர்கள், ரியல் எஸ்டேட் அதிபர்கள், ஊடகத்துறைச் சார்ந்தவர்கள் குறிப்பாக அரசியல் பிரமுகர்களான திரு ஜிம் கர்ஜியானிஸ், திரு லோகன் கணபதி, திருமதி ராதிகா சிற்சபைஈசன் என பட்டியலிட்டால் இடம் போதாது. எனினும் அவரது பத்திரிகைக்கு தொடங்கிய நாள் முதல் இன்று வரை முகாமையாளராக இருக்கும் திரு தயானந்த சோதி மற்றும் உற்ற நண்பர் திரு மரியதாஸ் ஆகியோரை குறிப்பிடத்தான் வேண்டும். இவ்வாறு அனைவரும் போற்றி மதித்திடும் மனிதநேயம் கொண்ட ஒரு பண்பாளராக இருந்தாலும் கூட,

அவரிடம் உள்ள ஒரேயொரு குறை கோபம் மட்டுமே. கோபம் உள்ள இடத்தில் தான் குணம் இருக்கும் என்று சொன்னாலும், அவரின் கோபமும், அவர் பிறரை சடாரென்று தன் கோபத்தால் தனது எண்ணங்களையும், கருத்துக்களையும் கூறி விமர்சிப்பதும் தான் சில சமயங்களில் அவருக்கே சில இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. எனக்கே இந்த அனுபவம் பல முறை ஏற்பட்டிருந்தாலும், அதனை மறக்கச்செய்து நகைச்சுவையாக அவர் என்னிடம் பேசுவதும், பழகுவதும், என்னை இன்றளவும் இங்குள்ள தாயக உறவுகளுக்கு அறிமுகப்படுத்தி அனைத்துத் தமிழ் சமூகத்தினரின் பெரும் அங்கீகாரமும், நட்பும் ஏற்படுத்தி அனைவரும் பாராட்டும் வண்ணம் என்னை அடையாளப்படுத்திய அவரது தகைமைக்கு நான் என்றும் நன்றிக் கடன் பட்டவன் என்ற ரீதியில், அவர் கடும் சொற்கள் கூறினாலும் அதனை மறந்து நட்புணர்வுடன் மதித்து போற்றி வருகிறேன். இந்த அனுபவம் எனக்கு மட்டுமல்ல, அவருடன் நெருங்கிப் பழகும் பலருக்கு ஏற்பட்டதுண்டு. எனவே அவரது உள்ளம் வெள்ளந்தியானது தான்.

மேலும் அவரின் அன்றாட வாழ்க்கையில் அவரின் உடல் நலத்திலும் அக்கறை கொள்ளாமல், இருமல், சளி போன்ற உபவத்திரவத்தைக் காணும்போதெல்லாம், அவரிடம் தினமும் கற்பூரவல்லி செடியிலிருந்து 5 இதழ்களை பறித்து தினமும் காலை இரவு என வாயில் போட்டு மெல்வதுடன், இரண்டு நாளைக்கு ஒரு முறை மிளகு, சீரகம், பூண்டு 3 பற்கள் சேர்த்து உப்பு சேர்த்து, தேவையென்றால் சுவைக்கு கொஞ்சம் எலுமிச்சம் பழம் சாறு சேர்த்து ரசமாகக் குடிப்பது சளிமட்டுமல்ல, இருமலையும் கட்டுப்படுத்தி, தொண்டை கரகரப்பை நீக்கும் என்ற பலமுறை கூறியும் அதற்கு முக்யத்துவம் கொடுப்பதில்லை. தவிர அவர் காபி குடிப்பதே இல்லை என்றாலும் உரிய நேரத்தில் உணவு அருந்துவதும் இல்லை. எனவே அவர் ஆரோக்கியத்திற்கும் கவனம் செலுத்த வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

இந்து மதத்தவர்களின் சோதிட சாஸ்திர கணிப்புகளின் படி நம் ஒவ்வொரு வாழ்க்கையில் 60 வயது என்பது வாழ்க்கையின் இரண்டாவது சுற்று ஆரம்பமாவதாக கூறப்பட்டுள்ளது. வாழ்க்கையை பலர் வெற்றிகரமாக அமைத்துக் கொண்டாலும் அவர்களில் ஒரு சிலர் தன்னலமற்ற பொதுச்சேவைகள் பலவற்றை செய்வதன் மூலம் மற்றவர்களின் நலன்களுக்காகவும் தன்னலமற்ற தொண்டுகள் புரிந்து அனைவரின் மத்தியில் போற்றப்படுபவர்களாக திகழ்வதைப்போல், உதயன் பிரதம ஆசிரியர் ஊடகச்சேவையுடன் இதுபோன்ற பொதுநலச்சேவையில் ஈடுபட்டு வருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அவரின் இன்றைய மணிவிழா அவரது நலம் விரும்பிகள் அனைவராலும் முன்னெடுக்கப்பட்டு நம் அனைவரையும் மிகிழ்விப்பது, நாம் அனைவரும் அவரிடம் கொண்டுள்ள நட்புணர்வும், மரியாதையும் அளவு கடந்த அன்பும் தான்.

மிகுந்த இறையுணர்வும், அனைவரின் நன்மதிப்பையும் பெற்றுள்ள இப்பெருந்தகையின் 60ம் ஆண்டு பிறந்த நாளை 23.5.13 அன்று கொண்டாடி மகிழ்ந்துள்ளதோடு, அதனையே ஒரு சிறப்பு வைபவமாக 9.6.13 அன்று அவரின் நண்பர்கள் ஏற்பாடு செய்துள்ள வேளையில், அவர் மீது நான் கொண்டுள்ள நன்றியுணர்வே அவரை வாழ்த்திச் சிறப்பிப்பதில் மிக மகிழ்ச்சியுடன் எனது பார்வையை இக்கட்டுரையாகச் சமர்பிப்பதில் பெருமைப்படுகிறேன்.

வாழ்க பல்லாண்டு வளமும் நலமும் பெற்று!

**புதுவை இராமன்,**
**ஊடகவியலாளர்**

# பாரதி கலைக்கோயிலின் பற்றுமிக்க பத்திரிகையாளர்



பவதாரணியின் பாரதி கலைக்கோயிலின் நிகழ்வுகள் எங்கு நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் அண்ணன் லோகேந்திரலிங்கம் வருகைதந்து தனது ஆதரவுக்கரத்தைக் காட்டத் தவறுவதே இல்லை. அவரது ஊக்குவிப்பு எமது கலைக்கோயிலின் வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பாகவே நாம் கருதுகின்றோம்.
எங்களது வளர்ச்சியில் எவ்வளவிற்கு அக்கறையோடு பங்களித்தாரோ அந்தளவிற்கு எங்களை உதயனின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவும் வைக்கும் பாங்கையும் உரிமையோடு எமக்கு வளங்கிவருகின்றார் என்றார் அது அவர் எங்கள் மீது கொண்டுள்ள அன்பையும் மதிப்பையும் எடுத்துக்காட்டுவதாகும். இன்பமோ துன்பமோ அனைத்திலுமே மிகவும் அக்கறையோடு ஈடுபாடு கொண்டு செயற்படும் ஒரு மகத்தான மனிதப் பண்பாளராக அவரைக் காணலாம்.
இயந்திரமயமான இந்த உலகில் மனிதர்களை மதித்து அவர்களுக்கு உதவவேண்டும் என்னும் மனப்பாங்கு கொண்டவர்கள் அருகிவிட்ட எமது சூழலில் மக்கள் நிகழ்வுகள் அனைத்திலும் கலந்துகொண்டு அவர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் மனித நேயனாக ஒரு பத்திரிகையாளர் எம்மத்தியிலே உலவிவருகின்றார் என்றால் அதில் முதலாவது இடத்தில் நான் அண்ணன் ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களைத் தான் வைப்பேன். நட்புரிமைபூண்டு நல்மனத்தோடு பழகக்கூடிய ஒரு அன்புள்ளம் கொண்டவர் அவர்.

செயலாற்றல் மிக்க ஒரு நண்பராக எமக்குக்கிடைத்தவர் அவர். தனது பத்திரிகைப் பணியோடு பல்வேறு சமூகப்பணிகளிலும் அகலக்காலை வைத்து செயற்படும் அவரது பரந்த மனப்பாங்கை நான் நன்கு அறிவேன். ஈழத்தில் சுனாமியால் அல்லலுற்ற மக்களுக்கும்சரி, வேறு நிலைகளில் பதிக்கப்பட்ட மக்களுக்கும்சரி அவர் உதவிசெய்யவேண்டும் என நண்பர்களைத் திரட்டிச் செயற்படும் பாங்கு பாராட்டத்தக்கது.

எந்த நிழ்வானாலும் அதனைபற்றி விளம்பரம் செய்வதற்கு அவர் ஒருபோதும் பின்நிற்பதில்லை. பல தடவைகள் அவராகவே கேட்டு அறிவித்தல்களைத் உதயன் பத்திரிகையில் இடம்பெறச் செய்திருக்கின்றார் என்றால் அவர் எம்மீது கொண்டுள்ள மதிப்புப் பற்றும் அக்கறையும் எத்தகையதுத என்பது வெளிப்படை.

அன்பும் பண்பும் மக்களைத் தன்பக்கம் வசீகரித்துக்கொள்ளும் மனப்பக்குவமும் கொண்ட அவருக்கு அறுபது அகவை என்பதனை நம்பவே முடியவில்லை. மிக இளமைத்துடிப்போடு எங்கும் எப்போதும் வருகைதந்து தனது ஆதரவைத் தருகின்ற அவர் மாறா இளமையோடு மனம் மகிழ்ந்து வாழவேண்டும். அவரது இளமைக்கும் இடையறாத சமூகப் பணிக்கும் அவரது துணைவியார் திருமதி பத்மலோஜினி லோகேந்திரலிங்கம் அவர்கள்தான் முக்கிய காரணி என்பதனை நான் அறிவேன். வாழ்க்கையில் அவருக்குக்கிடைத்தற்கரிய பேறாகக் கிடைத்தவர் அவர். அவர் மூலம் கிடைத்த குழந்தைச் செல்வங்களோடு இன்புற்று இன்றுபோல் என்றும் நலத்துடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**மதிவாசன் சீனிவாசகம்**
பவதாரணியின் பாரதி கலைக்கோயில்.

# தனித்துவமான மனிதர்



ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் நம்மவரில் முதல் தலை முறையைச் சேர்ந்த ஒருவரே திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள். வளமுடன் வாழ்ந்த எம் இருப்பை விட்டு புதிய பூமி, புதிய வாழ்க்கை முறை, புதிய சூழல் இவற்றை எதிர் கொண்டு வாழப் புறப்பட்ட நம்மவரில் பலரும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகிறார்க்ள.

அதிலும் முதலாம் தலை முறையைச் சேர்ந்தவர்கள் துலங்குகிறார்கள் என்பது சாதாரண விடயம் அல்ல. அந்த வகையில் தனக்கென ஒரு துறையை, பத்திரிகைத் துறையைச் தேர்ந்தெடுத்து அதில் முதன்மையாளராக – அதிலும் இன்று உலகின் சகல பகுதிகளில் வாழும் தமிழர்களும், பல்வேறு இனங்களைச் சேர்ந்தவரும், அரசியல் பிரமுகர்களும் அறிந்திருக்கக் கூடிய துறையாகவும் - பலவகையில் பலருக்கும் பயன்படக் கூடியதாகவும் உருவாக்கி உள்ளார் என்றால் மிகையாகா.

எல்லோரிடமும் ஒரே விதமாக மனித ஆற்றல் தான் உள்ளது. ஏன் ஒருவர் மட்டும் வெற்றி பெறுகிறார்! புகழ் பெற வேண்டும் என்றால் அவர் தனது பலத்தையம் பலவீனத்தையும் புரிந்து கொண்டு திட்டமிட்டு விடாமுயற்சியுடன் செயற்படுவதே ஆகும். உலகில் உள்ள ஒவ்வோர் உயிர்க்கும் பலமும் உண்டு, பலவீனமும் உண்டு. அதைப் புரிந்து கொண்டவரே வெற்றி பெற முடியும்.

அத்துடன் பாதைகள் தாமாக அமைந்து கிடப்பதில்லை. அவற்றை நாம் தான் அமைக்கிறோம், அமைத்தல் வேண்டும். தனக்கென ஒரு பாதையை வகுத்துக் கொண்ட தனித்துவமான மனிதர்.

60வது அகவை காணும் திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள். அவர் சகல செல்வங்களைப் பெற்று மகிழ்வுடன் நீண்ட வாழ்வு வாழ என் குடும்பத்தின் சார்பிலும், Active Brain Centerஇன் ஆசிரியர்கள், பெற்றோர் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"உலகம் உள்ளவரை (சூரிய) உதயம் இருக்கும்"

வாழ வளமுடன் வாழ்த்தும்

**சுப்பிரமணியம் இராசரத்தினம்**

தலைவர்

ABC ABACUS

## சமூகப் பணியாளர் - நண்பர் R. N. லோகேந்திரலிங்கம்



'அரிது அரிது மானிடராதல் அரிது' என ஆன்றோர் கூறியது அர்த்தமுள்ள வாசகம். மானுடம் / மனிதம் பற்றி உணர்ந்தவராக மனிதர் வாழ வேண்டும். தான் - தன் குடும்பம் என்ற மனோநிலை நிச்சயம் எம்மவர் மத்தியிலிருந்து நிச்சயம் அகல வேண்டும்.

பொதுப் பணி – சமூகத்தொண்டு என்பவற்றில் எவரொருவர் தன்னை இணைத்துக்கொள்கிறாரோ அவரே மானுடராகின்றார். அதிலும் ஒரு முக்கிய விடயம் என்னெனின், தன்னலம் கருதாத பொதுப்பணியே சமூகத்தால் அங்கீகாரம் பெறுவதாகும். மனிதர் ஒவ்வொருவரும் சமூகத்துடன் இசைவாக்கம் பெற்று சமூகக் கூட்டுணர்வோடு வாழும்போதே அச்சமூகத்தில் எல்லோரும் அமைதியாக இன்பமாக வாழ வாய்ப்பாகின்றது.

இச்சமூக நோக்கு, நண்பர் லோகேந்திரலிங்கம் பற்றி எழுதும்போது முனைப்புப் பெறுகின்றது. இளமையிற் பழக்கம் இறுதி வரையும் தொடரும் என்பதைப் பல்வேறு பழமொழிகள் வாயிலாகவும் சான்றோரது வாழ்க்கை வரலாறுகள் ஊடாகவும் அறிந்திருக்கின்றோம். பொதுப்பணிகளில் ஈடுபடுதல் என்பதை நான் பூர்வ புண்ணிய பலன் என்றே நான் கருதுகின்றேன். லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது இளமைக் காலத்தில் நண்பர்களோடு இணைந்து பொதுப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். அவர் தம் இளமைக் காலத்திலே திருநெல்வேலி காளிகோவிலடியில் அமைந்திருந்த சனசமூகநிலையத் தொண்டராக – தலைவராகச் செயற்பட்டிருக்கிறார். அப்போது, புதுவை இரத்தினதுரை அவர்களுடன் இணைந்து இலக்கியப் பணிகளிலும் ஈடுபட்டு "கீற்று" என்ற சஞ்சிகை வெளியிட்டுள்ளனர். எழுத்தாளர்கள், புத்திஜீவிகள், கவிஞர்கள் முதலானோரை அழைத்து மாதமொரு கருத்தரங்கு – கவி அரங்கு எனப் பன்முகச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கிறார். மேலும், இளைஞர்களுக்கான முற்போக்குப் பணிகளிலும் அவர் செயற்பட்டிருந்தார் என்பதையும் நான் அறிகின்றேன்.

மூன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் மக்கள் கனடாவில் வாழ்கிறோம். நம்மில் எத்தனை வீதத்தினர் பொதுப்பணிகளில் ஈடுபடுகிறார்கள் என்பதைச் சிந்திக்கும்போதே பொதுப்பணி யாளர்களின் பெருமை புலப்படுகின்றது. பொதுப்பணியார் தம் ஓய்வு நேரங்களையும் நாட்களையும், தாம் குடும்பத்தினருடன் சேர்ந்திருந்திருக்க வேண்டிய பொன்னான நேரங்களையும் பொதுச் சேவையில் முதலீடு செய்கின்றனரே என்பதை மற்றையோரர் நினைத்துப் பார்ப்பதே கிடையாது. அதற்கும் மேலாகத் தம் பணத்தையே பொதுப்பணிக்காகச் செலவிடும் அவலநிலைக்கும் இவர்கள் ஆளாகின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டுதல் அவசியமாகின்றது. சான்றாக ஒரு நிகழ்வை மட்டும் குறிப்பிடலாம். நண்பரும் நானும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு

இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களாகச் செயற்பட்டோம். தென்னாபிரிக்கா, ஜேர்மனி, பிரான்சு, சந்தியாகோ முதலான பல்வேறு இடங்களுக்குப் பல முறை சொந்தப் பணத்தில் பொதுப்பணிக்காகச் சென்றிருக்கின்றோம். இது எல்லோரும் விரும்பிச் செய்யும் காரியம் அல்ல. மேலும், லோகேந்திரலிங்கம் அவர்கள் பல பொதுப்பணி மன்றங்களிலே பொறுப்பு வாய்ந்த உறுப்பினராகச் செயற்படுகின்றார். அத்தனை மன்றங்களிலும் அவரது பங்களிப்புக்கள் பல்வேறுவகைகளில் இடம்பெற்று வருவதற்கு நானே சாட்சியாகின்றேன்.

பண்பாட்டுணர்வும் கலை ஆர்வமுமிக்க லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது "உதயன் வார மஞ்சரி" மூலம் எழுத்தாளர்களுக்கும் பல்துறைக் கலைஞர்களுக்கும் பக்கபலமாகச் செயற்பட்டுவருவதைக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. கலை நிகழ்ச்சிகளுக்கும், சமூகச் செய்திகளுக்கும் அவர் அளிக்கும் முக்கியத்துவம் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். இவ்வாறாக லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது பத்துரிகை வாயிலாகவும், சமூகக் கூட்டுறவு மூலமாகவும் புலம்பெயர் தமிழ்ர்களுக்காக ஆற்றிவரும் சமூகப்பணி மகத்தானது என்பதைக் குறிப்பட்டு, அவர் தொடர்ந்ம் தம் சமூகப் பணிகளை முன்னெடுத்துச்செல்ல இறைவன் அருள் வேண்டி, வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் இ. பாலசுந்தரம்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
கனடா வளாகம்.
றொறன்ரோ, 07.05.2013

# சமூகத்தைக் கொண்ட சிறப்பான மனிதநேயர்



கனடா வரலாற்றில் தனக்கெனத் தனித்துவமான இடத்தைப் பிடித்துக் கொண்ட புலம்பெயர்ந்த நாட்டுப் பத்திரிகையாளரில் பல்வேறு முகங்களைக் கொண்டவர்களில் முன்னணியில் நிற்பவர் லோகேந்திரலிங்கம்.

''உதயன்'' என்றால் லோகேந்திரலிங்கம் தான். நீண்ட பெயரைச் சுருக்கிச் சொல்லும் மரபுள்ள தமிழ்ச் சமூகம் ''உதயன்'' என்ற பெயரை அவருக்கும் சூட்டி உதயன் என்றே அழைப்பது வழக்கமாகி விட்டது. அவரிடம் ஆழ்மனதில் சமூகம் பற்றி உணர்வு ஊறிப்போய் வளரவளர விசாலமாக ஆலமரம் போல் ஓங்கிப் பல விழுதுகளாக வளர்ந்து சமூகத்தளம் நோக்கி நிற்கின்றது. மொழி, மதம், இனம் என்ற எல்லைக்குள் தன்னை அடக்காது மனிதநேயம் என்ற தொட்டிலை நன்றாகவே ஆட்டிஆட்டி மனிதனுக்குரிய பண்புகள் மேலோங்க வைத்து மனிதத்துக்குரிய மாண்புகளைக் கொண்ட மாமனிதராக வளர்த்துள்ளார். இளமைக் காலத்தில் மலையக மக்கள் வாழ்வுடன் ஒன்றிப்பிணைந்தமை லோகேந்திரலிங்கத்தை ''மனிதப்பண்பு'' நிறைந்தவராக ஆகுவதற்கான பிரதான காரணமாகும். மனிதநேயம் மட்டுமன்றி இயற்கையிலும், ஏனைய உயிர்களிடத்தும் பாசப்பிணைப்பைக் கொண்டு வளர்ந்த ஒரு பண்பு அவருடைய பெற்றார், சுற்றம், சூழல் தந்த பிரக்ஞையாகவும் அமைந்துள்ளது.

''மலையன்பன்'' என்ற பெயரைத் தாங்கி கவிதை புனையப் புகுந்தமையே மலையக மக்கள் வா்வின் கொடுரத்தைப் பார்த்து அவரது மனம் பட்ட வேதனையின் வெளிப்பாடாகும். தனியாக யாழ்ப்பாணச் சூழலில் வாழாமல் நாட்டின் பல்வேறு சூழலில் வாழ்வதற்கு அவருடைய தந்தையாரின் தொழில் காரணமாக இருந்தது. இத்தகைய தொழில் காரணமாக இருந்தது. இத்தகைய தொழில் புரிந்த யாழ்ப்பணத்துத் தமிழர் பலர் தங்கள் சுயநலன்களை மையமாக வைத்தே இயங்கி இருக்கின்றனர் என்பதை பேராசிரியர் வலன்ரைன் டானியல் Fluid Signs என்ற நூலில் குறிப்பிடுகிறார். மலையக மக்கள் கொடுங்குளிரில் மலை உயர்ந்த மாலைகளில் ஏறி தேயிலைக் கொழுந்து பறித்தும், செடிகளைக் ''கப்பாத்து'' செய்து ''லயன்களில்'' அடைபட்டு சுகாதர மற்ற வாழ்வு வாழ்ந்தும், கணவன், மனைவி இருவர் உழைப்பும் குடும்ப வயிற்றுப்பசி போக்கக்கூடப் போதாத சம்பளம் பெறும் மக்களின் அவலங்களை நேரடியாக அவதானித்து மனம் கொந்தளித்த இளைஞனான லோகேந்திரலிங்கம் அம்மலையகச் சிறுவர், கல்வியின்றித் துன்பப்பட்டதையும் கல்வியூட்ட வந்த யாழ்ப்பாணத்து ஆசிரியப் பெருந்தகைகள் சிலர் மலையகச் சிறுவர்களை வீட்டு வேலைக்காரராக தாம் வைத்திருந்ததுடன் தம் சொந்தங்களுக்காகக் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் அனுப்பி வைத்ததும் கண்டு மன அவதிப்பட்ட லோகேந்திரலிங்கம் மலையன்பன் என்ற புனைபெயரில் தன் கவிதைகளுக்கு உள்ளுடன் சேர்க்கும் களப்பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பல்துறைச்சங்கம் கொண்ட புலமையாளராக தன்னை ஈடுபடுத்தவும் இவ்அனுபவங்கள் உதவின. ஆற்றாமையும் துள்ளல்களும் வெளிவந்தன. முறைப்புப் பெற்றன.

தான் முதன் முதல் எழுதிய கவிதையை இரை மீட்கும் போது நொந்துபோன விளிம்புநிலை மக்களை மாத்திரமின்றி வளர்ப்புப் பிராணிகள் மீதும் பிரியமாக இருந்தமை பற்றிய கதை ஒன்று கூறி மறி ஒன்று குட்டி போட்டுப் பின்பு இறந்ததாகவும் அந்தக் குட்டிகள் வயிற்றிலிருக்கும் போது அவற்றை உனக்கு, எனக்கு எனப்போட்டி போட்டு பங்கு கேட்டவர்கள் குட்டி போட்ட ஆடு இறந்தபோது அதன் இறப்புப்பற்றி ''இழவு'' விசாரிக்க வராமையால் அவர்கள் மீது கோபமுற்று இருந்த நிலையை

கவிதையில் கொட்டிக் கோபத்தைக் கக்குகிறார் கவிஞர். குழை ஒடித்து வந்து ஆட்டுக்கு கொடுத்து வாஞ்சையுடன் வளர்த்து அதில் வைக்கும் அன்பால் பலரும் வளர்த்த மிருகங்களைக் இறைச்சிக்காக கொல்லக் கொடுக்க மாட்டார்கள்.

"... எனது வீட்டு ஆடு
நேற்று வீழ்ந்து இறந்த போது
அநுதாபம் தெரிவிக்க வந்த வரிசையில்
இருவரைத் தேடினேன்.
வளர்ந்த பின் எனக்கென்று
எனக்கேட்ட அயல்வீட்டு உறவினர்
அங்கு வரவேயில்லை"

எனச் சிரித்திரனில் இளைஞனாக இருந்த சமயம் எழுதினார். இப்படியான கவிதை சமூகத்தவரின் பொருள் முதல்வாதச் சிந்தனைகளைக் கண்டிப்பனவாகவும் சமூக உணர்வும், உயிர் ஓம்பும் குமுமங்களின் செயலைக் கண்டிப்பதாகவும் அமைகின்றது. எழுத்தாளனின் கைங்கரியம் என்ன என்பதும் இங்கு புனாகின்றது.

தினக்குரல் தொடக்கி வைத்த "கருணைப்பாலம்" என்ற நிறுவனம் உதயன் பத்திரிகையின் கொள்கையால் இன்று வன்னியில் பாதிக்கப்பட்ட விதவைகளை யாழ்ப்பாணத்தில் மீள்குடியமர்த்தி அவர்களுக்கான வாழ்வாதார வழிகளைச் செய்ய வழிவகுக்கும் கைங்கரியத்தையும் செய்து வருகின்றது. அண்மையில் வன்னி மக்களின் அத்தியாவசிய தேவையான "அம்புலன்ஸ்' என்ற நோயளர்களை மருத்துவமனைக்கு விரைவாக எடுத்துச் செல்லும் ஊர்தி ஒன்றைக் கொள்வனவு செய்ய பணம் சேர்த்து உதவியுள்ளமை விளிம்புநிலை மக்கள் மீது கெணர்ட அன்புப்பணியாகும். எங்கள் மக்களுக்கான சேவை இலட்சக்கணக்கான டொலர்களை எயர்கனடா சென்ரில் கொட்டி முடக்குவதல்ல. மக்கள் கால்கள், கைகள் இழந்து, உழைத்துக் குடும்பங்களைக் காத்தவர்களை இழந்து ஏதிலிகளாக அல்லற்படுபவர்கள் மேல் கருணை காட்ட வேண்டும். பல்கலைக்கழகம் கிடைத்தும் படிப்பைத் தொடர முடியாத நிலையில் தவிக்கும் இளையோர்கள் பற்றிச்சிந்திக்க வேண்டும். இப்படியாக சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள மக்கள் தேவைகளை முன்னிறுத்தும் உணர்வுகளுடன் தன்னை இணைத்துக் கொள்ளும் பண்பு லோகேந்திரலிங்கத்திடம் காணப்படுவது மாக்சிஸ சிந்தனையாளர்பால் ஈர்க்கப்பட்ட பண்பினாலாகும். அண்மையில் காலம் சென்ற தோட்டத்தொழிலாளரின் இரட்சகராக இருந்த தொழிற்சங்கவாதி இராமையாவால் ஈர்க்கப்பட்டவர் இவரது அண்ணன் மகேந்திரம். சாதி, மதம், கடந்து தமிழரிடம் பொது நலப்பண்புகளை வளர்த்தெடுக்கும் பணியில் லோகேந்திரலிங்கம் முன்னிற்பதைப் பலரும் அறிவர். அதற்குத் துணைபோகும் அவர் மனைவி பாப்பாவின் இதயமும் பிள்ளைகளின் பண்பும் மெச்சக்கூடியது. லோகேந்திரலிங்கத்திற்கு என்னை யாரென்று கூடத் தெளிவாகத் தெரியாத காலத்தில் நான் கனடா வந்த புதிதில் இற்றோபிக்கோவில் வாகன வசதிகள் குறைந்த பகுதியில் கீழ்தள வீடொன்றில் வாழ்ந்த போது ஒரு தமிழ் நிகழ்ச்சியின் பின் வீடு செல்லும் வழி அறிய முயற்சித்த போது தானாக முன்வந்து எனக்கு அன்றைய இரவில் வீடு செல்ல உதவியதை நான் என்றும் நினைவு கூருவேன். பெண்களும் குழந்தைகளும் படும்துயரில் இரவு பகல் பாராது நான் உதவியதை தானாகவே நேரில் கண்டு ஊகித்து என்னை அணுகிய போது நான் முன்பு கவிதைகள் வாசித்துக் கொண்டிருந்த மலையைன்பனின் மனிதாபிமானம் பற்றிய பற்று மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. ஏதிலிகளுக்கும் நொருங்குண்ட இதயங்களுக்கும் லோகேந்திரலிங்கத்தின் இதயத்தில் ஏதோ ஒரு நெருடல் மனிதாபிமானம் நோக்கிப் பயணிக்க வைத்துள்ளது. இது மலையன்பனின் வாழ்வனுபவத்தால் ஏற்பட்டதொன்மம், அதாவது உணர்வின் விளைவு.

"நான் எப்பவும் கும்பிடும்போது ஐயா, அம்மா பெயர் சொல்லித்தான் கும்பிடுவேன்" என்று தமிழரின் கூட்டுமனப் பேணவைக்கைக் கொண்டமை பற்றிச் சிலாகித்துக் கொள்வார். தமிழரின் கூட்டுமனப் பண்பு புலம்பெயர் சமூக அரங்கில் நலிவுற்றுச் செல்வதை மையப்புள்ளி இன்று பலகிளைகளாக இயங்கும் பல நிறுவனங்கள்

நினைவுறுத்துகின்றன. ஒரு குறிக்கோளை இலக்காகக் கொண்டு இயங்குவதன்றிப் பலரும் பல்வேறு குறிக்கோள்களைக் கொண்டு கூட்டுமனப்பாண்பைக் குளிதோண்டிப் புதைக்கின்றனர். லோகேந்திரலிங்கத்திடம் தமிழ் மக்கள், மரபு விழுமியம் காக்கும் பொதுமைக் கூட்டுமனம் காண்பதை அவர் பத்திரிகையிலும், செய்யும் சமூக சேவைகளிலும் காணலாம். தமிழ் அகதிகளுக்கு அவர் நேரில் சென்று உதவியமையைப் பலரும் அறிவர்.

இஸ்லாமியருடன் தோழோடு தோள் நின்று அவர்கள் தமிழுக்கு ஆற்றிய பண்புகளை மனதார நன்றிகூறும் லோகேந்திரலிங்கம் அவர்களில் பல இலக்கியவாதிகளுடன் நண்பனாக இருந்ததை நான் அறிவேன். சாதி – மத – சமூக வர்க்க வேறுபாடுகள் பாராட்டாது சமமாக மக்களைப் பார்க்கும் பார்வையும் அந்நியோன்யமாக வாஞ்சையுடன் பழகும் பழக்கமும் பலரும் லோகேந்திரலிங்கத்திடம் காண்பர். அவர் நீதி இல்லாமல் பாரபட்சம் காட்டுவோரையும் கண்டிக்கவும் தவறுவதில்லை. விளிம்புநிலை மக்கள் மீது கூடுதலாக அன்பு காட்டும் குணம் அவரை சகோதரத்துவ அல்லது தோழமை ஆளுமை கொண்ட ஒருவராக ஆக்கியுள்ளது.

பத்திரிகைத் துறையில் ''உதயன்'' கனடாவில் சாதனை படைத்துள்ளது. வெள்ளிக்கிழமைகளில் உதயன் பத்திரிகையை எதிர்பார்த்து நிற்கும் தமிழ் மக்கள் பலர். பல்வேறு விடயங்களைத் தாங்கி புலம்பெயர்ந்தோருக்கு அறிவுத்தேடலுக்கான விருந்தாக இருந்து வந்துள்ளது. புலம்பெயர்ந்த தமிழரின் இருப்பைக் காட்டுவதற்கும் பத்திரிகைகள் முக்கியமான ஆதாரங்களாகும். சாதாரண மக்களுக்கு புலம்பெயர் நாடுகளிலும் தாயத்திலும் நடக்கும் அநீதிகளை உதயன் ஆசிரியர் தலைப்பு எடுத்தியம்பி வந்திருக்கின்றது. புலம் பெயர்ந்த நாட்டில் மட்டுமன்றி தமிழ்கூறும் நல்லுலகிலும் உதயன் தன் தடத்தைப் பதிப்பதில் முன்நின்று உழைத்து வருகின்றது. இலங்கையிலும் பெரும் பத்திரிகைகள் என்று கூறப்படுபவையும் பக்கச்சார்பாக நின்று ஒரு பகுதி மக்களின் உண்மைகளையும் அவலத்தையும் மூடி மறைப்பது வெகுவாக நடைபெறுகின்றது. வளர்முக நாடுகளிலும் அதே கதிதான். நுவாண்டாப் படுகொலைகளும் வன்னி முள்ளிவாய்க்கால் படுகொலைகளும் சர்வதேசக் கண்களிலோ ஐக்கிய நாடுகள் பிரதிநிதி பால்கிமோன் கண்களிலுமோ படவில்லை. சுய இலாபங்களுக்காகவும் தாம் சார்ந்தோர் உயர்வுக்காகவும் விலைபோகும் பத்திரிகைகளும் வெகுசன தொடர்புச் சாதனங்களும் மலிந்த உலகில் உண்மையை மழுப்பாது சொல்லும் போக்கை உதயன் பத்திரிகையின் ஆசிரியர் செய்தியில் அவதானிக்கலாம்.

''இலங்கையின் தமிழினக் குழுமம் பற்றியும் அந்தக் குழுமத்தினுள் வரும் சமூகங்கள் (யாழ்ப்பாணச் சமூகம், மட்டக்களப்புச் சமூகம், மலையகச் சமூகம் எனப் பெரும்படியாக இவற்றை வகுத்துக் கொள்ளலாம்). சிறப்பாய்வு செய்யும் சமூகச் சிந்தனையாளர்கள் நம்மிடையே மிகமிகக் குறைவு'' எனப் போராசிரியர் சிவத்தம்பி ''தமிழ் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டு பிடிப்பும்'' என்ற நூலில் கூறிச் செல்வது பற்றி லோகேந்திரலிங்கம் சிந்தித்து வருவது அவரது படைப்புக்களிலும் பத்திரிகை ஊடறுக்கும் சமூக விடயங்களிலும் அவதானிக்கலாம். சமூக மேலாண்மைக் கூறுகளைக் கண்டிக்கும் போக்கையும் காணலாம். பண்பாட்டின் ஒரு தளத்தில் அமையும் குறியீடு பல்வேறு நிலைகளில் பிறதளங்களில் வெளிப்படும் தன்மையை லோகேந்திரலிங்கத்தின் முயற்சிகளால் ஆக்கப்பட்ட படைப்புக்களும், பத்திரிகையும் சமூக முன் நிறுத்தற் செயற்பாடுகளும் சமூக விழுமியங்களை உணரவும் வெளிப்படுத்தவும் முனைப்புறுத்துகின்றன.

லோகேந்திரலிங்கத்தின் அகவை அறுபதை தாண்டி நூறாக ஆகுவதற்காகவும் மக்கள் சேவை பெருகுவதற்காகவும் உளமார்ந்த வாழ்த்துகள்.

**முனைவர் பார்வதி கந்தசாமி**

## வாழ்க வளமுடன்!



உதயன் பத்திரிகை இன்று ஓர் விருட்சம். அதன் பிரதம ஆசிரியர், அதன் நிர்வாகி லோகேந்திரலிங்கம் இன்று எங்கள் மத்தியில் ஓர் ஆலமரம். அவ்ஆலமரத்தின் கீழ் பலர் வந்து தங்குவர். அவர்களுக்கு நிழல் பரப்பி ஆறுதல் கொடுக்கும் ஆலமரம் போல் அண்ணன் லோகேந்திரலிங்கம் அவர்களும் தன் அண்டை வருவோரை ஆதரித்து தேவையானவற்றை வழங்குவதில் முன் உதாரணமாய் திகழ்கின்றவர். அவர் அறுபது வயதைடைந்து மணிவிழா எடுக்கும் இவ்வேளையில் கலாபம் தொலைக்காட்சியின் ஆரம்ப காலத்தில் அவர் செய்த உதவிகளையும் எண்ணிப் பார்த்து மகிழ்கின்றோம்.

வாழ்க நூறாண்டு! வாழ்க பல்லாண்டு!

அன்புடன் வாழ்த்தும்<br>
**சு. ஸ்ரீனிவாசன்**<br>
கலாபம் தொலைக்காட்சி

# மணிவிழா குழு

கவிநாயகர் கந்தவனம்

அதிபர். பொ. கனகசபாபதி

மனுவல் ஜேசுதாசன்

எஸ். ஜே. சோதி

த. சிவபாலு



விழாநாயகரின் அருமைப் பெற்றோர்கள்



விழா நாயகனின் திருமணப் பதிவு 1982ம் ஆண்டு



விழா நாயகனின் திருமணத்தின் போது



விழா நாயகன் தனது மாமனார் சத்தியசீலன் அவர்களோடும் குடும்பத்தோடும்



விழா நாயகன் தனது சகோதரர்கள் குடும்பத்துடன்



விழா நாயகனின் தம்பி சிவராமன் குடும்பத்தினர் வவுனியாவில்



தனது புத்திரச் செல்வங்களின் பிறந்தநாளின் போது



தனது புத்திரச் செல்வங்களோடு விழா நாயகன்



இரண்டாவது புதல்வி ஜனனியின் ருதுசாந்தி வைபவம்



பூங்கா ஒன்றின் அழகிய குடும்பம் அமர்ந்திருக்கிறது



விழா நாயகனின் மூத்த தமையனார்
மகேந்திரன் குடும்பம் - கொழும்பு



விழா நாயகனின் இரண்டாவது தமையனார்
குடும்பத்துடன் ஜேர்மணி



சிவஸ்ரீ சோமஸ்கந்த குருக்களோடு விழாநாயகன்



விழா நாயகன் முன்னாள்
இந்திய பாதுகாப்பு அமைச்சருடன்



ATN தொலைக்காட்சி சான் சந்திரசேகர்,
நண்பர்களுடன்



பின்னணிப் பாடகர் ஹரிகரனுடன்



மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
V. நவரட்ணம் மற்றும் நண்பர்களுடன்




கவிப்பேரரசு மற்றும் நண்பர்களுடன்



விழா நாயகன் கனேடிய பிரதமர்
ஸ்ரீபன் காப்பர் குடும்பத்துடன்



விழா நாயகன்
குடிவரவு அமைச்சர் ஜேசன் கனியுடன்



உதயன் விழாவின் போது








விழாநாயகனின் 60வது பிறந்தநாளின் போது



சங்கீதமேதை பாலமுரளி கிருஷ்ணாவுடன்



விழா நாயகனுடன் நடிகர் வடிவேலுவுடன்



விழா நாயகனுடன் நடிகர் சிவகுமார்



மகாராணியின் விருது பெறும்போது




விழா நாயகனுடன் நடிகர் ஸ்ரீகாந், சாகீர் உசேன்,



கொழுமபு தமிழ சங்கததில விழாநாயகனின புததக வெளியீடடின போது



விழாநாயகனின் 50வது பிறந்தநாளின் போது


தித்திக்கும் தாத்தாவின்
சிறப்பான 60ஐ வாழ்த்துவோம்
சிரசு நிமிர்ந்த சீரிய நடையும்
செந்தமிழ் பேச்சும், எழுத்தும்
வீரிய மூச்சும்
எம்மிடம் காட்டும் அன்பும் அளப்பெரியது..
வாரம் தவறாது வரும் உதயனைப் போல
நீங்களும் நம் இடம் தேடி வந்து
நால்வருக்கும் உவகை ஊட்டி
தவறாமல் கரமும் நீட்டி எம்மோடு உலா வருவீர்கள்
மற்றவரை வாழ்த்தி மகிழ்ந்திடச் செய்யும்
உங்கள் இனிய உள்ளத்தை
இன்று நாங்கள் கனிவாக வாழ்த்துகின்றோம்
எங்கள் தாத்தாவிற்கு அன்பான இனிய வாழ்த்துக்கள்
ஜோஸ்னா, ஜஸ்வின், தியானா, ஜாஸ்லின்



JJPRINT 416.298.9322